# காங்கேசன் முரசு - 03

## தேசிய வாசிப்பு மாதம்
## ஒக்டோபர் - 2022
## சிறப்பு மலர்




வெளியீடு

பொதுநூலகம் - காங்கேசன்துறை

வலிகாமம் வடக்குப் பிரதேச சபை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"காங்கேசன் முரசு உலகெங்கும் ஓங்கி ஒலிக்கட்டும்...."



# காங்கேசன் முரசு - 03

## தேசிய வாசிப்பு மாதம்
## ஒக்டோபர், 2022
## சிறப்பு மலர்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




| | | |
|---|---|---|
| மலர் விபரம் | :- | காங்கேசன் முரசு – 3 |
| வெளியீடு | :- | மலர் வெளியீட்டுக் குழு உப அலுவலகம் பொது நூலகம் - காங்கேசன்துறை, வலிவடக்கு பிரதேசசபை. |
| பதிப்பு | :- | 2022 |
| பக்கங்கள் | :- | *i – vi* , 1 - 71 |
| அச்சீட்டு பெறுமதி | :- | **720/-** வாசகர்களுக்கு 480/- |
| அச்சிட்டோர் | :- | சந்நிதியான் பிறிண்டேர்ஸ் கே.கே.எஸ் வீதி, மல்லாகம். |




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தமிழ்மொழி வாழ்த்து



வாழ்க நிரந்தரம் வாழ்க தமிழ்மொழி
வாழிய வாழியவே!
வான மளந்த தனைத்தும் அளந்திடும்
வண்மொழி வாழியவே!
ஏழ்கடல் வைப்பினுந் தன்மணம் வீசி
இசைகொண்டு வாழியவே!
எங்கள் தமிழ்மொழி! எங்கள் தமிழ்மொழி!
என்றென்றும் வாழிய வே!
சூழ்கலி நீங்கத் தமிழ்மொழி ஓங்கத்
துலங்குக வையக மே!
தொல்லை வினைதரு தொல்லையகன்று
சுடர்க தமிழ்நாடே!
வாழ்க தமிழ்மொழி வாழ்க தமிழ்மொழி
வாழ்க தமிழ்மொழியே!
வானமறிந்த தனைத்துமறிந்து
வளர்மொழி வாழியவே!

மகாகவி சுப்பிரமணியபாரதியார்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## உள்ளே :-


1. **ஆசிச் செய்திகள்**
   - வீனியவரை ஸ்ரீ இராஜராஜேஸ்வரி பிரதமகுருக்களின் ஆசிச் செய்தி
   - அமெரிக்கன் சிலோன் மிசன் திருச்சபை ஏழாலை தெற்கு அருட்தந்தையின் ஆசிச் செய்தி
2. **வாழ்த்துச் செய்தி**
   - கௌரவ தவிசாளரின் வாழ்த்துச் செய்தி
   - பிரதேசசபைச் செயலாளரின் வாழ்த்துச்செய்தி
   - பொறுப்பதிகாரியின் வாழ்த்துச் செய்தி
   - தேவச்சந்திரன் ஜெயபாலசிங்கம் அவர்களின் வாழ்த்துச்செய்தி
   - காங்கேசன்துறை அபிவிருத்திச்சபை தலைவரின் வாழ்த்துச்செய்தி
3. **என்னுரை**
4. **வளம் கொண்ட காங்கேசன்துறை உபஅலுவலக பிரதேசம்**
5. **புகையிரத நிலையம்**
6. **நடிகமணி வி.வி.வைரமுத்து**
7. **நலிவுற்றுச் செல்லும் கலைகள்**
8. **காங்கேசன்துறைப் பட்டினம்**
9. **இரவோடு இரவாக**
10. **பெரியோர்களே இளையவரின் வழிகாட்டி**
11. **போதைப் பொருள் பாவனையின் சீரழிவும் அதன் விழிப்புணர்வும்**
12. மயிலிட்டி காசநோய் வைத்தியசாலை
13. பாலியல் துஷ்பிரயோகங்கள்
14. யா/நடேஸ்வரக் கல்லூரி
15. **IS SOCIAL MEDIA A CHALLENGE TO READING? DOES IT AFFECT STUDE**
16. மரம் வளர்ப்போம் பயன்பெறுவோம்
17. பிளாஸ்ரிக் பாவனையிலிருந்து விடுபடுவோம்
18. வாசிப்பை ஊக்குவித்தல்
19. இன்றைய மாணவர்களின் தொலைபேசி பாவனை கல்வியை சீரழிக்கிறதா? சீர்ப்படுத்துகிறதா?
20. மொழியும் பண்பாடும்




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

21. போதை ஒழிப்பு
22. போதையும் மீளெழுச்சியும்
23. உலகினிலே உயர்ந்த ஆசான் நூலகமே
24. பாலின சமத்துவமும் மனித மகத்துவமும்
25. இளைஞரை விழுங்கும் போதை
26. மரம் வளர்ப்போம்
27. போதை ஒழிப்பு
28. நூலகப் பாவனையின் முக்கியத்துவம்
29. நூலகப் பாவனையின் முக்கியத்துவம்
30. என் அம்மாவுக்கு
31. பெரியோரை கனம் பண்ணுவோம்
32. நூலகப் பாவனையின் முக்கியத்துவம்
33. நூல் பற்றிய பொன்மொழிகள்
34. வலிகாமம் வடக்கு பிரதேசசபையின் தலைமை அலுவலகத்தில் பெற்றுக்கொள்ளக்கூடிய சேவைகள்
35. எமது சபையின் உப அலுவலகங்களில் பெற்றுக்கொள்ளக்கூடிய சேவைகள்
36. இதயம் கனிந்த நன்றிகள்

காங்கேசன்துறை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஆசிச்செய்தி



தர்மம் குறைந்து அதர்மம் தலைதூக்கி வரும் இக்கலியுகத்தில் மானிடர்கள் தம்மைத் தாமே அழித்துக் கொள்ளும் காமம் போதை போன்றவற்றிற்கு அடிமையாகி நல்வாழ்க்கையை வாழாது வீணாக்கி வருகிறார்கள். இதற்கெல்லாம் அடிப்படைக் காரணம் என்ன என்று தீர சிந்திப்போமானால் தரமான வாழ்க்கைக்கு ஏற்ற கல்வியைப் பெறாமையே ஆகும்.

"வாசிப்பதால் மனிதன் பூரணமடைகிறான;"என்ற பழமொழி உண்டு. அதிலும் தரமான வாழ்க்கைத் தத்துவங்களை விளங்கிக்கொள்ளக் கூடிய நல்ல நூல்களை தேடி வாசிக்க வேண்டும். அதற்கு நல்ல நூலகங்களும் துணை செய்யும்.

அந்த வகையில் உதவுகின்ற நூலகங்களில் ஒன்று தான் வலிகாமம் வடக்கு பிரதேசசபை காங்கேசன்துறை பொது நூலகமாகும். இந்நூலகத்தினால் வெளியிடப்படும் காங்கேசன் முரசு 3 என்ற நூல் சிறப்புற அமையவும் தொடர்ந்து நூல்கள் வெளிவரவும் எல்லாம் வல்ல வீனியவரை ஸ்ரீ இராஜராஜேஸ்வரி அம்பாளின் அருட்கடாட்சம் கிடைக்க பிரார்த்தித்து நல்லாசிகளைத் தெரிவிப்பதில் மகிழ்வு அடைகின்றேன்.

**சர்வே ஜனாகர சுகினோ பவந்து**

**சிவப்பிரம்மஸ்ரீ பாலகங்காதரக்குருக்கள்**
**வீனியவரை ஸ்ரீ இராஜராஜேஸ்வரி**
**அம்பாள் கோவில்**
**மாவிட்டபுரம்.**

**ஒரு நூல் நிலையம் திறக்கப்படும் போது இரு சிறைச்சாலைகள் மூடப்படுகின்றன.**

**- சுவாமி விவேகானந்தர் -**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஆசிச் செய்தி



காங்கேசன் முரசு 3 என வெளியிடப்படும் இம் மலருக்கு ஆசிச் செய்தியினை எழுதுவதற்கு எனக்கு இந்த வாய்ப்புக் கிடைத்ததையிட்டு மிகவும் சந்தோசமடைகின்றேன். இவ்வாறான ஆவணங்களை நாம் எப்போதும், எம் வரலாற்றினைப் பாதுகாக்கும் பெட்டகங்கள் என்றே கருத வேண்டும். இது போன்று 1985ம் ஆண்டு காங்கேசன்துறைக் கல்வி வட்டார அதிபர்கள் சங்கத்தினால் வெளியிடப்பட்ட "காங்கேசன் கல்வி மலர்" இன்று மிகப்பெரிய ஆவணமாகக் கருதப்படுகின்றது. காங்கேயன் முரசு 1, 2 என்ற தொடரில் மூன்றாவதையும் வெளியிட முயற்சி எடுக்கும் மலர்க்குழுவினரை நான் மனதாரப் பாராட்டுகிறேன்.

19ம் நூற்றாண்டு புரட்டஸ்தாந்து மிசன் சங்கங்களின் காலம் என வர்ணிக்கப்படுகின்றது. அமெரிக்காவில் இருந்து பாய்ந்து வந்த கல்வி வெள்ளம் தெல்லிப்பழையிலேயே முதன் முதலில் சங்கமமாகின்றது. 1816, 1820 காலப் பகுதிகளில் அமெரிக்காவில் இருந்து யாழ்ப்பாணத்துக்கு வந்த அமெரிக்கமிசன் தொண்டர்கள் அனைவரும் மிகச் சிறந்த கல்விமான்களாக விளங்கினார்கள். 1816 இல் இவர்களால் முதன் முதல் தெல்லிப்பழையில் ஆரம்பிக்கப்பட்ட ஆங்கிலப் பாடசாலை இன்று 200 வருடங்களைக் கடந்து யூனியன் கல்லூரியாக வீறுநடைபோடுகின்றது. இவ்வாறு யாழ்ப்பாணக் குடாநாட்டில் நெடுந்தீவு தொடக்கம் நாகர் கோவில் வரை 154 பாடசாலைகளை அமெரிக்கமிசன் தொண்டர்கள் ஆரம்பித்திருந்தனர். இவற்றில் ஏறத்தாழ 10 பாடசாலைகள் காங்கேயன் கல்வி வட்டாரத்தில் அமைந்துள்ளன.

இலங்கையில் இருக்கும் கல்வி வட்டாரங்களில் காங்கேயன் கல்வி வட்டாரம் மிகவும் பெருமை மிக்க புகழைக் கொண்டுள்ளது. என்பதனை இந்த ஆசிச் செய்தியில் சுட்டிக்காட்ட விரும்புகின்றேன். 1985இல் "காங்கேயன் கல்வி மலர்" என்னும் நாவலுக்கு பேராயர் எஸ்.ஜெபநேசன் அவர்கள் ஒரு கட்டுரை எழுதியிருக்கின்றார். அக்கட்டுரையினை அவர் பின்வரும் சொற்றொடருடன் நிறைவு செய்துள்ளார். "தெல்லிப்பழையின் கல்வி நிலை மிகவுயர்ந்த நிலையில் காணப்பட்டபடியினால் அமெரிக்க மிசன் தொண்டர்கள் தெல்லிப்பழைக்குச் சென்றார்களா? அல்லது இம்மிசன் தொண்டர்கள் தெல்லிப்பழைக்குச் சென்றதனால் தெல்லிப்பழையின் கல்வி நிலை உயர்ந்த நிலைக்கு மாறியதா? பேராசிரியர் சு.வித்தியானந்தன் இந்தக் கட்டுரையை விமர்சித்துப் பின்வருமாறு எழுதினார். "நான் ஜெபநேசனுக்குச் சொல்ல விரும்புவது என்னவென்றால், தெல்லிப்பழையில் கல்வியின் நிலை மிகவும் உயர்வாகக் காணப்பட்டதனாலேயே மிசன்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தொண்டர்கள் அங்கு சென்று பணியாற்றினார்கள். "ஆம் இந்த உண்மையை நாம் ஏற்றுக் கொள்ள வேண்டும். அமெரிக்கமிசன் தொண்டர்கள் கல்வியில் ஆர்வம் உள்ளவர்கள் மத்தியில் பணிசெய்வதையே அதிகம் விரும்பினார்கள்.

நீண்டகால யுத்தம் இந்தக் கல்விப் பாரம்பரியத்தை அதிகம் பாதிப்படையச் செய்தாலும் அதனை அழிக்க முடியவில்லை. கல்வியறிவு அலைமூட்டி எழுதப்பட வேண்டும். இன்று தல்செவனவுக்கு அருகில் இருக்கும் தென்னங்காணியில் இருந்து அமெரிக்கன் மிசன் தேவாலயமும், பாடசாலையும் இடமே தெரியாமல் அழிந்து போய்விட்டது. ஆனாலும் இங்கு கல்விகற்றவர்கள் வழிபட்டவர்கள் உலகம் முழுவதும் வாழ்கின்றனர். இவைகள் மீளக் கட்டப்படவேண்டும். அதிகமாக ரோஜா மலர்கள் தேவையென்றால் அதிகமான ரோஜாச் செடிகளை நாட்ட வேண்டும். அதுபோன்றே அதிகமாக அறிவைப் பெற்றுக் கொள்ள வேண்டுமானால் அதிகமான நூல்களை வாசிக்க வேண்டும். அதிகமான நூல்களை வாசிக்க வேண்டுமானால் அதிகமான நூல்களை எழுத வேண்டும். எனவே எம்முடைய அழிந்து போகாத சொத்தான கல்வி மென்மேலும் வளர வெளியிடப்படும் இந்த காங்கேசன் முரசு 3 அதிகமான உந்துதலை இளம் சந்ததிக்கும் கொடுக்கும் என்ற நம்பிக்கையுடனும் இதனை அநேகர் வாசித்தும் பயன் பெற வேண்டும் என்ற வாஞ்சையுடனும் இந்த செய்தியினை நிறைவுக்குக் கொண்டு வருகின்றேன்.

**"கல்வி மாத்திரமே அனைத்து வகையான முன்னேற்றங்களுக்கும் அடிப்படையானது"**

இக்கருத்தினை ஒருமித்த கருத்தாகக் கொண்டிருந்தவர்கள் அருட்பணி லீவை ஸ்போல்டிங் தொமஸ் ஜெபர்சன் அமெரிக்க மிசன் தொண்டர் அமெரிக்க ஜனாதிபதி.

நன்றி

**அருட்பணி A.S.தேவகுணானந்தன்**
**அருட்பணியாளர்**
**அமெரிக்கன் சிலோன் மிசன் திருச்சபை**
**ஏழாலை தெற்கு.**

**என் அளவற்ற போதைக்கு மருந்து தினமும் இரண்டு புத்தக வாசிப்பு**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தவிசாளரின் வாழ்த்துச் செய்தி



தேசிய வாசிப்பு மாதத்தை முன்னிட்டு இவ் ஆண்டும் பலரது சிந்தனைக்கு செயல் வடிவம் கொடுத்து அவற்றை வெளிர்கொணர்ந்து ஏனையோரது சிந்தனைகளுக்கும் எடுத்துச்செல்லும் ஊடகமாக காங்கேசன் முரசு சஞ்சிகை வெளிவருகின்றமை சிறப்புக்குரியதொன்றாகும்.

ஒரு நாட்டில் பாடசாலைகள், சமயஸ்தலங்கள் அமைப்பது எவ்வளவு முக்கியமோ அதே போல் நூலகங்கள் அமைப்பதும் மிகவும் அவசியமானதொன்றாகும். ஒரு இனத்தை அழிக்க வேண்டும் என்றால் முதலில் அவர்களின் கல்வியையும் நூலகங்களையுமே அழிக்க வேண்டும் என்றே துணிவர்.

இன்றைய நவீன உலகின் அதிகரித்த தொழில் நுட்ப பயன்பாட்டால் நூல்களை வாசிக்கும் ஆர்வம் வெகுவாக குறைந்து வருகின்றது. வாசிப்பு பழக்கத்தை அதிகரிக்கும் போது தான் பொது அறிவோடு மொழி அறிவையும் அதிகரித்துக்கொள்ளக்கூடியதாக இருக்கும். ஒரு சமூகத்தினுடைய அறிவு கருவூலங்கள் நூலகங்கள் என்றால் அது மிகையல்ல. ஒரு நூலகமே அந்த சமூகத்தை வழி நடத்தவும் நிலை நிறுத்தவும் ஆதாரமாய் உள்ளது.

கல்வி என்ற பெரும் கடலை தனக்குள் தேக்கி வைத்துள்ள நூலகங்கள் தன்னை தேடி வரும் வாசகர்களின் அறிவு பசியினை போக்கி அவர்களை பூரணமான மனிதர்களாக சமூகத்திற்கு தருகின்றன. அதாவது பொறுமை, தேடல், ஆழமான வாசிப்பு, விவேகம், எழுத்தாற்றல், கேள்வி, ஞானம், படைப்பாற்றல் போன்ற உயர்ந்த திறன்களை இந்த நூலகங்கள் வழங்கும் பெருமை உடையன. பெருமைகள் பல மிகுந்த நூலகங்களை மனிதர்கள் சரியாக பாவிக்க வேண்டும். ஒவ்வொரு நாடுகளினுடைய பெருமையும் சிறப்பும் அந்த நாட்டு மக்களுடைய கல்வி அறிவிலேயே தங்கியுள்ளது. கல்வி அறிவு உயர்வதனால் அந்த நாடு சிறந்த வாழ்க்கை தரத்தை அடைந்து கொள்கின்றது.

ஒவ்வொரு வருடமும் இச் சஞ்சிகை காங்கேசன்துறை மண்ணை பறை சாற்றி மேலும் சிறப்பாக வெளி வர வேண்டும் என்றும் வாழ்த்தி, இச்சஞ்சிகை அனைவருக்கும் பயனுள்ள முறையில் அமையவேண்டும் என்பதுடன் இச் சஞ்சிகை வெளியீட்டிற்கு பங்காற்றிய நூலகப் பொறுப்பாளர், உத்தியோகத்தர்கள், ஊழியர்கள் அனைவருக்கும் மனமார்ந்த நன்றிகளையும் பாராட்டுக்களையும் தெரிவித்துக் கொள்கின்றேன்.

**சோமசுந்தரம் சுகிர்தன்,**
**தவிசாளர்,**
**வலிகாமம் வடக்குபிரதேச சபை,**
**காங்கேசன்துறை**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# எமது பிரதேசசபை செயலாளரின் வாழ்த்துச் செய்தி



மக்களின் அறிவுப் பசியை போக்குவதற்கு ஏதுவாக காங்கேசன்துறைப் பொதுநூலகத்தின் வாசிப்பு மாத வெளியீடாக வரும் **"காங்கேசன் முரசு 3"** எனும் நூலிற்கு வாழ்த்துச் செய்தி வழங்குவதில் பெருமிதம் அடைகிறேன்.

மக்களை நல்வழிப்படுத்தி நற்பிரஜையாக உருவாக்குவதில் நூலகங்கள் பெரும் பங்காற்றுகின்றன. அந்த வகையில் அருகிச் செல்லும் வாசிப்பு பழக்கத்திற்கு விழிப்புணர்வை ஏற்படுத்தி மீளக்குடியமர்ந்த பிரதேசங்களின் மழுங்கடிக்கப்பட்ட கல்வியை மீண்டும் சீர்தூக்கி நிறுத்துவதற்கு இவ் நூலகம் ஒரு அத்திவாரமாக விளங்குவதோடு தொடர்ந்து வரும் காலங்களிலும் பல அறிவுசார் கருத்துக்களை உள்ளடக்கிய நூல்களை வெளியிட வாழ்த்துகிறேன்.

அத்துடன் இம் மலர் உருவாக்கத்திற்கு அனுமதியளித்த கௌரவ தவிசாளர் மற்றும் குறுகிய காலத்தில் அர்ப்பணிப்புடன் சேவையை வழங்கிய காங்கேசன்துறை உப அலுவலக பொறுப்பதிகாரி, நூலகப் பொறுப்பாளர் மற்றும் உத்தியோகத்தர்கள், ஊழியர்கள் அனைவரது ஒத்துழைப்புக்கும் நன்றி நவில்வதோடு காலத்தின் மாற்றத்திற்கேற்ப சேவை வழங்கலுக்கான மதிநுட்பத்தைக் கொண்டமைந்து பலரது உள்ளங்களையும் கொள்ளைகொண்டு உவந்து இழுக்கின்ற இக் **காங்கேசன் முரசு 3** மலரானது மலர்ந்து மணம் வீசி புகழ்பரப்ப எனது நல்வாழ்த்துக்களை தெரிவித்துக் கொள்கின்றேன்.

**திரு.சுந்தரேஸ்வரன் சுதர்ஜன்**
**செயலாளர்**
**வலிகாமம் வடக்கு பிரதேசசபை**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உபஅலுவலகப் பொறுப்பதிகாரியின் வாழ்த்துச் செய்தி



புவியியல் ரீதியாக மாணிக்கத் தீவின் தலையாக விளங்கும் **"வலிவடக்கின் மணிமகுடம் காங்கேசன்துறை"** மண்ணில் 32 ஆண்டுகளுக்கு பின் தனது 3வது காங்கேசன்முரசு சஞ்சிகையானது தேசிய வாசிப்பு மாதத்தை முன்னிட்டு இவ்வருடமும் வெளிவருவதில் பெருமை கொள்கிறோம்.

1வது நாகரிகமான மொசப்பத்தெனியா நாகரீகத்தில் தோன்றிய நூலக கட்டமைப்பானது பல நூற்றாண்டுகளைக் கடந்து இன்றுவரை தனது சேவையாற்றி வருகிறது. **"யாதேனும் நாடாமல் ஊராமல் என்னொருவன் சார்துணையும் கல்லாதவாறு"** என்ற குறளினூடாக வள்ளுவர் **கல்வியாளனுக்கு எந்த நாடும் சொந்த நாடு எந்த ஊரும் சொந்த ஊர்** ஆகுமாம். ஆகையால் இத்தகைய சிறப்பு வரும் போது யாரும் உயிருள்ள வரை கல்விகற்றல் வேண்டுமாம். எனவே நாமும் சிறந்த நூல்களைக் கற்று எமது அறிவுக் கடலைப் பெருக்கிக் கொள்வோம்.

நூலகம் என்பது அறிவுச் செல்வத்தின் களஞ்சியம் என்பர், கடந்த காலத்தையும் நிகழ்காலத்தையும் இணைத்து வைக்கும் சிந்தனைப் பாலம். இங்கே வகை வகையான நூல்கள், சஞ்சிகைகள், பத்திரிகைகள், மலர்கள் என பலவற்றைக் காணலாம். இவை ஒவ்வொன்றுமே காலத்தின் பதிவுகளாக எம்மவர் வாழ்க்கையின் சாட்சிகளாக அமைவதை யாரும் மறக்க முடியாது.

இன்றைய நூலக சேவையானது முன்னரிலும் பார்க்க கோட்பாட்டு ரீதியாகவும், செயல் ரீதியாகவும் மாற்றமடைந்து வந்துள்ளது. பாடசாலை மாணவர்களுக்கு கல்விக்கூடமாகவும், இளைஞர்களுக்கு தொழில் உலகமாகவும், அன்றாட வாழ்க்கைக்கு தேவையான அடிப்படை தகவல்களை வழங்கும் பொதுஜன பல்கலைக்கழகமாகவும் நூலகங்கள் விளங்குகின்றன. எனவே தான் பொது நூலகங்களையும், வாசிகசாலைகளையும் உள்ளூராட்சி மன்றங்கள் நடாத்தி மனித வாழ்க்கைக்கு தேவையான அறிவையும் ஆற்றலையும் வளர்த்து வருகின்றன. இவ்வகையில் காங்கேசன்துறை பொதுநூலகமும் தனது பணிகளை மேற்கொள்ளத் தவறவில்லை.

அடுத்த வருடமாவது தனது சொந்தக் காணியில் தனது மலரை வெளியிட வேண்டும் என்ற ஆவலோடும் அவாவோடும் எனது இந்த வாழ்த்துரையை நிறைவு செய்கின்றேன்.

**திரு.பசுபதிநாதன்.மகேசன்**
**பொறுப்பதிகாரி**
**வலிகாமம் வடக்கு பிரதேசசபை**
**உப அலுவலகம்,காங்கேசன்துறை**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வாழ்த்துச் செய்தி



சைவமும் தமிழும் சிறந்தோங்கும் கோயிற்கடவை என சிறப்பித்துக் கூறப்படும் காங்கேசன்துறையில் அமையப் பெற்ற வலிகாமம் வடக்கு பிரதேச சபையின் பொதுநூலகத்தால் வெளியிடப்படும் **காங்கேசன் முரசு 3** இற்கு வாழ்த்துத் தெரிவிப்பதில் மகிழ்ச்சியடைகின்றேன். சிறப்பு மிக்க எம் ஊரில் பல வரலாற்றுப் பொக்கிஷங்களில் காங்கேசன்துறை பொதுநூலகம் ஒன்றாகும். எனவே இவ் நூலகத்தை பாதுகாப்பதிலும் காங்கேசன்துறையின் அபிவிருத்தியிலும் எமது சோதிப்பிள்ளை அறக்கட்டளை பக்கபலமாக நிற்கும் என்பதை கூறிக் கொண்டு காங்கேசன் முரசு 3 சிறப்புற மனதார வாழ்த்துகின்றேன்.

**இப்படிக்கு**
**தேவச்சந்திரன்**
**ஜெயபாலசிங்கம்**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வாழ்த்துச் செய்தி



பலநூற்றாண்டுகளுக்கு முன்பே காயாத்துறை என்ற பெயருடன் வணிகத்தில் சிறந்து விளங்கிய துறைமுக நகரான காங்கேசன்துறையில் அமையப் பெற்ற வலிகாமம் வடக்கு பிரதேசசபையின் பிரதான பொதுநூலகத்தினால் வெளியிடப்படும் காங்கேசன் முரசு 3 மலருக்கு வாழ்த்துச் செய்தி அனுப்புவதில் மிக்க மகிழ்ச்சி அடைகிறேன். தரை வான் கடல் மார்க்கத்தின் வடமாகாணத்தின் வாசல் கதவாக திகழும் காங்கேசன்துறையின் வரலாற்று சிறப்புக்களையும் கற்றறிந்தோரின் சிறப்புக் கட்டுரைகளையும் தாங்கி முரசு மூன்றல்ல மூவாயிரம் முரசுகளை தாண்டி மலர வேண்டும் என எல்லாம் வல்ல இறைவனை வேண்டி மனதார வாழ்த்துகிறேன்.

**இப்படிக்கு**
**காங்கேசன்துறை**
**அபிவிருத்திச்சபை தலைவர்**
**கந்தசாமி ஞானேந்திரன்**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# என்னுரை



இலங்கையின் வடபகுதியில் யாழ்ப்பாணக்குடாநாட்டில் பெரிய துறைமுகத் துடன், இலங்கை சீமெந்துக் கூட்டுத்தாபனத்தின் மிகப்பெரிய தொழிற்சாலையும் அமைந்த மிக முக்கியமான சிறுநகரத்தில் மையமாக அமைந்துள்ளது காங்கேசன்துறை பொதுநூலகம். இந் நூலகத்தினால் தேசிய வாசிப்பு மாதத்தினையொட்டி மேலதிக வாசிப்பு திறனை விருத்தி செய்யும் நோக்கில் **காங்கேசன் முரசு 3** வெளியிடப்படுகின்றது.

**"கண்டது கற்கப் பண்டிதன் ஆவான்"** என்பது பழமொழி எதுவும் தெரியாமல் பிறந்த நாம் அறிஞனாக உருவாகுவதற்கு நூலக வாசிப்பு அவசியமானது. நமக்குப் பல்வேறு புத்தகங்கள் தாங்கிய நூலகம் காத்திருக்கின்றது. அதனை நாம் முழுமையாகப் பயன்படுத்த வேண்டும்.

பண்டைக் காலத்தில் கல்வியறிவு பெற்றவர்களின் எண்ணிக்கை மிகக்குறைந்தளவிலேயே காணப்பட்டது. அரண்மனைகளிலும், கோவில்களிலும் படிக்கும் நோக்கமின்றி பாதுகாப்பதற்கு மட்டுமே நூல்கள் அடுக்கி வைக்கப்பட்டிருந்தது. பிற்காலத்தில் நூல்கள் படிப்பதற்கே என்ற எண்ணம் தோன்றி நூலகங்கள் உருவாக்கப்பட்டன.

இம்மலர் ஆசிச்செய்தி, வாழ்த்துச்செய்தி, கவிதை, கட்டுரை உள்ளடக்கியதாக அமைந்துள்ளது. காங்கேசன்துறை சார்ந்த வரலாறுகளையும் உள்ளடக்கியுள்ளோம். வாசிப்புத் திறனை மேம்படுத்தும் நோக்குடன் வெளிவரும் இந்த நூலிற்கு ஆக்கங்களை தந்துதவியவர்களுக்கும் மேலும் எமது செயற்றிட்டங்களுக்கு எவ்வித மறுப்புமின்றி தகுந்த ஆலோசனை வழிகாட்டல்களை வழங்கி ஊக்குவித்தவர்களுக்கும் எமது பிரதேசசபையின் கௌரவ தவிசாளர், செயலாளர், பொறுப்பதிகாரி மற்றும் சக உத்தியோகத்தர்கள் ஊழியர்களுக்கும் எனது மனமார்ந்த நன்றிகளைத் தெரிவித்துக் கொள்கின்றேன்.


**சி.சிறீஸ்கந்தராசா**
**நூலகப் பொறுப்பாளர்,**
**பொது நூலகம்**
**காங்கேசன்துறை.**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வளம் பல கொண்ட காங்கேசன்துறை உபஅலுவலக பிரதேசம்



இலங்கையின் வடபகுதியில் யாழ்ப்பாணக் குடாநாட்டில் பெரிய துறைமுகத்துடன் இலங்கை சீமெந்துக் கூட்டுத்தாபனத்தின் மிகப் பெரிய தொழிற்சாலையும் அமைந்த மிக முக்கியமான சிறு பிரதேசமே காங்கேசன்துறைப் பிரதேசம் ஆகும். இப்பிரதேசம் கடல்வளம், நிலவளம், சீமெந்து உற்பத்திக்கான முருகைக்கல், பனைவளம், மீன் பிடித்துறைமுகம் போன்ற பல வளங்கள் கொண்ட பிரதேசமாகும்.

இலங்கை அரசாங்கத்தால் ஆரம்பிக்கப்பட்ட முதலாவது தொழிற்சாலை காங்கேசன் சீமெந்து தொழிற்சாலையாகும். இலங்கை அரசாங்கம் சீமெந்து உற்பத்தி செய்வதற்கு ஏதுவாக வெளிநாட்டில் இருந்து நிபுணர்களை வரவழைத்து அந்நிபுணர்கள் இலங்கையில் பல பகுதிகளிலும் ஆராய்ச்சிகளை மேற்கொண்டு சீமெந்து உற்பத்திக்குத் தேவையான மூலப்பொருளாகிய சுண்ணாம்புக்கல் காங்கேசன்துறைப் பகுதியில் அதிகளவு உண்டெனக் கண்டறிந்து அப்பகுதியில் சீமெந்து தொழிற்சாலையை நிறுவுவதற்கு சிபார்சு செய்ததன் பின்னர் காங்கேசன்துறையில் சீமெந்து தொழிற்சாலை நிறுவப்பட்டு பல தொழிலாளிகளை வேலைக்கு நியமித்து மிக பிரமாண்டமாக இயங்கி வந்தது. இதுவே இலங்கையில் உள்ள பெரிய சீமெந்து தொழிற்சாலையாகும்.

இலங்கையில் உள்ள மீன்பிடித்துறைமுகங்களில் மயிலிட்டி மீன்பிடித்துறைமுகம் பழமை வாய்ந்த துறைமுகமாகும். யாழ் மாவட்டத்தில் பிடிக்கப்படும் மீனில் 1/3 பகுதி மயிலிட்டி மீனவர்களால் பிடிக்கப்பட்டு வந்ததென்பது யாவரும் அறிந்த விடயமாகும். அதுமட்டுமல்ல துள்ளி வந்து வலையில் சிக்கும் பெருமீன்களை பழுதடையாது பாதுகாத்து ஏற்றுமதி செய்ய இங்கு மூன்று ஐஸ் உற்பத்திசாலைகள் இயங்கி வந்துள்ளன. தற்போது ஐஸ் தொழிற்சாலைகள் இல்லாத போதும் ஏற்றுமதி வியாபாரம் நடைபெறுகிறது.

இலங்கையில் உள்ள துறைமுகங்களில் காங்கேசன்துறை துறைமுகம் ஓர் பழமை வாய்ந்த இயற்கைத் துறைமுகமாகும். இத்துறைமுகம் 1851 இல் திறக்கப்பட்டது. இது இறங்குதுறையாக அன்றும் இன்றும் இருந்து வருகிறது. கொழும்பிலிருந்து யாழ்ப்பாணம் வரும் உணவுப் பொருட்கள் இங்கேயே இறக்கப்படுகிறது. இக்கப்பல் மூலம் வரும் பொருட்களை களஞ்சியப்படுத்த பெரிய களஞ்சிய அறையும் இருந்தது.

கடல் வழித்தொடர்புகளை மேற்கொள்வதற்கு 1893ம் ஆண்டு ஓர் வெளிச்ச வீடு காங்கேசன்துறையில் அமைக்கப்பட்டது. இது காங்கேசன்துறையிலுள்ள ஏரிக்கரையில் முகப்பிலுள்ள பாகத்தில் பழைய அரண்மனையின் வெளிப்புறத்தில் அமைந்துள்ளது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இரவுக் குறிகாட்டியாகஅமையும் இவ் வெளிச்ச வீட்டின் ஒளிச்சமிக்ஞை 15 செக்கனுக்கு ஒருமுறை மூன்று வெள்ளை வெளிச்சம் ஒளிரும் வண்ணம் அமைவு பெற்று விளங்கியது. இவ் வெளிச்ச வீடு கடற்றொழிலாளிகளுக்கு பெரும் உதவியாக இருந்துள்ளது.

யாழ் மாவட்டத்தில் காசநோயாளர்களுக்கு சிகிச்சை அளிக்கும் முகமாக பெரிய இடப்பரப்பில் விடுதி வசதியுடன் மயிலிட்டி கடற்கரையில் காசநோய் வைத்தியசாலை இயங்கி வந்தது. அக்காலத்தில் காசநோய்க்கு மருந்தாக கடற்கரைக் காற்றும் சூரிய ஒளியும், போசாக்கான உணவுமே கொடுக்கப்பட்டது. அதற்குப் பொருத்தமான இடமாக மயிலிட்டிக் கடற்கரை அமைந்திருந்தமையால் அவ்விடத்திலேயே வைத்தியசாலை அமைக்கப்பட்டு இயற்கை முறையில் சிகிச்சை அளிக்கப்பட்டு வந்தது. 1990ம் ஆண்டின் பின் தற்போது மீண்டும் கட்டடங்கள் புணர்நிர்மானம் செய்யப்பட்டு வருகின்றது.

இவ்வாறு சகல வளங்களையும், தொழிற்சாலைகளையும் தன்னகத்தே கொண்டு சிறப்புடன் மிளிர்ந்த காங்கேசன்துறை உபஅலுவலகத்திற்குள் உள்ளடங்கிய பிரதேசம் மீண்டும் புதுப்பொலிவைப் பெற்று பல தொழிலாளர்களுக்கு வேலை வாய்ப்பை வழங்கி பொருளாதாரத்தில் உயர்வடைய வேண்டும்.

**திருமதி.தி.கௌசியா**
**வலிகாமம் வடக்கு பிரதேசசபை**
**உப அலுவலகம் - காங்கேசன்துறை**

**ஒரு நல்ல புத்தகம் திறந்து கொண்டால் நரகத்தின் வாசல் மூடப்படும்.**
**அடுத்த தலைமுறைக்கு பரிசளிக்க விரும்பினால் புத்தகத்தை பரிசாகக் கொடு!**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# புகையிரத நிலையம்



14 மைல் நீளமான புகையிரதப்பாதை 1902ம் ஆண்டு மார்ச் மாதம் பூர்த்தியாக்கப்பட்டு மார்ச் 11ம் திகதி அப்போதைய பிரித்தானிய ஆளுநர் சேர்.வெஸ்ற் றிட்ஜ்வேயினால் (Sir.West Ridgeway) திறந்து வைக்கப்பட்டது. இந்த சேவை செப்ரெம்பர் 5ம் திகதி பளை வரை நீடிக்கப்பட்டது. யாழ்ப்பாணத்திற்கும் கொழும்புக்கும் இடையிலான புகையிரத சேவை 1905ம் ஆண்டு ஓகஸ்ட் முதலாம் திகதி ஆரம்பிக்கப்பட்டது. யாழ்ப்பாணத்திற்கான புகையிரத சேவையை ஆரம்பிப்பதில் சேர்.பொன்.இராமநாதன், சேர்.கனகசபை, இலங்கையர் நாகலிங்கம் ஆகியோர் பெரும் பங்காற்றியுள்ளனர்.

ந.பரமேஸ்வரன்
மாரியம்மன் வீதி,
40/2 திருநெல்வேலி,
யாழ்ப்பாணம்.
இலங்கை.

நான் இன்னும் வாசிக்காத நல்ல புத்தகம் ஒன்றை வாங்கி வந்து என்னைச் சந்திப்பவனே என் தலை சிறந்த நண்பன்

- ஆபிரகாம் லிங்கன் -



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நடிகமணி வி.வி.வைரமுத்து



நடிகமணி வி.வி.வைரமுத்து அவர்கள் காங்கேசன்துறையில் 1924ம் ஆண்டு பெப்ரவரி மாதம் பிறந்தார். தந்தையார் வேலப்பா தாயார் ஆச்சிக்குட்டி ஆவர். இவரது அண்ணர் காசிநாதனும் சிறந்த மிருதங்க வித்துவான். தாய் மாமன் பிள்ளைநாயகம், பேரன், பூட்டன் ஆகியோரும் கலைஞர்கள் காங்கேசன்துறை நடேஸ்வரா சைவத்தமிழ் வித்தியாலயத்தில் 1929 இலிருந்து 1931 வரையிலும் கல்வி கற்று பின்னர் பிள்ளைநாயகம், வேலப்பா ஆகியோரின் வேண்டுதலின் படி அவ்வாயூர் ஓய்வு பெற்ற அதிபர் க.முருகேசு அவர்களின் அனுசரணையுடன் கரவெட்டி தேவரையாளி இந்துக்கல்லூரியில் கல்வியை மேற்கொண்டார். முருகேசு வைரமுத்துவின் வளர்ப்புத் தந்தையாகவும் விளங்கினார்.

தனது 14 ஆம் வயதில் பாடசாலைக் கலைநிகழ்ச்சியில் **"அப்பூதி அடிகள்"** பாத்திரத்தை நடிகமணி வைரமுத்து சிறப்பாக நடித்துள்ளார். இதுவே முதல் மேடையேற்றம் ஆகியது. இந்தியாவில் இருந்து சுற்றுப்பயணத்தை மேற்கொண்ட எழுத்தாளரும் அறிஞருமாகிய கல்கி அவர்கள் இப்பாடசாலைக்கு வந்து போனமையை **"இலங்கையில் ஒரு வாரம்"** என்ற நூலில் இப்போதும் காணலாம். கர்நாடக சங்கீதத்தையும் இசையையும் ஆரம்பத்தில் தாய் மாமன் பிள்ளைநாயகத்திடம் கற்றார். மாவிட்டபுரம் உருத்திராபதி அவர்களிடம் வயலின் இசையைக் கற்றுக் கொண்டார். பின்னர் இந்தியாவிற்கு (1941-1942 ஆண்டு காலப்பகுதி) சென்று கர்நாடக சங்கீதம், இசைக்கலைகள், நாடக நுணுக்கங்களைப் பயின்றார். சங்கீதக் கச்சேரிகளிலும் நாடகங்களுக்கும் கீர்த்தனைகளை வித்தியாசமான முறையில் எப்படிப் பாட வேண்டும் என்பதையும் அறிந்து கொண்டார். மதுரைத் தமிழ்சங்கம் நடாத்திய பண்டித வகுப்புகளில் சேர்ந்து படித்து, பிரசேவ பண்டிதர், பால பண்டிதர் பரீட்சைகளில் சித்தி அடைந்தார். பொருள் உணர்ந்து பாடி நடிக்கும் திறமை நல்லாசிரியர்களிடம் தமிழ் இலக்கண, இலக்கிய நூல்களை துறை போகக் கற்றமை காரணம் எனலாம்.

இந்தியாவிலிருந்து வந்த பின்னர் இரத்தினபுரி பாடசாலையில் ஆசிரியராக நியமிக்கப்பட்டார். எனினும் கலைத்துறையில் கூடுதலான நாட்டம் கொண்டமையால் ஆசிரியப் பணியிலிருந்து விலகி தன்னை முழு நேரக் கலைஞனாக ஆக்கிக் கொண்டார். ஆரம்பத்தில் பெண்பாத்திரங்களான கண்ணகி, மாதவி, வள்ளி, சாவித்திரி, பவளக்கொடி போன்றவற்றை நடித்துள்ளார். பின்பு ஆண்பாத்திரத்தில் (ராஜபாட்) நடிக்கத் தொடங்கினார். அரிச்சந்திரன், கோவலன், முருகன், வேடன், விருத்தன், நல்நண்ணன்,



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பிலேந்திரன், மனோகரன், சத்தியவான், அர்ச்சுனன், திருநீலகண்டர் முதலான பாத்திரங்களில் தோன்றினார். நடிப்பின் இலக்கணங்களை நன்கு புரிந்தவராகையால் தன்னுள் பாத்திரத்தை சங்கமமாக்காது பாத்திரத்துக்குள் தன்னைச் சங்கமமாக்கிக் கொண்டார்.

1952 இல் சம்பூர்ண அரிச்சந்திரா மேடையேற்றம் முல்லைத்தீவில் நடைபெற்றது. 1953இல் இலங்கை கலைக்கழகம் தேசிய மட்டத்தில் கலைவிழாவை ஏற்பாடு செய்த போது, தீபாவளி நாளில் யாழ் நகரசபை மண்டபத்தில் முதன்முதலாக அரிச்சந்திரன் மயான காண்டம் நாடகம் மேடையேற்றப்பட்டது. தெல்லிப்பளை மகாஜனாக் கல்லூரி முன்னாள் அதிபர்.த.சண்முகசுந்தரம் அவர்களும் நடிகமணியும் ஆரம்ப வகுப்புகளில் ஒன்றாகப் படித்தவர்கள். நெருங்கிய நண்பர்களாகவும் வாழ்ந்தவர்கள். வைரமுத்துவின் கலை ஆற்றல்களை பேராசிரியர்.சு.வித்தியானந்தனுக்கு எடுத்துக் கூறியவர் சண்முகசுந்தரம் அவர்கள். 1953இல் வைரமுத்து அவர்கள் பேராசிரியர் வித்தியானந்தன், இலங்கையர் கோன் சிவஞான சுந்தரம் (D.R.O), இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத்தாபன தமிழ் நாடகப் பொறுப்பாளர் சானாசண்முகநாதன் ஆகியோரின் அனுசரணையுடன் "**வஸந்தகான சபா**" என்னும் நாடக மன்றத்தை உருவாக்கினார். இவரது நாடகங்களை யாழ்ப்பாணத்தில் மட்டுமல்லாது தென்னிலங்கை, மலையகத்திற்கு கொண்டு சென்ற பெருமை பேராசிரியர் வித்தியானந்தனையே சாரும். வைரமுத்து அவர்கள் சங்கீதக் கச்சேரிகளை யாழ்ப்பாணத்திலும் இலங்கை வானொலியிலும் நடாத்தினார்.

சரீரவளமும் ஓரளவு நடிப்பாற்றலும் உள்ளவர்களை இனங்கண்டு தனது அயராத பயிற்சியினால் முழுமையான நடிகர்களாக்கிய பெருமையும் இவருக்குண்டு. இவரது நாடகங்கள் யாழ்ப்பாணத்தின் பல பாகங்களிலும், வன்னிப் பெருநிலப்பரப்பிலும், கொழும்பிலும் பிணிமண்டபம், பம்பலப்பிட்டிய சரஸ்வதி மண்டபம், மருதானை ரவர் மண்டபம், ஜோன் பீ.சில்வா மண்டபம், பேராதனைப் பல்கலைக்கழகம், குண்டகசாலை, கம்பளைக்கல்லூரி, பண்டாரவளை ஆகிய இடங்களில் நடைபெற்றன. நாவலப்பிட்டி முத்துமாரி அம்மன் கோவில் திருவிழாவின் போது 12 நாட்கள் கதாப் பிரசங்கம் செய்துள்ளார். மல்லாகம் சாலம்பை முருகன் ஆலயத்திலும் செய்துள்ளார். கொழும்பில் மேஜராக இருந்த வின்சென்ற் பெரேரா அவர்கள் தங்கப் பதக்கம் சூட்டிக் கௌரவித்தார். பேராசிரியர் வித்தியானந்தன் "**கலைக்கோமான்**" பட்டத்தினை வழங்கினார். 1960இல் நெல்லியடி நாவலர் மண்டபத்தில் கலை அரசு சொர்ணலிங்கம் அவர்கள் வைரமுத்துவிற்கு "**நடிகமணி**" என்ற பட்டத்தை வழங்கி இன்றும் நடிகமணி (வைரமுத்து) ஆகினார். மகாஜனக் கல்லூரியில் மயான காண்டம் 1000வது மேடையேற்றம் போது, தந்தை செல்வா "**நடிப்பிசை மன்னன்**" பட்டத்தைக் கொடுத்தார். தந்தை செல்வாவின் பரிந்துரையில் சமாதான "**நீதவான் ஆகினார்**" நடிகமணி (1972).



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

1969 இல் இலங்கை தமிழரசுக்கட்சியின் 11 வது மாநில மாநாட்டிற்கு இந்தியாவிலிருந்து வருகை தந்த இலம்புச்செல்வர் ம.பொ.சிவஞானம் **"நாடக வேந்தன்"** பட்டத்தினை அளித்தார். பேராசிரியர் க.கைலாசபதி **"நவரஸ திலகம்"** பட்டம் வழங்கினார். வட்டுக்கோட்டை முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர் தா.திருநாவுக்கரவு **"நடிப்பிசைச் சக்கரவர்த்தி"** என்னும் பட்டம் கொடுத்தார். பாசையூர் சென்றோக் படிப்பகத்தினர் **"முத்தமிழ் வித்தகர்"** என்றும் பட்டம் கொடுத்தனர். அரசியல்வாதிகளினாலும், பல அறிஞர்களாலும், கலைஞர்களாலும், இரசிகர்களாலும் பெரிதும் பாராட்டப்பட்டவர். யாழ் பல்கலைக்கழகம் 2004 இல் தேசாந்த நிலையில் **"கௌரவ கலாநிதிப் பட்டம்"** வழங்கியது. பல்கலைக்கழகத்தில் நாடகம், நாடகமேடைப்பாடல்கள் கைலாசபதி அரங்கில் இடம் பெற்றன.

1984இல் காங்கேசன்துறை இராஜநாயகி படமாளிகையில் இவரது மணிவிழா கலை, இலக்கிய, பத்திரிகை நண்பர்களால் நடைபெற்றது. இவரது மயானகாண்டம் நாடகம் இலங்கைத்திரைப்படமான நிர்மலாவில் இடம்பெற்றது. நடிகர் திலகம் சிவாஜி கணேசன் இந் நாடகத்தைப் பார்த்து பாட்டுடன் சேர்ந்த நடிப்பு என்று கூறி வெகுவாகப் பராட்டினார். மற்றும் ஜெய்சங்கர், நாகேஸ், அசோகன் ஆகியோர் காங்கேசன்துறை பட்டினசபை விழாவின் போது வந்துள்ளனர். சபைத்தலைவர் க.ஜெயபாலசிங்கம் அவர்களின் ஏற்பாட்டில் நடிகமணிக்கு ஜெய்சங்கர் அவர்கள் பொன்னாடை போர்த்திக் கௌரவித்தார். அளவெட்டி கும்பளாவளை மாதகல் நுணசை முருகன் ஆலயத்திற்கு திரு.முருக கிருபானந்தவாரியர் அவர்கள் வருகை தந்த போது, நடிகமணியை பாராட்டி **வாரியார் வாக்கு, தவம்** என்னும் இரு நூல்களை தனது கையொப்பத்துடன் பரிசாகக் கொடுத்தார்.

நடிகமணி வைரமுத்து, ஆர்மோனியம், மிருதங்கம், தபேலா, வயலின், புல்லாங்குழல், ஜலதரங்கம் முதலிய வாத்தியங்களை நன்கு இசைக்கும் திறமை பெற்றவர். ஆடம்பர மேடையில் இவரது நாடகங்கள் மேடையேற்றம் நடந்தது மட்டுமல்ல வெறும் திரைச் சீலைகளிலும் சாதாரண முறையில் நடந்ததும் உண்டு. வெட்டவெளிகளிலும், மண்டபங்களிலும், ஆலயத் திருவிழாக்களிலும், பாடசாலைகளிலும் பட்டி தொட்டி எல்லாம் நடைபெற்றன. நடிகமணி மாவிட்டபுரம், செல்வசந்நிதி, நல்லூர் ஆலயத் திருவிழாவின் போது ஆர்மோனியம் இசைத்து காவடிகளுக்கு பக்திப் பாடல்களைப் பாடிய காலம் உண்டு.

தென்னிந்திய நடிகர் T.K பகவதி யாழ் வீரசிங்கம் மண்டபத்தில் நடிகர்மணியைப் பராட்டி இவரது காங்கேசன்துறை இல்லத்திற்கு வந்திருந்தார். மற்றும் இயக்குனர் ஸ்ரீதர், குலதெய்வம் இராஜகோபால் நடிகர் பாராட்டிய பெருமைக்குரியவர். கதாநாயகனா நடித்த



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நடிகமணி பூதத்தம்பி நாடகத்தில் "அந்திராசி" என்னும் வில்லன் பாத்திரத்தை மிகச் சிறப்பாக நடித்துள்ளார்.

இலங்கைத் தமிழ் காங்கிரஸ் தலைவர் ஜி.ஜி.பொன்னம்பலம் அவர்கள் **"சேக்ஸ்பியர் எழுதிய நாடகங்களைப் பார்த்திருக்கிறேன், ஆனால் வைரமுத்துவினால் உருவாக்கப்பட்ட அந்த சோகமயமான சூழலை ஒரு யூரிய சீசரிலோ அல்லது அன்ரனி அன் கிளியோபட்ராவிலோ அல்லது ஹெம்லட்டிலோ அல்லது மக்பெத்திலோ தன்னால் காணமுடியவில்லை"** என்று கூறினார்.

"யூடீஸ்" என்ற ஆங்கில நாடகத்தில் நடிகமணி நடித்தமை குறிப்பிடத்தக்கது.அது மட்டுமல்ல பல சமூக நாடகங்களிலும் நடித்துள்ளார் என்பதும் தெரிவிக்க வேண்டிய விடயமாகும். பேராசிரியர் சி.மௌனகுரு அவர்கள் பாடலால் நடிப்பை வெளிப்படுத்தியவர் நடிகமணி என்று புகழாரம் சூட்டினார். இவரது மயானகாண்டம் நாடகம் இலங்கை ரூபவாகினி நிலையத்தில் ஒளிபரப்பு செய்த முதல் தமிழ் நாடகம் ஆகும். இதை மேற்கொண்டவர் தற்போது கனடா வானொலியில் பணியாற்றும் P.விக்னேஸ்வரன் ஆவார். இவரது நாடகங்கள் நாடக மேடைப் பாடல்கள் இலங்கை ஒளிபரப்பு கூட்டுத்தாபனத்திலும் ரூபவாகினியிலும் இடம் பெற்றன. சங்கீத கோவலன் இறுதி நாடகமாக அமைந்தது. மாதகலில் பங்குத் தந்தை அணிவித்த மலர்மாலை இறுதி மேடை மரியாதை ஆகியது.

1989ம் ஆண்டு யூலை 8ம் திகதி கொழும்பில் காலமாகிய செய்தி கலை உலகத்தையே அதிரச் செய்தது. 2022ஆம் ஆண்டு "காங்கேசன்துறை மக்கள் கலைஞர் அமைப்பினரால்" மேற்கொண்ட அயராத முயற்சியினால் நடிகமணியின் சிலை நிறுவப்பட்டது மிகமிக பராட்டுக்குரியது. இதற்கு அனுசரணை செய்த பிரதேசசபை தவிசாளர் சோ.சுகிர்தன் அவர்கள் மறக்கப்பட முடியாதவர் என்பதை பெருமையுடன் கூறிக் கொள்வது நன்றிக் கடமையாகும்.

**பி.கு - இவரைப்பற்றி வெளியான நூல்கள்**

- **நடிகமணி வி.வி.வைரமுத்துவின் வாழ்வும் அரங்கும் (காரை செ.சு)**
- **நந்தாப்புகழ் பெற்ற நாயகன் நடிகமணி வைரமுத்து (V.N.மதி அழகன்)**
- **நாடகதீபம் (கலாநிதி காரை.செ.சுந்தரம்பிள்ளை)**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நலிவுற்றுச் செல்லும் கலைகள்

கலைகள் என்பது எண்ணங்களையும், உணர்வுகளையும் வெளிப்படுத்தும் சாதனமாகும். பிறருக்கு விளக்கும் வகையில் அழகியல் நோக்கங்களோடு காட்சிக்குரிய வடிவத்தில் உருவாக்கப்படும் பொருளே கலை வடிவமாகும். மொழி வளராத ஆதி மனித சமுதாயம் எப்படி உடலசைவுகளையும் உள்ளத்து உணர்வுகளின் பிரதிபலிப்பையும் வடிவங்களின் மூலம் தமது முதல் மொழியாக கொண்டான் என்பது வியற்பிற்கில்லை.

"கல்லிலே கலைவண்ணம் கண்டான்" எனும் கூற்றுக்கு இணங்க இயற்கையாகவே தோன்றிய கலைவடிவங்களானது. படிப்படியாக கால ஓட்டத்திற்கு அமையவும் கலாச்சார பரிமாணங்களுக்கு அமையவும் புகழ் பூத்து வளர்ச்சியடையத் தொடங்கியது.அதாவது இயற்கை தந்த கொடையாக அமைந்து விளங்கும் கலை வடிவமான சில்லென வீசும் தென்றல் காற்றில் மரங்கள் அசைந்து ஆடுதலும், பறவைகள் துளையிட்ட மூங்கில் மரங்களினுடே தென்றல் காற்று சென்று இனிமையான ஓசை காற்றில் தவழ்ந்து காதுகளிற்கு விருந்தளிப்பதும் கொடையாகும். அத்தோடு மயில் முதல் பல பறவைகள் அசைந்து ஆடவும், அவை எழுப்புகின்ற ஓசையும், நதியானது பாய்ந்து செல்லும் இயற்கை ஓவியமும், நதியின் ஓசை, கடலலையின் ஓசை அசைவுகள் போன்று பல எடுத்துக்காட்டாக கூறலாம்.

ஆதி மனிதன் பேசத் தொடங்கிய காலத்து கலைவடிவங்களின் பிரதி பலிப்பாக பசியால் வாடிய மனிதன் உணவிற்காக வேட்டையாட சென்ற போது வேட்டையாடிய மிருகத்தை கண்டால் தமக்கு உணவு கிடைத்து விட்டது என்ற மகிழ்ச்சியில் குதித்து கூத்தாடி கூச்சலிட்டான், மகிழ்ச்சியில் கைகளைத் தட்டி உள்ளத்து உணர்வுகளை வெளிப்படுத்தியது தாளமாகவும், குதித்து கூத்தாடியது நடனமாகவும், கூச்சலிட்டது ஓசையாகவும் பிற்காலத்தே பரிணாம வளர்ச்சி பெற தொடங்கியது. உணவுத் தேவையை பூர்த்தி செய்த ஆதி மனிதன் பொழுது போக்க என்ன செய்வது என்று யோசித்தான். வேட்டை ஆடிய மிருகங்களின் தோலைக் கொண்டு இசைக்கருவிகளை தமது அறிவிற்கேற்ப அதனில் ஓவியம் இசை வாத்தியங்கள் என பலவற்றை தோற்றுவித்தான். அதன் மூலம் தனது உள்ளத்து மகிழ்ச்சிகளை வெளிப்படுத்தினான்.

மேற்கொண்டவாறு தோற்றம் பெற்ற கலைகளானது படிப்படியாக வளர்ச்சி பெற்று பல்வேறு கோணங்களில் பல்வேறு தேவைகளுக்காக பல்வேறு பாகங்களில் திரிவடையத் தொடங்கியது. ஆலயங்களின் கிரியைகளில் இசை வேள்விகள், ஆடல் வேள்விகள் என படிப்படியாக புனிதத் தன்மை அடையத் தொடங்கியது. இவ்வாறு கால ஓட்டத்திற்கு அமைவாக கலைகள் திரிவடைந்து அறுபத்து நான்கு கலை வடிவங்களாக மாற்றமடைந்தது. இயல், இசை, நாடகம், கட்டடக்கலை, சிற்பக்கலை, ஓவியக்கலை,



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சமையற்கலை போன்றன அவற்றுள் சிலவாகும். "இயல், இசை, நாடகம்" என்ற மூன்றையும் உள்ளடக்கி முத்தமிழ் என்று சங்கம் வளர்த்து தமிழ் வளர்த்தனர் என்றும் கூறப்படுகின்றது. பிற்காலத்து மன்னர்கள் கலைகளுக்கு முக்கியத்துவம் கொடுத்து அது வளர்ந்து வருவதற்கும் அதன் புனிதத் தன்மையை பேணிப் பாதுகாப்பதற்கும் உறுதுணையாக விளங்கினர். வியத்தகு சிற்பங்களை கொண்டு சிற்பாலயங்கள் பலவற்றை கட்டி எழுப்பினார்.

இசை கலைஞர்களுக்கும், ஆடல் மாதர்களுக்கும் மானியங்களை வழங்கி அவர்களை கௌரவப்படுத்தினார்கள். இது மட்டுமன்றி இந்துக்களின் சைவ முழுமுதற்கடவுள் சிவபெருமானே "ஆடற்கரசன்" என்றும் கலைகளை தோற்றுவித்தார் என்றும் பிறதெய்வங்களான சரஸ்வதி வீணை ஏந்தி வாசித்தார். நர்த்தன கணபதி நடனம் ஆடினார், நந்தி பெருமான் மத்தளம் வாசித்தார் என்றும் புராணங்கள் வழியாக தெய்வங்களே கலை வடிவங்களின் பிரதிபலிப்பாக விளங்கியமை குறிப்பிடத்தக்கது.

இவ்வாறு போற்றப்பட்ட கலைகள் சமய நிகழ்வுகளோடு மனித வாழ்வியலிலும் பின்னிப்பிணைந்து காணப்படுகின்றது. வாழ்வியலானது சடங்குகளோடு தொடர்புபட்டவையாக மனிதன் பிறப்பு முதல் இறப்பு வரை கலைகள் பெரிதும் பங்காற்றுகின்றன. பிறந்த குழந்தையை தாலாட்டுதல் தொடக்கம், திருமணச்சடங்கு, வழிபாடு, நேர்த்திக்கடன், தொழில் நிமிர்த்தம், இறப்புவரையும் கலையானது ஏதோ ஒரு முறையில் மனித வாழ்வியலோடு பண்பாட்டை வெளிப்படுத்தும் தூய்மையான சாதனமாக கலைகள் விளங்குகின்றது.

காலத்தால் அழியாத இதிகாசம் முதல் புராணங்கள் எல்லாம் கலையின் சிறப்பினை அழிவடைய செய்யாமல் நிமிர்ந்து நிற்பதற்கு சான்றாக அமைந்து விளங்குகின்றது. அக்காலத்து மக்கள் கிராமப் புறங்களிலே வயல்களில், வேலை செய்யும் போது அந்தக் களைப்பு தெரியாமல் எல்லோரும் ஒன்றாகச் சேர்ந்து கும்மி அடிப்பதும், அரிவு வெட்டும் போதும் களை பிடுங்கும் போதும் தமது களைப்பை போக்க பாடியும் ஆடியும் மகிழ்ந்தார்கள் அதே போன்று கடலில் மீன்பிடிக்க செல்லும் மீனவர்கள் தங்கள் களைப்பைப் போக்க பாடல்களைப் பாடி, ஆடினர். மேலும் சிலர் நேர்த்திக்காக காவடி, கரகம் இசைகச்சேரிகள் நடத்தினர்.

ஆரம்ப கால கோவில் திருவிழாக்களின் போது இறைவனை திருப்திப்படுத்தும் முகமாக இரவிரவாக நாடகங்களை நடாத்தி இசைகச்சேரிகளை நடத்தினர். முத்தமிழ் மன்றங்களை நிறுவி அதன் மூலமும் இளம் சமுதாயத்தினரை கலை ஆர்வலராக வளர்க்கும் பணியில் ஈடுபட்டு அறம் சார்ந்த தர்ம நீதிகதைகளான "அரிச்சந்திர மயானகாண்டம், இராமாயணம், மகாபாரதகதைகள், பவளக் கொடி, காத்தவராயன் சிந்துநடைகூத்து, கோவலன் கண்ணகி போன்றவற்றை இரவிரவாகவும் நடாத்தி வந்தனர்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இதே கதைகளை வில்லுப்பாட்டு நாட்டு மக்களை நல்வழிப்படுத்த கலைகள் மூலசாதனமாக திகழ்ந்தது.

பண்டிகைக் காலங்களில் விளையாட்டு விழாக்களை நடாத்தி உறியடி, பட்டப்போட்டி, மாட்டுவண்டிச்சவாரி,கோலப்போட்டி, மாலைகட்டல் போட்டி, சமையற் போட்டி, கும்மி, கோலாட்டம், ஜல்லிக்கட்டு, கபடி நடாத்தி மக்களின் வாழ்வியலோடு கலைகள் இணைந்து நல்வழிப்படுத்தின.

மேற்கூறப்பட்டவாறு பல வடிவங்களில் உருப்பெற்ற கலைகளானது காலப் போக்கில் மேல் நாட்டு கலாச்சார பின்னனியும் நவீனத்துவமும் தொழில் நுட்பமும் வளர்ச்சி பெறத் தொடக்கி கலைகளும் கலாச்சாரம் பண்பாடுகளும் சற்றே நலிவடையத் தொடங்கியது. அதாவது ஆலயங்களிலே விழாக்காலங்களில் இரவிரவாக நடாத்தப்பட்ட நாடகங்கள் அருகிச் சென்று மேல் நாட்டு இசை கருவிகளின் கச்சேரிகள், தாள வாத்தியங்கள் திரை இசைப் பாட்டுக்கள் என நடைபெறும் போது போதைப் பொருட்களைப் பாவித்துவிட்டு ஆலய வீதிகளில் அரைகுறை ஆடைகளை அணிந்து ஆட்டம் போடுதலும் தற்காலத்தே இடம்பெற்றுவருவது இளம் சமுதாயத்தினரை தவறான ஒழுக்கமற்ற பாதையில் கொண்டு செல்கின்றன.

பண்டிகைக் காலங்களில் ஆலயங்களிலே கலை மன்றங்களிலும் பண்பாட்டை வெளிப்படுத்தும் கலைகள் இடம் பெற்ற காலத்தை விட்டு பொது இடங்களில் களியாட்ட விழாக்கள் இடம்பெறுவது மேல் நாட்டு விளையாட்டுகள் இடம் பெறுவதும் சமுதாயத்தை சீர் கெடுக்கும் வகையில் அமைகின்றன. அக்காலத்தே இரவிரவாக இடம் பெற்ற கூத்துகள் இசை நாடகங்கள் புராண இதிகாச கதைகள் எல்லாம் மிகவும் அழிந்து வருகின்றமை குறிப்பிடத்தக்கது. அதே போன்று கலாச்சார விழாக்களில் விருந்தினரை வரவேற்கும் போது மயிலாட்டம், குதிரையாட்டம், கும்மி கோலாட்டங்கள் என இடம் பெற்ற கலைகள் அழிந்து மேலைத்தேய வாத்தியமான "பான்ட்வாத்தியம்" இசை குழுவுடன் விருந்தினரை வரவேற்கின்றனர். இதன் போது திரைஇசை பாடல்களுக்கு நடனமாடி வரவேற்கின்ற கலாச்சாரமும் மாறி வருகின்றமை குறிப்பிடத்தக்கது.

இவ்வாறு இயற்கையில் தோற்றம் பெற்ற இறை வடிவங்களே இசைந்து அனுபவித்த கலை வடிவங்களானது பிற்காலத்தே கலை கலாசார பின்னனியோடு மனித வாழ்வியலை மேம்படுத்தவும் இளைய சமுதாயத்தினரை நல்வழிப்படுத்தவும் காரணமாக விளங்கிய கலைகள் கால ஓட்டத்திற்கமைய தொழில்நுட்ப வளர்சசியும் நவீனத்துவ மாற்றமும் கலாச்சார பின்னணியில் செல்வாக்கு செலுத்த தொடங்கியதன் காரணமாக புனிதமாக போற்றப்பட்ட கலைகளானது அருகிச் செல்கின்றமை கவலையை தருவதோடு, அவ்வாறு அருகிச் செல்லும் கலைகளை பேணிப் பாதுகாப்பதற்கு இளம் சமுதாயத்தை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஊக்குவிக்க வேண்டும் அப்போது தான் எமது தமிழ் பண்பாடுகளோடு கூடிய கலைகள் என்றும் நலிவுறாமல் பாதுகாக்கப்படும் என்பதும் குறிப்பிடத்தக்கது.

திருமதி.த.பத்மாஜினி
அபிவிருத்தி உத்தியோகத்தர்
வலிவடக்கு பிரதேசசபை.
உப அலுவலகம், காங்கேசன்துறை.


புத்தக வாசிப்பு வெறும் பொழுதுபோக்கு அல்ல அது ஒரு தவம் ஒருமுறை நாம் வாசிப்பின் சுவையை உணர்ந்துவிட்டால் அது நம்மை விடாது.

எழுத்துக்களைக் கொண்ட வார்த்தைகளையும் வார்த்தைகளைக் கொண்ட பக்கங்களையும் பக்கங்களைக் கொண்ட தொகுப்பையும் கொண்டது தான் புத்தகம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# காங்கேசன்துறைப் பட்டினம்



தூங்கா நகரம் என அழைக்கப்படும் காங்கேசன்துறையானது எவ் வேளையிலும் சன நடமாட்டம் கொண்ட ஒரு பிரதேசமாக அமைந்திருந்தது. அதற்கு பல உதாரணங்களை சொல்லலாம். அவையாவன, காங்கேசன்துறை சீமெந்து தொழிற்சாலை, காங்கேசன்துறை துறைமுகம், காங்கேசன்துறை புகையிரத நிலையம், காங்கேசன்துறை வைத்தியசாலை இவற்றுள் முதன்மை பெறுவது காங்கேசன்துறை சீமெந்துத் தொழிற்சாலை ஆகும்.

1948ஆம் ஆண்டு அப்போதைய தொழிலமைச்சராக இருந்த கௌரவத்திற்குரிய ஜி.ஜி.பொன்னம்பலம் அவர்களால் சீமெந்துத் தொழிற்சாலைக்குரிய அடிக்கல் நாட்டப்பட்டது. அதற்குரிய வேலைகள் யாவும் பூர்த்தி எய்திய நிலையில் 1950 ஆம் ஆண்டு கௌரவ அமைச்சர் ஜி.ஜி.பொன்னம்பலம் அவர்களால் திறந்து வைக்கப்பட்டது. தினமொன்றிற்கு 350 மெட்ரிக் தொன் கிலிங்கர் (Clinker) உற்பத்தி செய்யப்பட்டது. காலப்போக்கில் (1962-1964) வரை 500 மெட்ரிக் தொன் கிலிங்கர் உற்பத்தி செய்யக்கூடிய சூளை (Kiln) அமைக்கப்பட்டு தினமொன்றிற்கு 850 மெட்ரிக் தொன் கிலிங்கர் உற்பத்தி செய்யப்பட்டது. இத் தொழிற்சாலையில் ஏறக்குறைய 1000-1500 வரையான தொழிலாளர்கள் நேரடியாக பணிபுரிந்தனர். இத் தொழில் சார்ந்து மேலதிகமாக பொருளீட்டும் முகமாக வெளியில் 3000 பேர் பணிபுரிந்தனர்.

இத் தொழிற்சாலையில் 3 நேரமுறைமாற்று வேலைகளும், ஒரு நேர் வேலைகளுமாக மொத்தம் 4 முறை மாற்று வேலைகள் நடைபெற்றன. அவையாவன, காலை 6.00 முதல் பி.ப 2.00வரை, பி.ப 2.00 முதல் இரவு 10.00 வரை, இரவு 10.00 முதல் காலை 6.00 வரை, காலை 8.00 முதல் மாலை 4.00 வரை. மேற்கூறிய முதல் 3 முறை மாற்று வேலைகளில் சீமெந்து உற்பத்திக்கான செயற்பாடுகளும், காலை 8.00 முதல் மாலை 4.00 வரையான காலப்பகுதியில் நிர்வாக கட்டமைப்புக்கான வேலைகளும் நடைபெற்று வந்தன. இங்கு தொழில் புரியும் பணியாளர்களுக்கு உதவும் முகமாக ஏறக்குறைய 6 km தூரத்திற்கு பின்வரும் நேரங்களில் சங்கொலி எழுப்பப்படும். அவையாவன காலை 5.45, காலை 6.00, காலை 7.45, காலை 8.00, பி.ப 1.45, பி.ப 2.00, பி.ப 3.45,பி.ப 4.00, இரவு 9.45, 10.00, அதிகாலை 5.45, 6.00. இவ்வேளைகளில் சைரன் ஒலி (Siren) எழுப்பப்படுவதால் காங்கேசன்துறை நகரமானது தூங்கா நகரமாக மாறிற்று.

ஆரம்ப காலத்தில் காங்கேசன்துறை புகையிரத நிலையத்திற்கு முன்பாகவுள்ள கடற்கரைப் பகுதி "ரேவடி" என்று அழைக்கப்பட்டு வந்தது. இங்கு தான்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வெளிநாடுகளிலிருந்து வரும் கப்பல்கள் அரசி, மா, சீனி, சர்க்கரை, ஏனைய பொருட்களைக் கொண்டு வந்து கடலில் தரித்து நிற்கும். அக்கப்பல்களிலிருந்து பொருட்களை இறக்குவதற்காக தோணி, வள்ளம் ஆகியவற்றைப் பயன்படுத்தி இரவு பகலாக பொருட்களை இறக்கி கரைக்கு கொண்டு வந்து சேர்க்கும் பணி நடைபெறும். இச் செயற்பாடுகளுக்காக 500க்கும் மேலான தொழிலாளர்கள் பயன்படுத்தப்பட்டனர். இச் செயற்பாட்டினாலும், காங்கேசன்துறை நகரமானது எவ்வேளையிலும் சனநடமட்டம் மிக்க நகரமாக காட்சியளித்தது. காலப்போக்கில் துறைமுகமொன்றின் அவசியத்தை நோக்காகக் கொண்டு 1966ம் ஆண்டு அப்போதைய பிரதமர் கௌரவ டட்லி சேனநாயக்க அவர்களினால் அடிக்கல் நாட்டப்பட்டது. துறைமுகத்திற்கான வேலைகள் யாவும் பூர்த்தியானதும் 1977ம் ஆண்டு புதிய துறைமுகம் திறந்து வைக்கப்பட்டது. இதன் காரணமாக நாட்டின் நாலா பாகங்களிலிருந்தும் வெளிநாடுகளிலிருந்தும் பொருட்கள் கப்பலில் வந்தன. இவற்றினை மேற் பார்வை செய்வதற்காக இலங்கை சுங்கத்திணைக்கள அலுவலகமும் இயங்கியது.

அடுத்து எந்நேரமும் மக்கள் நடமாட்டத்துடன் இயங்கிக் கொண்டிருந்த ஒரு நிறுவனம் காங்கேசன்துறை புகையிரதநிலையமாகும். இங்கும் பல புகையிரதங்கள் புறப்பட்டு கொழும்பை சென்றடையும் வண்ணம் இயங்கியது. அந்த வகையில் காலை 6.00க்கும், பி.ப 2.00க்கும் கடுகதி புகையிரதமாக காங்கேசன்துறையில் இருந்து கொழும்பை நோக்கி புறப்பட்டு செல்லும் மாலை 6.10 மணிக்கு "தபால் புகையிரதம்" என அழைக்கப்படும் புகையிரதம் கொழும்பு நோக்கிப் புறப்பட்டு செல்லும். இதே வேளை 3 புகையிரதங்கள் கொழும்பிலிருந்து புறப்பட்டு காங்கேசன்துறையை வந்தடையும். பின்நாளில் இரவு 8.30 மணிக்கு நகர்சேர் கடுகதி புகையிரதம் என்றழைக்கப்படும் "இன்ரெர்சிற்றி (Intercity)"புகையிரதமானது யாழ்ப்பாணம், வவுனியா, அனுராதபுரம், பொலனறுவை போன்ற பிரதான நகரங்களில் நிறுத்தப்பட்டு 6 மணித்தியால கால இடைவெளியில் கொழும்பை சென்றடையும். இப் புகையிரத பயணங்களுக்காக யாழ்ப்பாணத்தின் பிற பிரதேசங்களிலிருந்து இருக்கைகளைப் பிடிப்பதற்காக காங்கேசன்துறை புகையிரத நிலையத்திற்கு மக்கள் வருவது வழக்கமாக இருந்தது.

அடுத்ததாக, காங்கேசன்துறையில் அமைந்துள்ள வைத்தியசாலை. 2வது இடமாக உலகப்போர் நடைபெற்ற காலப்பகுதியில் அமைக்கப்பெற்ற இவ் வைத்தியசாலையானது யாழ்ப்பாணம் பெரிய வைத்தியசாலைக்கு அடுத்தபடியாக இருந்த ஒரு சிறப்பு மிக்க வைத்தியசாலையாகும். காங்கேசன்துறை கடற்கரையோரமாக அமைக்கப்பட்ட இவ் வைத்தியசாலை நோயாளர்களுக்கேற்ப தூயகாற்றினைத் தந்த ஒரு வைத்தியசாலையாகும். அதன் காரணமாக காசநோய்க்குட்பட்ட நோயாளிகளும், சிகிச்சை பெறுவதற்காக ஒரு பிரிவு அமைக்கப்பட்டிருந்தது. பின்நாளில் இக் காசநோய்ப்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பிரிவானது மயிலிட்டியில் அமைக்கப்பட்ட காசநோய்க்குரிய வைத்தியசாலைக்கு இடமாற்றம் செய்யப்பட்டது. 2 வது உலகப்போர் காலப்பகுதியில் தேசப்படைகளின் கறுப்பு இன இராணுவ வீரர்கள் காங்கேசன்துறை வைத்தியசாலையின் ஒரு பகுதியில் தங்கியிருந்ததாக தகவல்கள் தெரிவிக்கின்றன. இதன் காரணமாகவும் காங்கேசன்துறை நகரமானது எந்நேரமும் மக்கள் நடமாட்டம் நிறைந்ததாகக் காட்சியளித்தது.

இது தவிர "கமலா டாக்கீஸ், இந்திரா டாக்கீஸ்" என இரு சினிமா கொட்டகைகள் இருந்தன. இக்கொட்டகைகளில் திரைப்படங்கள் காண்பிக்கப்படுவதால் காங்கேசன்துறையில் அதிக சன நடமாட்டத்தை காணக்கூடியதாயிருந்தது. காலப்போக்கில் இக் கொட்டகைகள் அற்றுப்போக "இராஜநாயகி திரையரங்கு, யாழ் திரையரங்கு" என 2 திரையரங்குகள் உருப்பெற்றன. இத் திரையரங்குகளில் மாலை 2.30மணி, 6.00மணி, இரவு 9.00 மணி என 3 காட்சிகள் தினமும் காண்பிக்கப்பட்டது. இதன் காரணமாக திரையரங்குகளில் திரைப்படம் பார்க்க வருபவர்களினால் காங்கேசன்துறை நகரமே நிரம்பி வழிந்தது.

அதுமட்டுமல்லாமல், காங்கேசன்துறை நகரமானது கலைத்துறையிலும், விளையாட்டுத் துறையிலும் பல சாதனைகளைப் புரிந்த நகரமாக மாற்றம் பெற்றது. அந்தவகையில் கலைத்துறையில் மங்காபுகழ் பெற்ற நடிகமணி.வி.வி.வைரமுத்து அவர்கள் உலகப்புகழ் பெற்ற ஒரு கலைஞராக உருவெடுத்தார். அவரது "வசந்தகான சபா" எனும் சபாவில் பல கலைஞர்கள் உருவானார்கள். அந்த வரிசையில் நடிப்புத்துறையில் வ.தி.செல்வராஜா அவர்களும், மிருதங்க துறையில் திரு.வி.வி.காசிநாதன், பி.திருநாவுக்கரசு அவர்களும், ஹார்மோனிய துறையில் திரு.அண்ணாவி நாகமுத்து அவர்களும் புகழ் பூத்த கலைஞர்களாக இருந்துள்ளனர். அதே போன்று அண்ணாவி நாகமுத்துவின் மகன் ரகுநாதன் அவர்கள் உலகம் போற்றும் பாடகராகவும், பிள்ளைநாயகத்தின் பேரன்களும், வரதராஜனின் மகன்களுமாகிய பானுதீபன், சுவர்ணதீபன் ஆகிய இருவருமே முறையே ஒக்டோபாட், கீபோர்ட் ஆகிய துறைகளில் உலகப் புகழ்பெற்று காங்கேசன்துறை மண்ணுக்கு பெருமை சேர்த்துள்ளனர்.

அது மட்டுமல்லாமல் விளையாட்டுத்துறையில் காங்கேசன்துறை ஐக்கிய விளையாட்டு கழகம், கரப்பந்தாட்ட விளையாட்டில் பல சாதனைகள் புரிந்து காங்கேசன்துறைக்கு பெருமை சேர்த்துள்ளது. அதே போன்று, காற்பந்தாட்டத்தில் காங்கேசன்துறை "யங்றோயல்" விளையாட்டு கழகம் பல சாதனைகள் புரிந்து காங்கேசன்துறைக்கு பெருமை சேர்த்துள்ளது. இவ்வாறு பல பெருமைகளைக் கொண்ட காங்கேசன்துறை நகரமானது 1990ம் ஆண்டு ஏற்பட்ட இராணுவ நடவடிக்கை காரணமாக அங்கிருந்து மக்கள் யாவரும் வெளியேறி காடு, பற்றைகளாக உருமாறியது. 2018ல் ஆண்டு இடம்பெற்ற மீள்குடியேற்றத்திற்கு பின்பு சில முன்னேற்றகரமான செயற்பாடுகள்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இடம் பெற்று வருகின்றது. இன்னும் விடுவிக்கப்படாத பல பகுதிகள் அங்கு காணப்படுகின்றன. அப்பகுதிகளும் விடுவிக்கப்பட்டு முழு மக்களும் குடியேற்றப்பட்டு காங்கேசன்துறை நகரமானது மீண்டும் தூங்கா நகரமாக மாறுவதற்கு இறையருள் வேண்டி நிறைவு செய்கின்றேன்.

**கி.மனோகரன்**
**தலைவர்**
**காங்கேசன்துறை சீமெந்து தொழிற்சாலை**
**முன்னாள் பணிப்பாளர் சங்கம்**
**காங்கேசன்துறை மக்கள் கலைஞர் அமைப்பு**

புரட்சிப்பாதையில் கைத்துப்பாக்கியை விட பெரிய ஆயுதம் புத்தகம் மட்டுமே

\- லெனின் -

புத்தகம் தொட்டுத் தொட்டுப் பார்த்தால் அது வெறும் காகிதம்
தொடர்ந்து படித்தால் அதுவே வெற்றியின் ஆயுதம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இரவோடு இரவாக

பலாலியிலே கந்தசாமி அண்ணை என்றால் தெரியாதவர் எவரும் இல்லை. அதிலும் "சவாரி கந்தசாமி" என்றால் எவரும் வீடுகாட்டுவார்கள். வென்று வரும் சவாரி மாடுகளின் சொந்தக்காரன் அதுமட்டுமல்லாது ஒரே கிணற்றடியில் 100 பரப்புக்காணி பெரியதோர் வீடு, பெரிய விவசாயி, கடும் முயற்சியாளன். அப்பிரதேச விவசாயிகளின் ஆலோசகரும் கூட. பத்தாவுக்கு ஏற்ற பதிவிரதை வள்ளியம்மா. இவர்கட்கு மூன்று பிள்ளைகள். பெரியதம்பி, சின்னத்தம்பி, நடுவில் பரிமளம். படிப்பிலே பெரிதாக சோபிக்காவிட்டாலும் தந்தையுடன் சேர்ந்து தோட்ட வேலைகள் செய்வதில் வல்லவர்கள். (புலிக்கு பிறந்தது பூனை ஆகுமா)

நான்காபுறமும் காணியை பாதுகாத்து நின்ற முள்முருக்கம் வேலி. அதன் உட்புறத்தே சுற்றிவர தென்னை, கமுகுகள், தேக்கங்கன்றுகள் இவற்றைச் சுற்றி இரண்டாவது பாதுகாப்பு அரணாக, கிழுவந்தடியில் படரவிட்ட பாகற்கொடி, பயிற்றங்கொடி, இராசவள்ளி, வெற்றிலை எனப் பல கொடிப்பயிர்கள், வீட்டைச்சுற்றி முக்கனி மரங்கள் வீடு செல்லும் பாதையின் இருமருங்கிலும் பலவர்ணங்களில் பூத்து குலுங்கும் ரோஜாச் செடிகள் இடையிடையே பலவகை குறோட்டன்கள், வீட்டுமுகப்பில் மல்லிகை, முல்லை, பூப்பந்தல். இப்பந்தலில் நடுவில் கந்தசாமி அண்ணை மதிய உணவு உண்டபின் இளைப்பாற சாய்மனைக் கட்டில். வீட்டின் பின்புறத்தே கறவை மாடுகள், கட்டும் மாட்டுத் தொழுவம், ஆட்டுப்பட்டி, வெங்காயம் தூக்குவதற்கு பெரிய கொட்டில் புகையிலை சிப்பம், நாற்று மேடைகள், 100 பரப்பும் ஏதோ பயிரினால் மூடப்பட்டு பச்சைக்கம்பளம் ஆக காட்சி மட்டுமல்லாது பழுத்த அல்லது அறுவடைக்கு தயாரான மஞ்சள் நிற இலைகள் ஆங்காங்கே பச்சைக் கம்பளத்தில் மஞ்சள் பூப்போட்டது போன்ற காட்சி மெய்சிலிர்க்க வைக்கும்.

இவ்வாறு சீரும் சிறப்புடனும் வாழ்ந்து வருகையில் 1986இல் பரிமளத்தின் திருமணம் நடந்தேறியது. "திருமணமாம் திருமணம்" என்று சொல்லக் கூடிய திருமணமது. பரிமளத்தின் கணவன் சின்ராசுவும் ஓர் இளம் விவசாயி (சாடிக்கு ஏற்ற மூடி) 500000 பணமும் 30 பவுண் நகை, வீடும் வளவும் தருவதாக பேச்சு. வீடு இல்லாத காரணத்தால் பரிமளம் புகுந்த மனையில் (உரும்பிராய்) வாழ்ந்து வரவேண்டிய சூழ்நிலை. இது கந்தசாமி, மனைவி, சகோதரர்கள் மனதில் வாட்டத்தை ஏற்படுத்தியது. இந்த வேளையில் எல்லைக் காணியின் உரிமையாளர் மாணிக்கம் தனது 35 பரப்புக் காணியை மகனை வெளிநாட்டு அனுப்ப விற்கப் போவதாகக் கூற கந்தசாமி அதை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வாங்கி அழகுற ஓர் வீடமைத்துக் கொடுக்கவே அவர்கள் குடும்பம் அங்கே குடியேறுகிறது.

எல்லோரும் ஒன்றாக இன்புற வாழ்ந்து வருகையில் 1987ம் ஆண்டு பரிமளம் ஓர் ஆண்மகனைப் பெற்றேடுக்க கந்தசாமி குடும்பமே ஆனந்தத்தின் உச்சத்தை அடைந்த வேளையில் ஓர் நாள் சின்ராசா சந்தைக்கு சென்று வருகையில் விமானக் குண்டுத்தாக்குதலுக்கு உள்ளாகி மரணத்தை எய்தவே முழுக்குடும்பமும் சோகமயமாகியது. மகளின் நிலையை எண்ணி கந்தசாமியும் நோயாளி ஆகிய நிலையில் 15.06.1990 மாலை வேளை நான்காபுறமும் துப்பாக்கிவேட்டு சத்தங்கள், மக்கள் செய்வது அறியாது திக்குத்திசை கெட்டு ஓட்டம் பிடிக்கின்றனர். ஏதோ விபரீதம் நிகழ்ந்து விட்டது என எண்ணிய பெரியதம்பி நோயாளியான தந்தையை தனது ரலிசைக்கிளிலில் ஏற்றிக்கொண்டு தெல்லிப்பளை நோக்கி விரைகின்றார். சின்னத்தம்பி தனது வயோதிப தாயையும் தமக்கை பரிமளத்தையும் பாலகன் மருமகனையும் அழைத்துக் கொண்டு மெல்ல மெல்ல தெல்லிப்பளை நோக்கி நகர்கின்றனர். அங்கே தமையனும் தந்தையும் ஓர் மரத்தின் கீழ் நிற்பதைக் கண்டு மனம் மகிழ்ந்தனர். வீதி நெடுகிலும் ஒரே சனத்திரள் திக்குத்திசை கெட்டு ஓடியதால் ஒவ்வொருவரும் தமது குடும்ப உறுப்பினரை தேடுகின்ற காட்சி வெளியில் வேலைக்கு சென்றவர்கள் தமது குடும்பத்தைத் தேடி அங்கும் இங்கும் அலைகின்ற காட்சிகள் பலர் எங்கு செல்வது என்ன செய்வது என்றறியாது தத்தளித்து நின்றனர்.

கந்தசாமி குடும்பத்தினர் மல்லாகத்தில் அவரின் உற்ற நண்பன் சுந்தரம் வீட்டுக்கு செல்லலாம் என முடிவெடுக்கின்றனர். நண்பர் சுந்தரத்தின் மனைவி பிள்ளைகளும் இன்முகத்துடன் வரவேற்று உணவளித்து உறங்க வைக்கின்றனர். எனினும் பெரியதம்பியின் மனம் மனை நோக்கியே திரும்புகிறது. அறுவடை பருவத்தை அண்டிவிட்ட இரண்டாயிரம் புகையிலை கன்றுகள், மூவாயிரம் கன்று வெங்காயம், பகுதி பகுதியாக நடப்பட்டிருந்த மிளகாய், கத்தரி தக்காளி, நாளை சந்தைக்கு கொண்டு செல்லவென நனைத்து விடப்பட்ட மரவெள்ளி, கரட், பீற்றூட், நாற்றுமேடைகள், கட்டிலே நின்ற கறவை பசுக்கள், கிணற்றில் பூட்டப்பட்டிருந்த ஊசிலிமெசின் என எண்ணம் நீள்கிறது. பொழுது விடிளவே வழமை போல சுந்தரத்தார் பத்திரிகை வாங்கி வருகிறார். கந்தசாமியும் சுந்தரம் இங்கே தா பார்ப்போம் என நடுங்கிய கையோடு மறுகையால் தனது மூக்கு கண்ணாடியை சற்று உயர்த்தி பிடித்தவாறு பத்திரிகையை பார்க்கவே பலாலி, மயிலிட்டி, காங்கேசன்துறை மக்கள் இடப்பெயர்வு, மரங்களுக்கு கீழும் பாடசாலைகளில் தஞ்சம், பலர் உறவுகளைத் தேடி அலைகின்ற அவலம், காலைக்கடன்களை நிறைவேற்ற முடியாமல் பரிதவிப்பு, மாற்று உடையில்லை, என்பது



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

போன்ற செய்திகள் முன்பக்க தலைப்புக்கள் கந்தசாமி இரவோடு இரவாக ஏதிலிகள் (Have Nothing) ஆகிவிட்டோமோ என்று எண்ணியவாறு சுந்தரத்தை திரும்பிப் பார்க்க நிலமையினை புரிந்து கொண்ட சுந்தரம் நாளை, நாளையிண்டைக்கு எல்லாம் சரிவந்திடும் என்கின்ற ஆறுதல் வார்த்தை மறுபக்கத்தில் பரிமளத்தின் மூன்று வயது பாலகன் அம்மா வீட்டுக்கு போவோம் என தாயின் சேலைத்தலைப்பை பிடித்துக் கொண்டு கதறி அழுத காட்சி எல்லோரையும் கவலையின் உச்சத்தை தொட வைத்தது.

நாட்கள் வாரங்களாகின, வாரங்கள் மாதங்களாகின எதுவும் நடத்தாகவில்லை. இருப்புக்களும் தீர்ந்து விடவே பெரியதம்பி மருதனார்மடம் சந்தையில் ஓர் சிறிய மரக்கறி வியாபாரமும், சின்னத்தம்பி பிறர் தோட்டத்தில் வேலை, செய்யும் கூலி தொழிலிற்கு செல்கிறார். பழகப் பழகப் பாலும் புளிக்கும், நித்தம் சென்றால் முற்றம் சலிக்கும் என்பது போல் சுந்தரத்தின் குடும்பம் நடந்து கொள்ள சின்னத்தம்பி வேலை செய்யும் தோட்டத்தில் மின்சாரம் பெறுவதற்காகவும் உபகரணங்களைப் பாதுகாத்து வைத்திருப்பதற்காகவும் ஓர் அறையும் அத்தோடு விசாலமான வெங்காய கொட்டிலும் இதனுடன் சேர்ந்த ஒரு பத்தியமைத்து மல்லிகை, முல்லை, பூப் பந்தலில் சார்மனையில் சுத்தமான காற்றினை சுவாசித்துக் கொண்டு இருந்த நிலமை மாறி கந்தசாமியும் குடும்பந்தினரும் அங்கே வாழத்துணிகின்றனர். (காலம் செய்த கோலமோ கடவுள் செய்த குற்றமோ) கலண்டரில் ஆண்டு முடிவடைகின்ற நடுநிசி நேரம் கந்தசாமி அண்ணை புலம்புகின்ற ஒலி கேட்கவே எல்லோரும் விழித்துக் கொள்கின்றனர்.

(தனது இளமைக்கால கனவுகள் கெக்கட்ட சிரிப்பு வள்ளியம்மையும் இடைக்கிடை கடந்த காலத்துக்கு செல்ல வைத்தது.) அதிகாலை நான்கு மணி மனைவிபிள்ளைகள் சூழ்ந்து நிற்க சவாரி கந்தசாமி அண்ணையின் உயிர் இவ் உலகை விட்டு விண் உலகு செல்கிறது. அன்றே மரணக்கிரியை இடம்பெற்று உடலை இறுதி யாத்திரைக்காக தயாரான வேளை வள்ளியம்மா சொந்த மனையிழந்தோம், சொந்த பந்தங்களைத்தான் இழந்தோம் என்று அடிக்கடி சொல்லுவியள் கொட்டுப்பள்ளம் சுடலையில் தீயிட்டு கீரிமலையில் எனது அஸ்தி கலைக்கப்பட வேண்டும் என்று பூவிழந்து பொட்டிறந்து நிற்கும் உமது மகளைப் பாரையா பாலகனைப் பாரையா. "இரவோடு இரவாக" இந்தநிலை உருவாகும் என்று எண்ணவில்லை என தலையில் அடித்தவாறு அழுத காட்சி கல் நெஞ்சம் கொண்டவர்களை கூட கண்ணீர் சொரிய வைத்தது.

இந்நிலையில் வன்னிக்கு இடப்பெயர்வு செல்ல அங்கேயும் சொல்லனா துன்பங்கள் அங்கே வள்ளியம்மை இறந்து போக பெரியதம்பி தமது குடும்பத்திற்காக



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பிரம்மச்சாரி ஆகிறார். சின்னத்தம்பி வன்னிப்பிள்ளையை திருமணம் செய்து ஓர் பெண் குழந்தைக்கும் இரு ஆண் குழந்தைக்கும் தந்தை ஆகின்றார். மனைவியின் சகோதரர்கள் வெளிநாடுகளில் இருந்தமையால் அவர்களின் நிலபுலன்கள் சின்னத்தம்பியை வந்தடைகிறது. கொடுக்கின்ற கடவுள் கூரையை பிய்த்துக் கொண்டு கொடுப்பது போல பெரியதம்பிக்கும் அதிஸ்டலாப சீட்டிழுப்பில் ஐம்பது லட்சம் ஜக்போட் பரிசு கிடைத்தது. இரவோடு இரவாக பெரும்புள்ளிகள் என்ற நிலை அடைகின்றனர். பரிமளத்தின் மகனுக்கும் சின்னத்தம்பியின் மகளுக்கும் திருமணம் நிகழ்கிறது. இருவரும் பட்டதாரி ஆசிரியர்கள்.

சொந்த மண்ணை விட்டு வெளியேறி 30 ஆண்டுகளின் பின் 2020ம் ஆண்டு வயோதிப வயதை அடைந்த கந்தசாமி அண்ணையின் பிள்ளைகள் பேரப்பிள்ளைகள், பூட்டப்பிள்ளைகள், தமது பூர்விக இடம் நோக்கி மாவிட்டபுரம் கந்தன் கோபுரத்தை தரிசித்தவாறு சொந்த வாகனத்தில் சொந்தப் பிரதேசத்துக்குள் உட்புகுந்தனர். முன்னால் இருந்த பெரிய தம்பி தனது இளம் சந்ததியினருக்கு ஆலயவரலாற்றைக் கூறிக்கொண்டு செல்லவே வாகனம் சீமெந்து பக்ரியை அடைய பரிமளம் இங்கே இருபத்து இரண்டு ரூபாவுக்கு சீமெந்து வாங்கித் தான் அப்பா எனக்கு வீடு கட்டியவர். குறுக்கிட்ட சின்னத்தம்பி பெமிற்றுக்கு பதினெட்டு ரூபா பக்ரி விசில் சத்தத்தை கேட்டுத்தான் நாங்கள் பள்ளிக்கூடம் போறனாங்கள்.

அயல் கிராம மக்கள் அனைவரும் அந்த விசிலை வைத்து நேரங்கணிப்பார், தொழில்புரிபவர்கள், வாகனம் காங்கேசன்துறை சந்தியை அண்மிக்க பெரியதம்பி பஸ்நிலையம், வெளிச்சவீடு, இடப்பக்கம் திரும்பினால் பொலிஸ் நிலையம், வங்கி, பிரதேசசபை அதன் நூலகம் விளையாட்டு மைதானம், இப்ப அந்தப்பக்கம் போக முடியாது என கூறவே வாகனம் வலப்பக்கம் திரும்பி செல்கிறது கடற்கரை ஓரமாக இருந்த பண்டகசாலை வலப்புறத்தே புகையிரத நிலையம் சற்று சென்றதும் பழைய காசநோய் ஆஸ்பத்திரி மயிலிட்டி மீன்பிடித்துறைமுகம் என பலவற்றைக் காட்டியவாறு வர்ணித்தவாறும் வாகனம் வலப்புறம் திரும்புகிறது. சிறிது தூரம் சென்றதும் வாகனத்தை நிறுத்துமாறு பெரியதம்பி சாரதிக்குப் பணிக்கின்றார். சின்னத்தம்பியும் பரிமளமும் அங்கலாய்கின்றனர்.

ஒரே இப்பிலிக் காடுகள் எனினும் ஓர் பனைமரத்தை வைத்துக் கொண்டு தமது காணியை அடையாளப் படுத்துகின்றனர். பெருமளவு நிலம் விமானநிலையத்திற்கு சுவீகரிக்கப்பட்டிருப்பதையும் ஏனைய பகுதிகளில் No Entry என்ற பெயர்ப் பலகை இடப்பட்டிருப்பதையும் கண்டு பரிமளத்தின் கண்ணிலிருந்து நீர் சொட்டுகிறது. வீடிருந்த



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இடமே தெரியாத அளவிற்கு தரைமட்டம் ஆக்கப்பட்டிருந்தது. பெரிய தம்பி சுட்டுவிரலால் தமது புதிய சந்ததியினர்களுக்கு காணியை எல்லைப்படுத்திக் காட்டியவாறு பெருமூச்சுடனும் பழைய ஞாபகங்களுடன் வாகனத்தில் ஏறி சொந்தமனை நோக்கி மன்னிக்கவும் வாழ்விடம் நோக்கி திரும்புகின்றனர். "இரவோடு இரவாக"

இது ஓர் கந்தசாமி அண்ணையின் கதை இப்படி எத்தனை எத்தனையோ கந்தசாமிகள்.

**திரு.பசுபதிநாதன்.மகேசன்**
**முகாமைத்துவ சேவை உத்தியோகத்தர்,**
**வலிவடக்குப் பிரதேசசபை,**
**காங்கேசன்துறை**

**எழுத்துக்களும் உயிர் பெற்று வாழ்வது வாசிப்பவரும் நேசிப்பவரும் உள்ளவரை**

**அறியாமை என்ற இருட்டில் இருந்து அறிவு என்ற வெளிச்சத்திற்கு கொண்டு வரும் வழிகாட்டியே புத்தகங்கள்**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பெரியோர்களே இளையவரின் வழிகாட்டி

"தலைமையை மதிக்காதவன் தலைமை வகுக்க தகுதியற்றவன்" 1990க்கு முற்பட்ட காலம்... அது ஒரு பொற்காலம். தங்கள் கிராம சனசமூக நிலையம், விளையாட்டுக்கழகம், கலை, கலாச்சாரம், பண்பாட்டு விழுமியம் என்பவற்றோடு வீர விளையாட்டக்கள் என ஏனைய கிராமங்களுக்கு முன்னுதாரணமாக, தனித்துவமாக வெளிக் கொணர்ந்து நிலை நாட்டுவதில் சாதனை படைத்தவர்கள் எமது பெரியோர்கள்.இலை மறைகாயாக இருக்கும், இளையவர்களை இனங்கண்டு, அவர்களின், கல்வி, கலை, விளையாட்டு போன்ற ஆளுமைகளை வளர்த்தெடுக்கும் அரும்பணிக்காக தங்களை அர்ப்பணித்து வாழ்ந்தவர்கள் எம் பெரியோர்கள். மாதா, பிதா, குரு, தெய்வம் எனும் வரிசையில், பெரியோர்களை மதித்து அவர்களின் வழிகாட்டலை ஏற்று, தேசிய வழியில் வாழ்ந்து, தான் சார்ந்த சமூகத்திற்கும் தமது உறவுகளுக்கும் பெருமை தேடித் தந்தவர்கள் அன்றை குருத்தோலைகள், இன்றைய காவோலைகள்.

இடப்பெயர்வு என்பது,தலைமைத்துவ பண்புகளை மழுங்கடித்து, தங்களது ஊரின் மகிமை, கலை, பண்பாட்டு விழுமியங்களைத் தொலைத்து தங்களின் "சுயத்தை" இழந்து நவீன "முகப்புத்தகத்தில்" மூழ்கியவர்களாக..."ரிக் ரொக்கில்"சுய புகழைத் தேடுபவர்களாக... இணைய ஆபாசத்தில் மெய் மறந்தவர்களாக... முகக் கவசமிட்டு "வாள் வெட்டுக்கலாச்சாரத்தில்" தன் இனத்தின் வாழ்வினை சிதைக்கும் ஈனர்களாக... இன்னும் பல சீரழிவுகளுக்கு இரையாகி மீள முடியாத சக்தியில், தவிக்கும் எங்கள் இளையவர்... இவர்களிடம், கருணை, காருண்யம், நன்மதிப்பு என்பவற்றை எதிர்பார்த்து காத்திருக்கும் எங்கள் பெரியார்கள், கேட்டு வாங்கும் நிலையில் பெருமதிப்பு...
எனினும் இவற்றைத் தாண்டி முன்னுதாரணமாகத் திகழும் பலர் "திரைகடல் மறந்து தொழில் நிமித்தம் வேற்றூரில்..." இப்படியானவர்களை பின்பற்றி வாழும் குருத்தோலைகளின் நிலை...? ஒவ்வொரு துறையிலும் அரச அதிகாரிகள் அர்பணிப்பான சேவையினை செய்து வருகிறார்கள். ஆனால்...? இவர்களின் சேவையினை பெற்று நற் பிரஜைகளாக வாழ எத்தனை பேர் தயாராக இருக்கிறார்கள்.

காவோலைகள் விழ குருத்தோலைகள் சிரித்துக் கொண்டே இருக்கும். பெரியவர்களே இன்றைய இளைஞர்களின் வழிகாட்டியும் மானசீகக் குருவும்.

**அருளானந்தம் அருள்பிரகாஸ் J.P**
**தலைவர்**
**திருவள்ளுவர் சன சமூக நிலையம் வள்ளுவர்புரம்**
**தையிட்டி கிழக்கு**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# போதைப் பொருள் பாவனையின் சீரழிவும் அதன் விழிப்புணர்வும்

இன்றைய சமுதாயம் எதிர்நோக்கியுள்ள மிகப் பெரிய சவால்களில் ஒன்றுபோதைப் பொருள் பாவனை ஆகும். பொழுது போக்கிற்காகவும் சிறிது நேரம் கிடைக்கும் அற்ப சந்தோசத்திற்காகவும் போதை என்ற மாயையை நம் இளம் சமுதாயம் தம்மை அறியாது பாவித்து "யானை தன் தலையில் தானே மண்போடுவது போல" தம்மைத் தாமே அழித்துக் கொள்கிறார்கள். இதன் மூலம் உயிரிழப்பு ஏற்படுவதோடு சமூகத்தில் பல சீர் கேடுகளையும் தோற்று விக்கின்றன. இந்த நிலையில் போதைப் பொருள் பாவனையை தடுத்து நிறுத்துவதுடன் அவை தொடர்பாக மக்களிடையே விழிப்புணர்வை ஏற்படுத்தி போதையால் ஏற்படும் சீரழிவை அடியோடு இல்லாதொழிப்பது மிகவும் அவசியம் போதைப் பொருட்களை பயன்படுத்தும் போது, தம்மை அறியாது அவற்றிற்கு அடிமையாகி நாளடைவில் போதைப் பொருள் பயன்படுத்தாது வாழ முடியாது என்ற இக்கட்டான நிலை ஏற்படும்.

புகையிலை, கஞ்சா, அபின், ஹெரோயின் போன்றவற்றை போதை அரக்கனாக குறிபபிடலாம். இவற்றுள் மதுபானம் அனைவராலும் பயன்படுத்தப்படும் ஒன்று மதுபானத்திற்கு அடிமையாகி அதனை பயன்படுத்துவோர். தவிர நாகரீக மோகத்தாலும் சமூக ரீதியாக தங்களுடைய செல்வச் செழிப்பைக காட்டிக் கொள்வதற்காகவும் போதைப் பொருள் பயன்படுத்துவோரும் உள்ளனர். சில வகையான போதைப் பொருட்கள் தடை செய்யப்பட்டுள்ளன. இவற்றுள் கஞ்சா, அபின் போன்றவை மிக மோசமான விளைவை ஏற்படுத்துவன. இவை கடுமையான சட்ட விரோதப் பொருட்களாக அமைகிறது. முற்காலங்களில் போதைப் பொருள் என்ற சொல்லையே யாரும் கேட்டறியமாட்டார்கள். தற்காலத்தில் ஒவ்வொரு வீதிகளிலும் காணப்படும் சிறுகடைகள் மற்றும் இடைத் தரகர்களாலும் புகையிலை, மதுபானம், சிகரட் மற்றும் நவீன வகைப் போதைப் பொருட்கள் போன்றன விற்பனை செய்யப்படுகின்றன.

இதைத் தடுப்பதற்காக கடுமையான சட்டதிட்டங்கள் இருந்தாலும் இதைக் கட்டுப்படுத்துவதற்கு மிகப் பெரிய சவாலாக இருக்கிறது. போதைப் பொருட்களை இல்லாமல் ஒழித்தால் மாத்திரம் போதையற்ற சமூகத்தை உருவாக்கலாம். இளம் சமுதாயமாக கருதப்படும் மாணவர்கள் போதைப் பாவனைக்கு அடிமையாக மாறி வருவது தற்போது பேசும் பொருளாக மாறியுள்ளது. மாணவர்கள் போதைவஸ்துடன் கைது செய்யப்படுவதுடன் போதைப் பொருள் பாவனையின் மூலம் சமூக விரோதச் செயல்களிலும் ஈடுபடுகின்றனர். தினமும் பத்திரிகை, மற்றும் சமூக வலைத்தளங்கள் போன்ற ஊடகங்களிலும் இச் செய்திகளை அதிகமாக காண முடிகிறது. போதைப் பொருள் முற்றிலும் இல்லாதொழிப்பதற்காக உலக நாடுகள் நடவடிக்கை எடுப்பதுடன்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மற்றும் போதைப் பொருள் இல்லாத சமூகத்தை உருவாக்குவது என்ற நோக்கத்துடன், ஆண்டுதோறும் ஜூன் 26ம் திகதி சர்வதேச போதைப் பொருள் ஒழிப்பு சட்டவிரோத கடத்தலை தடுக்கும் தினம் கடைப்பிடிக்கப்படுகிறது.

வீட்டில் வசிக்கும் போதைப் பொருள் பாவனையாளராலும் சிறுவர்களின் போதைப் பழக்கத்திற்கும் அடிப்படை காரணமாக அமைகின்றது. வீட்டில் வசிக்கும் யாராயினும் ஒருவர் போதைப் பொருள் பாவனைக்கு அடிமைபட்டவராக இருத்தல், அவ் வீட்டில் இருக்கும் சிறுவர்கள் அதனைப் பயன்படுத்த தூண்டப்படுகிறார்கள்இவர் தம் வீட்டில் இருக்கும் சிறுவர்களிடம் சிகரெட், மதுபானம் போன்றவற்றை வாங்கி வருமாறு பணம் கொடுப்பது மற்றும் வீட்டிலிருப்போர் முன் தகாத வார்த்தைகளை பேசுதல் போன்ற முறையற்ற செயல்கள் மாணவர்களை தவறான பாதைக்கு கொண்டு செல்கின்றது. அத்துடன் தற்போதைய இயந்திர உலகில் தந்தை, தாய் இருவரும் வேலைக்கு செல்வதால் பிள்ளைகள் மேலதிக பிரத்தியோக வகுப்புக்கள் செல்வது மற்றும் அதி நவீன விசேட கையடக்க தொலைபேசி போன்றவற்றாலும் பெற்றோர் பிள்ளைகளுடனான தொடர்பாடல் மிகவும் குறைவடைந்து செல்கிறது.

பிள்ளைகள் தம் அன்புத் தேவைகளை பூர்த்தி செய்ய தகாத சகபாடிகளை இணைத்து கொள்கிறார்கள். பணத்தைத்தேட பாடுபடும் பெற்றோர் தம் பிள்ளைகளை பாதுகாக்க தவறுகிறார்கள. இவ்வாறான செயற்பாட்டின் மூலம் போதைக்கு அடிமையாகி தம்மை இழக்கிறார்கள். இதனால் மன ரீதியான பாதிப்பு ஏற்படுவதுடன் பயம், ஞாபக மறதி, பதகளிப்பு, அதிக வியர்வை சோர்வு என்பன ஏற்படுகின்றது. கல்வி கற்பதில் சிரமம், கல்வியில் ஆர்வம் செலுத்த முடியாமை, கொலை, கொள்ளை, பாலியல் துஷ்பிரயோகம் மற்றும் வன்முறை போன்ற குற்றச் செயல்கள் இடம்பெற கிட்டத்தட்ட போதைப் பொருள் பாவனை முக்கிய காரணமாக காணப்படுகிறது. தொண்ணூறு வீதமான போதைப் பொருள் பாவனையாளர்களே செய்யத்தகாத செயற்பாடுகளில் ஈடுபடுகின்றனர்.

பெற்றோர்கள் தம் பிள்ளைகள் போதைப் பழக்கத்திற்கு அடிமையாகியுள்ளனர் என்று அறிந்தால் அவரின் மேல் குற்றம் சொல்வதோ தண்டனை வழங்குவதோ கூடாது மாறாக அவர்களை அரவணைத்து அப்பிரச்சினையில் இருந்து விடுபட வழிகாட்ட வேண்டும். வன்முறையாக தம் பிள்ளைகளை அணுகக் கூடாது. சமூகத்திலிருப்பவர்கள் அவர்களை ஒதுக்கி வைக்காது அவர்களை அப்பழக்கத்திலிருந்து மீட்டெழ, போதைப் பொருளுக்கு அடிமையானவர்களை மறுவாழ்வு மையத்துக்கு அனுப்பி தொடர்ச்சியான கண்காணிப்பினூடாக முற்றாக அதிலிருந்து வெளியேறி சமூகத்தில் நல்ல பிரஜையாக வாழ வழிகாட்ட முடியும். ஆனால் ஆளுவித்து போதைப் பொருள் பாவிப்பவர்களை சமூகம் ஒதுக்கி வைக்கும் போது சில வேளைகளில் வன்மம் அதிகரித்து,



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உறவுகளையே பாதிக்கும் வகைக்கு ஆளாகிறார்கள், தம் உடன் பிறப்புக்கள் உறவுகளையே யார் என்று தெரியாத அளவிற்கு போதைப் பொருள் மயங்க வைக்கிறது.

இன்றைய காலத்தில் கல்வி கற்கும் மாணவர்களை குறி வைத்து போதைப் பொருட்கள் விற்பனை செய்யப்படுகின்றன. உடலிலும் உள்ளத்திலும் பல்வேறான மாற்றங்களை ஏற்படுத்தும் பருவமே கட்டிளமைப் பருவம் அப்படிப்பட்ட வயதுடைய கட்டிளமைப் பருவ மாணவர்களுக்கு ஆசையை ஏற்படுத்தி தம் மாய வலைக்குள் சிக்க வைக்கிறார்கள் அதனை அறியாது இந்த வலைக்குள் சிக்கிக் கொள்கிறார்கள்.

எம் நாட்டில் போதை என்ற அரக்கனை இல்லாதொழிப்பதற்கு அனைவரும் ஒன்றிணைந்து போராட வேண்டும். பெற்றோர்கள் தம் பிள்ளைகளுடன் நேரத்தை செலவிட வேண்டும். கூட்டுக் குடும்பமாக வாழ பழக வேண்டும். தாத்தா, பாட்டி அரவணைப்புடன் வாழும் குழந்தைகளுக்கு அன்புத்தேவை, பாதுகாப்பு போன்றன பூர்த்தியாகிறது. அத்துடன் இரக்கப்பண்பு, உதவும் பண்பு போன்றனவும் உருவாகியது. தற்போது பெற்றோர் தம் பிள்ளைகளுக்கு வறுமை தெரியாது கேட்பவற்றை உடனடியாக பெற்றுக் கொடுப்பதால் பிள்ளைகள் தம் பெற்றோர்களை அச்சுறுத்தி தம் தேவைகளை பூர்த்தி செய்கின்றனர்.

பிள்ளைப்பாசம் காரணமாகவும் பிள்ளைகளை இழந்து விடுவோமோ என்ற காரணத்தாலும் தம் பிள்ளைகள் கேட்பவற்றை எல்லாம் பெற்றுக் கொடுக்கின்றனர். கண்டிப்பு என்பது இல்லாமல் வளர்கின்றனர். ஆசிரியர்களால் தண்டனை பெறாது வளர்க்கின்றனர். இதனால் பிள்ளைகள் தாம் செய்வது தவறு என்பதை உணர்வதற்கு வாய்ப்புக்கள் இல்லாது போகிறது. சிறு சிறு சாதனை புரிந்ததும் அளவுக்கு மீறிய பரிசுப் பொருட்களை தம் வசதிக்கு மீறி பிள்ளைகளுக்கு கொடுக்கின்றனர். அதி நவீன வசதி கொண்ட கையடக்க தொலைபேசி விலையுயர்ந்த மோட்டார் சைக்கிள் போன்றவற்றை வாங்கிக் கொடுப்பது வயது கூடியோருடன் நட்புக் கொள்வது போன்ற பல காரணங்களால் மாணவர்கள் பல தவறான வழிகளுக்கு தள்ளப்படுகின்றனர். நவீன அற்ப வசதிக்காகவும் சந்தோசத்திற்காகவும் தம் வாழ்க்கையை தொலைக்கின்றார்கள். இது தெரியாது தம் வாழ்வின் அழிவிற்கு தாமே குழி தோண்டுகிறார்கள் என்பதை அறிகிறார்களில்லை. உணரும் போது அவர்களே இல்லாமல் போய்விடுவார்கள். ஆகவே போதைக்கு அடிமையானவர்களை கண்டறிந்து அவர்களுக்கு விழிப்புணர்வு வழங்கி வாழ்வு அளிக்க வேண்டும். விற்பனையை தடைசெய்தால் மட்டுமே இதனை தடுக்க முடியும் ஒவ்வொரு மனிதனது உள்ளத்திலும் நற்சிந்தனைகள் மனித மனங்களில் பதிய வைத்து சீர்திருத்தங்களைச் செய்வதே ஆரோக்கியமான நிரந்தரமான தீர்மானம்.

**த.வைஸ்ணவி**
**தரம் - 10**
**யா/நடேஸ்வரக் கல்லூரி**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மயிலிட்டி காசநோய் வைத்தியசாலை

மயிலிட்டி காசநோய் வைத்தியசாலை இங்கிலாந்து மன்னர் ஜோச் அவர்களால் 1935ம் ஆண்டளவில் காசநோயாளர்களை தனிமைப்படுத்தி சூரிய ஒளியிலும் காற்றோட்டத்திற்கும் உகந்த இடமாக தெரிவு செய்யப்பட்டு உருவாக்கப்பட்டது. இக்காலத்தில் காசநோய்க்கு மருந்துகள் இல்லை. போசாக்கான உணவே கொடுக்கப்பட்டது. இலங்கையில் இது போன்ற வைத்தியசாலை வெலிசறையிலும் அமைக்கப்பட்டது. இதுவே இன்று தேசிய மார்பு நோய் வைத்தியசாலையாக உள்ளது. மயிலிட்டி வைத்தியசாலை 1990ம் ஆண்டு வரை இயங்கியது. இங்கு 118 நோயாளிகளுக்கு சிகிச்சை அளிக்கும் கட்டில் வசதிகள் இருந்தது. 2 வைத்தியர்கள், 2 சுவாச மருத்துவ நிபுணர்கள், 3 மருந்தாளர்கள், 8 தாதிகள் உட்பட சுமார் 50 இற்கு மேற்பட்டோர் கடமையாற்றினர்.

1990 இடம் பெயர்வின் பின் வைத்தியசாலையின் பிரிவுகள் சாவகச்சேரி வைத்தியசாலையிலும் கோப்பாய் வைத்தியசாலையிலும் மட்டுப்படுத்தப்பட்ட அளவில் இயங்கின. மார்பு நோய் வைத்தியசாலை மீண்டும் இயங்காமையில் வடக்குபகுதிக்கான சுவாச நோய் சிகிச்சை பின்தங்கி உள்ளது.

மருத்துவர்.சி.யமுனாநந்தா
முன்னாள் மாவட்ட
காசநோய்க்கட்டுப்பாட்டு அதிகாரி
பிரதிப்பணிப்பாளர்
யாழ் போதனா வைத்தியசாலை.

உலகின் மூலை முடுக்குகளுக்கெல்லாம் போக விரும்பினால்
ஒரு நூலகத்திற்குச் செல்

- டெஸ்கார்ட்ஸ் -

தலைகுனிந்து என்னைப் பார்! தலைநிமிர்ந்து உன்னை
நடக்க வைக்கிறேன்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பாலியல் துஷ்பிரயோகங்கள்

சமீபகாலமாக இலங்கை உட்பட உலகில் நாளுக்கு நாள் அதிகரித்து வரும் ஒரு சமூக பிரச்சினையாக பாலியல் துஷ்பிரயோகங்கள் இடம்பெற்று வருகின்றது இதனை மையமாகக் கொண்டு,

பாலியல் துஷ்பிரயோகம் என்றால் என்ன என்பது பற்றி ஆராய்வோமானால் ஒருவர் மீது அவரின் ஒப்புதலற்ற பாலியல் நடத்தையே பாலியல் துஷ்பிரயோகம் ஆகும். குற்றம் புரிகின்றவர் பலவந்தமாகவோ ஏதாவது ஒரு விடயத்தினை சாதகமாகவோ பயன்படுத்திக் கொண்டு (உதாரணம் - மதுஅருந்திய பின்) பாலியல் ரீதியில் செயற்படுதல் என்று குறிப்பிட முடியும். குற்றம் புரிபவரினால் அதிகார துஷ்பிரயோகம் செய்யப்படுகின்றது.

இவ்வாறான துஷ்பிரயோகங்கள் எவையென நோக்குவோமானால்.

- பாலியல் வன்புனர்வு
- பாலியல் நோக்குடன் அடிமைப்படுத்தல்
- கட்டாய பாலியல் தொழில்
- வலிந்து கர்ப்பமாக்குதல்
- கட்டாய இன விருத்தியை மேற்கொள்ளல்
- பாலியல் சார்ந்த கேலி, மிரட்டல்கள்
- கட்டாய கருக்கலைப்பு
- ஒரு பெண் அல்லது ஆண் குடும்பம் விரும்பாத ஒருவருடன் காதல் அல்லது உடலுறவு கொண்டார் என்பதற்காக வன்முறைக்கு உட்படுத்தல்.

போன்ற வன்முறைகளுக்கு உட்படுத்தியவர்கள் பின்வரும் பாதிப்புக்கு உள்ளாகின்றனர்.

- உடற்காயங்கள், இனப்பெருக்க உறுப்புக்களிற் கிழிவு, இரத்தப் பெருக்கு
- உயிரிழப்பு
- கர்ப்பமடைதல்
- உளவியல் ரீதியான பாதிப்புக்கள்
    - ✓ மனவேதனை
    - ✓ விரக்தி
    - ✓ பயம்
    - ✓ பதற்றம்
    - ✓ தன்னம்பிக்கை குறைவு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

- சமுதாயத்தில் ஒதுக்கி வைத்தல் இதனால் உடல் உள சமூக பிரச்சினைக்கு உள்ளாதல்

எவ்வாறு இவ்வாறான பாதிப்புக்குள்ளாக நேர்கின்றனவென நோக்குவோமானால்

- பலவீனமான வளர்ப்பு (அன்பு கிடையாமை)
- பெற்றோர் வெளிநாடு செல்லல்
- குடும்ப வறுமை
- பெற்றோரின் போதைப் பொருள் பாவனை
- தவறான நண்பர்களின் சகவாசம்
- இணையத்தை தவறாகப் பயன்படுத்தல்

மற்றும் இவற்றைக் கொண்டு எவ்வாறான முறையில் துஷ்பிரயோகங்கள் தூண்டப்படுகின்றதெனில்,

தொடுகை மூலம், இணைமோசடி, ஆபாச காட்சிகளை காண்பித்து பாலியல் புகைப்படங்களை சிறுவர், சிறுமிகளுக்கு காண்பித்து அதன் மூலம் பயமுறுத்தி தூண்டப்படுகின்றனர். மேலும் எவ்வாறான நபர்களால் பாதிப்புக்குள்ளாகின்றனர் அல்லது தூண்டப்படுகின்றனர் என பார்ப்போமானால்,

- பெற்றோர் திருமண பிரச்சினை அதாவது தாயார் மறுமணம் புரிந்த கணவரால்
- மாமா, சித்தப்பா, அயல் வீட்டு உறவினர்கள்
- தகாத நண்பர்கள்
- காதலர்கள்

இவற்றையெல்லாம் கருத்திற் கொண்டு இவர்களைப் பாதுகாப்பதற்காகவும் மேற்படி நபர்களை கட்டுப்படுத்தவும், பாதிப்புக்களை தவிர்க்கவும் சில நிறுவனங்கள், நபர்கள் முன்வந்துள்ளனர்.

பெற்றோர்கள் பாடசாலை ஆசிரியர்கள் மிகவும் முககிய பங்காற்றுகின்றனர் மற்றும் இவ்வாறான விடயங்களை கட்டுப்படுத்துவதற்கு சிறுவர் மகளிர் அபிவிருத்தி அமைச்சு சிறுவர் பாதுகாப்பு தொடர்பாக ஒரு தொலைபேசியெண்ணையும் வழங்கியுள்ளது. (1929) இதன் கீழ்,

- கிராம உத்தியோகத்தர்கள்
- பாடசாலை கண்காணிப்புக் குழு
- பொலிஸ் நிலையம்
- பிரதேச செயலக மகளிர் குழு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

- சிறுவர் நன்னடத்தை உத்தியோகத்தர்கள் தொடர்புபடுகின்றனர். இவர்கள் எல்லோருமாகச் சேர்ந்து பாலியல் துஷ்பிரயோகங்களுக்குள்ளாவதை தடுக்கும் வழிகள் மற்றும் புனர்வாழ்வு வழங்கும் முறைகள் பின்வருவனவற்றை மேற்கொண்டு வருகின்றனர்.
- சிறுவர்கள் பாலியல் துஷ்பிரயோக முறைகள், துஷ்பிரயோகம் செய்வோரிடமிருந்து பாதுகாத்துக் கொள்ளல் மற்றும் பாதுகாப்பு (நல்லதொடுகை, கெட்டதொடுகை) பற்றி சிறுவர்களுக்கு விழிப்புணர்வூட்டல்.
- சிறுவர்கள் பாலியல் துஷ்பிரயோகத்தினால் இலகுவில் பாதிக்கப்படும் தன்மையை குறைப்பதற்கும், சிறுவர்களின் ஆற்றல் சக்தியை (அவர்களில் காணப்படுகின்ற வெளியே தெரியாத பலம்) விழிப்படையச் செய்தல், திறன் விருத்தி, அதாவது ஆளுமை விருத்தி, பாலியல் கல்வி, சிறுவர்களின் அறிவு, மனப்பாங்கு திறன்களை விருத்தி செய்தல்.
- சிறுவர்களை தனியா வீடுகளில் விட்டுச் செல்லும் போது பாதுகாப்பான சூழலை உருவாக்கி விட்டுச் செல்ல அறிவூட்டல்.
- சிறுவர்கள் மற்றும் பெண் பிள்ளைகள் வாழும் சமூகசூழல், குடும்ப அங்கத்தவர்கள் தொடர்பில் பெற்றோர் எப்பொழுதும் புரிந்துணர்வுடன் நடவடிக்கை மேற் கொள்ள பெற்றோர்களுக்கு விழிப்புணர்வூட்டல்.
- சிறுவர் துஷ்பிரயோகம் தொடர்பில் காணப்படும் சட்டம் மற்றும் துஷ்பிரயோக தவறுகளுக்கான தண்டனை பற்றி சமூகத்துக்கு விழிப்புணர்வூட்டல்.
- குற்றவாளிகளுக்கு துரிதமாக விசாரணைகளை நடாத்தி மிக விரைவில் வழக்கை தீர்த்து தண்டனைகளைப் பெற்றுக் கொடுத்தல்.

இவ்வாறான செயற்பாடுகளினை முன்வைப்பதனால் பெரும்பாலும், பெரும்பாலான பாலியல் துஷ்பிரயோகங்களை தவிர்த்துக் கொள்ளலாம். எவ்வாறாயினும்,

**சமத்துவம் வந்ததென்று**
**சத்தமாய் கூறுகின்றனர்**
**பெண்ணை பெண்ணாக**
**பார்க்காமல் மனிதராய்**
**பார்ப்பது அக்காலம்.........**

நன்றி


**திருமதி.தர்ஷினி.கிறிஸ்ரி நிரஞ்சன்**
**(H.N.Dip.in Management, PGDE (Dis)**
**ஆசிரியர்**
**யா/நடேஸ்வரக் கல்லூரி**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# யா/நடேஸ்வரக்கல்லூரி

**பாடசாலை வரலாறு**



மருதமும் நெய்தலும் இணைந்தழகு கொழிக்கும் இயற்கை எழிலழகு மிக்கது காங்கேசன்துறை வரலாற்றுப் பெருமையும் புராணச்சிறப்பும் மிக்க மண். இம்மண்ணின் மைந்தர்கள் எழுத்தறிவு பெற்று இருளகற்றி அறிவொளி பெறுவதற்கு ஊருணி நீர் போன்று பெருந்துணையாற்றினார்கள். அந்நோக்கத்தில் ஈர நெஞ்சம் படைத்த பெரியோர், அறிவுக்கண்ணைத் திறக்கும் அரிய கலைக்கூடம் ஒன்றை இம்மண்ணில் அமைத்தனர். இதன் விளைவே கலைநலங்கள் எழில் பெறும் நடேஸ்வரக்கல்லூரி.

இப்பாடசாலை வரலாற்றுப் பிண்ணனியை 1901ஆம் ஆண்டிலிருந்து மதிப்பிடலாம். அதே ஆண்டில் இன்றைய கல்லூரி வீதியிலுள்ள நரசிங்க வைரவர் ஆலயத்துக்கு அருகில் ஆங்கில சுதேச மொழிப்பாடசாலை என்னும் பெயருடன் ஓர்கல்விக்கூடம் உருவாக்கப்பட்டது. இப்பணியைத் தொடக்கி வைத்தவர் தையிட்டி கிராமத்தில் வாழ்ந்த ஆறுமுகஉடையார் குடும்பத்தையே சாரும். இது இயங்கி வந்த வேளை சைவத்தமிழ் வித்தியாலயம் ஒன்று கனிஷ்ட வித்தியாலயம் அமைந்துள்ள இடத்தில் உருவாக்கப்பட்டது. வீமன்காமத்தை சேர்ந்த திரு.க.தம்பிப்பிள்ளை அவர்கள் இந்த அறப்பணிக்கு கால்கோள் நாட்டியவராவர்.

சிரேஷ்ட தராதரப் பத்திர வகுப்புக்கள் வரை இடம் பெற்று வந்தது. 1901ல் உருவாக்கப்பட்ட ஆங்கில சுதேச பாடசாலை நடாத்தும் உரிமையை ஆறுமுக உடையார் குடும்பத்திடமிருந்து திரு.க.தம்பிப்பிள்ளை அவர்கள் பெற்றுக் கொண்டார். அதனாலேயே இன்று நடேஸ்வரக்கல்லூரி இயங்கும் இடத்தில் ஆரம்ப ஆங்கில பாடசாலை உருவாயிற்று. காங்கேசன்துறையில் ஓர் நிர்வாகத்தின் கீழ் சைவத்தமிழ் வித்தியாலயம், ஆரம்ப ஆங்கில பாடசாலை ஆகிய இரண்டும் இயங்கின.

1924ல் ஆரம்ப ஆங்கிலப் பாடசாலை, இந்து ஆங்கிலப் பாடசாலை எனப் பெயர் பெற்றதோடு ஆரம்பப்பாடசாலை விடுகைச் சான்றிதழ் வகுப்பும் உருவாக்கப்பட்டது. 1945ல் இந்து ஆங்கில பாடசாலை நடேஸ்வரக்கல்லூரி எனப் பெயர் மாற்றம் செய்யப்பட்டது. 1949 இக்கல்லூரியுடன் தனியாக இயங்கி வந்த சைவத்தமிழ் கலவன் வித்தியாலயம் ஒன்றிணைக்கப்பட்டது. இப்பகுதி மக்களின் ஆதரவு ஆசிரியர்களின் அயராத உழைப்பு, சீரிய நிர்வாகத திறத்தாலும் இக்கல்லூரி முதல் தர பாடசாலையாக 1957ல் மிளிர்ந்தது. இதற்கு காரணமாக விளங்கியவர் அதிபரான உயர் திரு.வ.கந்தசாமி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அவர்கள். அரச நன்கொடை பெற்று தனியார் பாடசாலையாக திகழ்ந்த இக்கல்லூரி அரசினால் அங்கீகரிக்கப்பட்டது. 1979 கனிஷ்ட பிரிவு தனியாக பிரித்து தரம் 6 – 12 வரை வகுப்புக்களைக் கொண்டு நடேஸ்வரக்கல்லூரியாக இயங்கியது.

நகரக்கல்லூரிகளைப் போல இக்கல்லூரி வசதி படைத்ததல்ல. எனினும் தனது வசதிக்கமைய மாணவர் கல்வியை வளர்ச்சிப் பாதையில் இட்டுச் செல்கின்றது. ஆசிரியர் பற்றாக்குறை மத்தியிலும் மருத்துவம், பொறியியல், விஞ்ஞானம், வர்த்தகம் ஆகிய துறைகளுக்கும் ஆண்டுதோறும் பல்கலைக்கழகத்துக்கு அனுப்பி வைக்கின்றோம். மகாபொல புலமைப்பரிசில் பெறும் வாய்ப்பும் நமது மாணவர்களுக்கு கிட்டியுள்ளது. கல்வித்துறை விளையாட்டுத்துறையிலும் பல சாதனைகளை ஈட்டி வருகின்றது.

ஆன்மீகத்துறையில் ஈடுபாடு கொண்டவர்களாக இறைநம்பிக்கையின் உறைவிடமாக நமது கல்லூரி மாணவர்களுக்கு இப்பகுதி மக்கள் திகழ்கின்றனர். அப்பிரதேச மக்களுக்கு மட்டுமன்றி அயல்பிரதேச மாணவர்களும் கல்வி பெற வைத்து அவர்களுக்கு வாழ்வளித்த கல்லூரியாக சமூக ஏற்றத் தாழ்வுகளில் அப்பால் நின்று சமத்துவ ரீதியில் கல்வி நல்கும் கலைக்கூடமாக விளங்கி வருகின்றது. இக்கல்லூரி நாட்டில் ஏற்பட்ட யுத்த அனர்த்தம் காரணமாக 1990ம் ஆண்டு தனது சொந்த இருப்பிடத்தை விட்டு வெளியேறி ஸ்கந்தவரோதயா கல்லூரி கந்தரோடையில் தனியார் வீட்டில் இயங்கி மீண்டும் தெல்லிப்பழையில் உள்ள வைத்தியசாலைக்கு சொந்தமான விடுதி ஒன்றில் இயங்கி வந்தமை குறிப்பிடத்தக்கது.

2016.06.02 ஆம் திகதி மீண்டும் சொந்த இடத்தில் பாடசாலை இயங்கத் தொடங்கியது. க.பொ.த சாதாரண தரப் பரீட்சையில் சிறந்த பெறுபேறாக

**செல்வி.இ.மதிஸ்ரா 2017 8AB**

**செல்வன்.இ.கிருஸ்ணராஜ் 2018 9A(முப்பது வருட காலங்களின் பின் கிடைத்த சிறந்த பெறுபேறு)**சித்தியை பெற்றுக் கொண்டார்கள்.

2018 ஆம் ஆண்டு க.பொ.த உயர்தர கலை வகுப்புக்கள் ஆரம்பமாகியது. இதன் பெறுபேறாக 100% சித்தி வீதம், அத்துடன் இரு மாணவர்கள் பல்கலைக்கழகத்திற்கு தெரிவு செய்யப்பட்டார்கள்.

**செல்வி.ஞா.சத்தியா 2AB**

**செல்வி.இ.மதிஸ்ரா ABC**

2020 ஆம் ஆண்டு வர்த்தகப் பிரிவு ஆரம்பமாகியது. 2021ம் ஆண்டு விளையாட்டு மைதானத்தில் விளையாட்டு அரங்கு அமைக்கும் வேலைகள் ஆரம்பமாகி தற்போது நடைபெற்றுக் கொண்டிருக்கின்றது. வருடா வருடம் மாணவர் எண்ணிக்கை அதிகரித்துச் செல்வதனால் பாடசாலையின் பௌதிகவளத் தேவைகளும் மற்றும் வசதிகளும் அதிகரிக்கப்பட வேண்டியுள்ளது.

**யா/நடேஸ்வரக்கல்லூரி,காங்கேசன்துறை**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# IS SOCIAL MEDIA A CHALLENGE TO READING? DOES IT AFFECT STUDENTS?

The humans, of course, need entertainment to kill time or to get over the boredom of day to day life. Although there are many forms of entertainment, to those like peoples, Watching Television, Going to the movies, Listening to music, Dancing, Playing Sports, Surfing the internet, Playing Video games and Going out to eat are the ideal forms of entertainment. That is their favorite Past time and they Spend hours before the 'Idiotbox'.

Entertaining activities can refresh your mind and preserve your mental health as well as emotional Well-being. It will bring. It will bring happiness into your life. Some of these activates may even bring you closer to your friends and family members.

But to students like me or those who are out to increase or improve their knowledge, reading offers many Positive results. Social media, however advanced it is, can never replace books or the pleasures of reading. Past studies have found that Students who spend more time on social media sites are likely to demonstrate poor academic performance. This is because they spend times chatting online and making friends on Social media sites instead of reading books.

However, social media use van also negativity affect teenage, distracting their sleep, and exposing them to bullying rumor spreading. Unrealistic views of other people's lives and peer pressure. The risks might be related to how much social media teenagers use.

Students can develop reading habits thought, make reading a daily habit, Read in front of your child, create a reading space, Take trips to the library, Let your children pick what to read find reading moments in everyday life, Re-read favorite books and Learn more about how kids read Students reading ability van be affected by many factors including background knowledge, ability home environment. School experiences and interest level.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

There is no denying that social media has transformed reading habits around the world. However, it is important to avoid sensationalizing the phenomenon as the focus must be on adapting to the challenge as it develops.

People's imagination has no limit. The reader can also create many images in his mind. They can choose what is read remains more impressive in the mind than what is seen or heard. We have another merit in reading. We can choose the time. Social media something different at the sometime. These does not happen when it comes to reading.

Today a Reader tomorrow a leader, There is loyal friend as a book, Education comes not from reading but from thinking about what they read. Social media can never be a challenge to reading. It is equally an enjoyable activity for leisure, pleasure and for improving ones knowledge. The habit of reading is one of the best qualities that a student can passes. Books are known to be your best friend for a reason. So reading is very important to develop the future leader's power.

**T.Srirajeevini.**
**Higher Diploma in Library**
**Information Science**
**SLLA.**
**Public Library**
**Kankesanthurai**

உனக்கு வரம் வர யாரோ இருந்த தவமல்லவா புத்தகங்கள்

- வைரமுத்து -



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மரம் வளர்ப்போம் பயன்பெறுவோம்

மரங்கள் நிலத்தோற்றத்தின் மிக முக்கிய அடிப்படை அம்சங்களாகும். அவற்றை பாதுகாக்க வேண்டிய பொறுப்பு நமது கடமை ஆகும். ஆனால் நாம் நம் சுயநலத்திற்காக மரங்களை வெட்டியும் காடுகளை அழித்தும் நம்மை நாமே அழித்து வருகின்றோம்.

அடுத்த தலைமுறைக்கு சொத்துச் சேர்த்து வைத்தால் மட்டும் போதாது அவர்கள் ஆரோக்கியமாக வாழ்வதற்கு நல்ல காற்றுத் தேவை அது மரங்களின் மூலம் தான் கிடைக்கும். எனவே அதற்கு செய்ய வேண்டியது மரம் வளர்ப்பது தான்.

"விசும்பின் துளி விழின் அவ்வாய் மற்றாங்கே பசும்புல் தலை காண்பது அரிது" என்கிறது உலகப் பொதுமறை. உலகில் உயிர்வாழ்வதற்கு மழை நீரே ஆதாரமாய் இருக்கின்றது. பூமிப்பந்து உயிர்க்கோளமாய் தொடர்வதற்கு மழை பெய்வதே அடிப்படைக் காரணமாகும். இயற்கையில் கிடைக்கும் தூய்மையான நீர் மழை நீரே. அதனைச் சேமித்து வைப்பது ஒவ்வொருவரின் கடமையாகும். தண்ணீரைச் சிக்கனமாகப் பயன்படுத்துவதோடு மழை நீரையும் சிக்கனமாகப் பயன்படுத்துவது அவசியமாகும்.

மரங்கள் பூமிக்கும் மனிதனுக்கும் பல நன்மைகளைத் தருகின்றன. மரங்கள் மனித உயிர்வாழ்க்கைக்கு ஆதாரமாக விளங்குகின்றன. மனிதன் சுவாசிக்கத் காற்றைத் தருபவை மரங்களே மனிதன் இளைப்பாற மரங்கள் நிழல் தருகின்றன. மரங்கள் வளிமண்டலத்திற்கு நீரை அனுப்பி மழையைப் பொழியச் செய்கின்றன. சூரியக் கதிர் வீச்சு வேகமான காற்றுப் போன்றவற்றில் இருந்து மனிதனைப் பாதுகாக்கின்றன.

மரங்கள் மண்ணைப் பசுமையாக்குகின்றன. விலங்குகளுக்கும் பறவைகளுக்கும் வாழ்விடமாகத் திகழ்கின்றன. நாம் பயன்படுத்தும் கதிரை, கட்டில் முதலான பொருட்களை உருவாக்கப் பயன்படுகின்றது. காய்கறிகள், தானியங்கள் முதலானவற்றைப் தருகின்றன. மரங்கள் எரிபொருளாகப் பயன்படுகின்றன.

மனித செயற்பாடுகளினால் காடுகள் அழிக்கப்படுகின்றன. சேனைப்பயிர்ச் செய்கை குடியிருப்புக்கள் அமைத்தல், நகரமயமாதல், தொழிற்சாலைகள் உருவாக்குதல் போன்றவற்றிற்காக மரங்கள் அழிக்கப்படுகின்றன. இதனால் மனிதகுலம் பல பிரச்சினைகளை எதிர்நோக்கி வருகின்றன. நிலச்சரிவு, நிலநடுக்கம் சூறாவளி வெள்ளப் பெருக்கு முதலான இயற்கை காரணங்களாலும் மரங்கள் அழிக்கப்படுகின்றன.

முற்காலத்தைப் போல் அல்லாது மனித குலம் மிகவும் மோசமான பாதையில் சென்று கொண்டிருக்கின்றது. மரங்களை வெட்டுவதே இன்றைய காலநிலை மாற்றத்திற்கு மிக முக்கிய காரணமாகும். பயிர் செய்யும் நேரத்தில் வறட்சியும் அறுவடை நேரத்தில் புயலும் வருகின்றன. வெப்பம் நாள்தோறும் அதிகரித்துக் கொண்டே இருக்கிறது. பயிர் நிலங்கள் தரிசு நிலங்களாகவும் ஆறுகள் வறண்டும் கிடக்கின்றன. இதனால் பறவைகளும் விலங்குகளும் பாதிக்கப்படுகின்றன.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மரங்களின் அழிவு மனிதர்களின் அழிவு என்பதை உணர்ந்து மரங்களை வளர்க்க வேண்டும். குறைந்தபட்சம் நாம் மருந்துச் செடிகளையாவது வளரக்க வேண்டும்.

எதிர்காலத்தில் தண்ணீரைப் போல் காற்றையும் பணம் கொடுத்து வாங்கவேண்டிய நிலை ஏற்படும். எனவே மரம் இல்லையேல் மனித இனம் இல்லை என்பதை உணர்ந்து மரம் வளர்ப்போம் பயன்பேறுவோம்.

ம.மிதுஷன்
தரம் - 06
யா/வீமன்காமம் மகாவித்தியாலயம்

புத்தகத்தை வாசிக்க தெரியாத ஒருவனுக்கும் வாசிக்க தெரிந்தாலும் வாசிக்காத ஒருவனுக்கும் வித்தியாசம் ஏதும் இல்லை

புத்தகத்தை திற உன் வாழ்க்கை விரியும் வாழ்வு திருவிழாவாகும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பிளாஸ்ரிக் பாவனையிலிருந்து விடுபடுவோம்

எமது அன்றாட வாழ்வினில் கைவிட முடியாமல் சேர்ந்திருக்கும் பிளாஸ்ரிக் பொருட்கள்,பொலீத்தீன் பைகள் உணவு பொதி செய்யப்பயன்படும் பொலித்தீன்கள் ஆகியவை தற்போது பாரிய சிக்கல்களைத் தோற்றுவித்துள்ளன. பிளாஸ்ரிக், பொலீத்தீன்கள் எத்தகைய பாதகமான விளைவுகளை எமக்கும், எமது சூழலுக்கும் ஏற்படுத்துகிறது எனத தெரிந்து கொள்வோமாயின் எமது வாழ்விலிருந்து முற்றாகப் பிளாஸ்ரிக் பாவனையைத் தடுக்க முடியும்.

இப்பிளாஸ்ரிக் பொருட்கள் இலகுவில் உக்குதலுக்கோ அல்லது பிரித்தழித்தலுக்கோ உட்படுவதில்லை. நானூறு தொடக்கம் ஆயிரம் வருடங்கள் பிரிந்தழியாமல் நமது சூழலில் காணப்படக்கூடியது. இவற்றினை மீள் சுழற்சிக்கு உட்படுத்த முடியுமெனில் நடைமுறைச் சிக்கல்கள், வர்த்தக ரீதியாக இலாபமின்மை, காரணமாக மீள் சுழற்சி முயற்சிகள் வெற்றியளிக்கவில்லை. எரித்தல் மூலமே சூழலிருந்து அகற்ற முடியும். ஆனால் எரிக்கும் போது உருவாகும் நச்சுப் புகையில் டைஒக்சீன் (C,H,O) என்றும் இராசயனப் பொருளை வெளியேற்றி நாம் சுவாசிக்கும் வளியை மாசடையச் செய்கின்றது. அத்துடன் எரிக்கும் போது பச்சை வீட்டு வாயுக்களை வெளியேற்றிப் புவியின் வெப்பநிலையை அதிகரிக்கின்றது.

பெற்றோலிய இரசாயனப் பொருளிலிருந்து உற்பத்தி செய்யப்படும் பொலித்தீன் பைகள் மீளவும் புதுப்பிக்க முடியாத வளமாகும். எமது சூழலைப் பாதுகாப்பதற்காகவும் பொலித்தீனை முற்றாகத் தவிர்ப்பது அத்தியாவசியமான தேவையாகவுள்ளது. சூழலுக்க நட்புத்தன்மையற்ற இப்பொலித்தீன்கள் பிளாஸ்ரிக் உணவுப் பொருட்களைப் பொதி செய்யப்பயன்படும் போது உலர் வெப்ப வலய நாடுகளில் பெறப்படும். வெப்பத்தினால் உணவுப் பொருட்களுடன் தாக்கமடைந்து உடலுக்குத் தீங்கு விளைவிக்கும் இரசாயனப் பதார்த்தங்களை உருவாக்குகின்றது.

பிளாஸ்ரிக் கொள்கலன்களில் அடைக்கப்படும் உணவு வகைகள் புற்றுநோய் உருவாக்கும் காரணியாகத் தொழிற்படுகின்றது. பிளாஸ்ரிக் பொருட்களின் கட்டமைமைப்பைப் பேணுவதற்காகச் சேர்க்கப்படும் தலேட்டுக்கள் என்னும் இரசாயனப் பொருட்களை மனித உடலின் ஓமோன் சமநிலையைக் குழப்பமடையச் செய்யும் நச்சுப் பொருட்களாகும். எமது சூழலில் வீசப்படும் பொலித்தீன் பைகள் நீர்க்கால்வாய்களை அடைத்து சூழலை மாசடையச் செய்வது மட்டுமன்றிக் குளம், வாவி, கடல், சமுத்திரம் போன்ற நீர் நிலைகளை அடைந்து சூழற்தொகுதியின் சமநிலையைக் குழப்பமடையச்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

செய்கின்றது. ஒரு இலட்சம் எண்ணிக்கையிலான கடல்வாழ் உயிரினங்கள், நீலத்திமிங்கிலங்கள், கடல்வாழ் முலையூட்டிகள், ஆமைகள், கடற்பறவைகள் இறப்பதற்கு இந்தப் பொலித்தீனே காரணமாகின்றது என அவுஸ்ரேலியப் பல்கலைக்கழக ஆய்வு கூறுகின்றது.

தொண்ணூறு வீதமான பறவைகளின் வயிற்றினுள் கால்நடைகளின் வயிற்றிலுள்ளும் செல்லப்பிராணிகளின் உடலினுள்ளும் இப்பொலித்தீன் பைகள் உணவுடன் சென்று மூச்சுத்திணறலை ஏற்படுத்துகின்றது.சிறு பிள்ளைகள் பொலித்தீன் பைகளுடன் விளையாடும் போது பொலித்தீன் மிகமெல்லியதாகவும் வளி உட்புக முடியாததுமாக இருப்பதனால் சுவாசப்பாதையை தடை செய்து உயிரிழப்பைக் கூட ஏற்படத்துகின்றது.

முன்னோர் பயன்படுத்தியது போன்று உணவுப் பொதி செய்ய வாழைஇலை,தாமரை இலை போன்றவற்றை பயன்படுத்துவது சிறந்தது. இவை சுகவாழ்விற்கும் ஆரோக்கியமானவை நுகர்வுத்தேவைக்காக பொருட்களை சேகரிப்பதற்கு இயற்கை நார்களினால ஆன துணிப்பைகள், நூற்பைகள், கடதாசி, காட்போட் பைகளைத் தேடிப்பயன்படுத்தல் ஆரோக்கியமானது இவை ஏற்கனவே நுகர்வுச் சந்தையில் அறிமுகமாகி விட்டாலும், எமது மக்களுக்கு பழைய பொலித்தீன், பிளாஸ்ரிக் பைகளைக் கைவிட மனமில்லை. இச்செயற்பாடு நாமே நமக்கு மண்ணை வாரி இறைப்பது போல் உள்ளது.

எமது முன்னோர் பயன்படுத்தியது போல மரத்தினால் ஆன சமையல் உபகரணங்கள், மரப்பலகை அகப்பை, கண்ணாடி மாபிள் பாத்திரங்கள், தும்பினால் ஆன பொருட்கள், பிரம்பினால் ஆன பொருட்கள் மீளவும் எமது அன்றாட வாழ்வுடன் பழக்கப்படுத்த வேண்டிய அவசியம் ஏற்பட்டுள்ளது.

ஏனெனில் இலகுவாகப் பயன்படுத்த எண்ணிய பொலித்தீன் பைகள். பிளாஸ்ரிக் பொருட்கள் பல தீங்குகளை எமது சுகவாழ்வுக்கும், எமது சூழலுக்கும் ஏற்படுத்துவதன் மூலம் எம்மைக் குட்டிச் சுவராக்குகின்றது. எம்மை அறியாமலே எமது உடலுக்குள் பல இரசாயன நச்சுப் பொருட்கள் அன்றாடம் ஊடுருவிப் பல புதிய நோய்களைத் தோற்றுவிக்கின்றது.

உலக நாடுகளின் பிளாஸ்ரிக் பொருட்களின் நுகர்வுச் சந்தைப்படுத்தலுக்கு இலங்கை, தாய்லாந்து, கொரியா, மலேசியா போன்ற நாடுகள் கட்டாயப்படுத்தப்படுகின்றது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நாமாகவே முன்வந்து எமது சுகவாழ்வையும் சூழலையும் பாதுகாக்காவிடில் எமது எதிர்கால சமூகம் இருந்த இடம் தெரியாமல் போகும் நிலை உருவாகும். எனவே இயற்கையை நேசித்து எமது முன்னோர் பயன்படுத்திய இயற்கையான நட்புள்ள பொருட்களையும், வழிமுறைகளையும் வலிந்து பயன்படுத்தக் கற்றுக் கொள்வோம். இயற்கையின் சமநிலையைக் குழப்பாமல் வாழ எமது வாழ்க்கை முறைகளை விரும்பி நாமே மாற்றிக் கொள்வோம்.

**செயற்கை உலகைச் செயலிழகச் செய்வோம்.**
**இயற்கை உலகை வலுவேற்றம் செய்வோம்.**

ட.கனுஸ்கா
தரம் - 07
யா/வீமன்காமம் மகாவித்தியாலயம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வாசிப்பை ஊக்குவித்தல்

வாசிப்பு என்பது எமது வாழ்வியலோடு பின்னிப்பிணைந்துள்ளது "வாசிப்பு மனிதனை பூரணப்படுத்தும்" "வாசி பின் யோசி" "நூல்கள் நமது கண்கள்" போன்ற பொன்மொழிகள் எல்லாம் வாசிப்பின் முக்கியத்துவத்தை எடுத்துவிளக்குகின்றது. நமது முன்னோர் வாசிப்பின் முக்கியத்துவத்தை அறிந்து நூல்களை தமது அடுத்த பரம்பரைக்கும் விட்டுச்சென்றனர்.

ஆனால் இன்றைய இளைஞர்களும், மாணவர்களும் நவீனசாதனங்களின் பாவனை அதன் ஈர்ப்பு சக்தியினால் வீழ்ந்து விட்டார்கள். வாசிப்பில் ஈடுபாடு காட்டாத நிலையினைக் காண்கின்றோம். நம் முன்னோர்கள் புத்தகங்களை தமது கையில் வைத்திருந்தார்கள் ஆனால் இன்று எல்லோருடைய கையிலும் தொலைபேசியுடன் இருக்கின்றார்கள். சாதாரணமாக வெளிவரும் பத்திரிகைகளின் பெயர்கள் கூட தெரியாத நிலையில் உள்ளனர். இது மிகவும் வேதனைக்குரிய விடயமாகும்.

வாசிப்பு பழக்கத்தை தூண்டுவதற்கு பாடசாலைகளுக்கு மட்டுமல்ல பெற்றோர்களுக்கும் கணிசமான பங்குண்டு அவ்வாறாயின் சிறந்த சமூகம் ஒன்றை கட்டியெழுப்ப முடியும். ஒரு மனிதன் இருக்கும் இடத்தில் இருந்து கொண்டே உலகை சுற்றிப்பார்க்கும் வல்லமை கொண்டது. நூல், அத்தகைய நூல்களை நாம் தேடிக்கற்றுக் கொள்ள வேண்டும். வாழ்வில் "தேடல்" என்பது மிகவும் முக்கியமான ஒன்றாகும் தேடல் உள்ள உயிர்களுக்கே தினமும்பசியிருக்கும். உண்மையிலே இன்றைய இளைஞர்கள். மாணவர்கள் சமூக வலைத்தளங்கள் மூலமும் திசைமாறிச் செல்கின்றனர். அவர்களுக்கு வாசிப்பின் முக்கியத்துவத்தை உணர்த்துவது மிகவும் அவசியமானதாக உள்ளது.

ஆசிரியர் தனது வகுப்பிலே தனது பாட நேரத்திற்குள்ளேயே மாணவர்களின் வாசிப்பு திறனை வளர்க்க முடியும். வாசிப்புத் திறன் மிக்க மாணவர்களைக் கொண்டு வாசிப்புத்திறன் குறைவடைவோரை வழி நடத்திடலாம். ஆசிரியர்களின் தூண்டுதலே மாணவர்களின் வாசிப்புத் திறனை வளர்த்திடும்.

இன்றைய மாணவர்களுக்கு வாசிப்புதிறன் என்பது மிகவும் அவசியம். மாணவர்கள் வீட்டில் உள்ளபோதே கூட சிறிய புத்தகங்களை வாசிக்க வேண்டும். இதற்கு பெற்றோரால் உதவ முடியும். வாசிப்புப் பழக்கத்தை ஆரம்பிப்பவர்கள் சிறிய நீதிக்கதைகள், நன்னெறிக்கதைகள், சிறுகதைகள், பத்திரிகைகள் போன்றவற்றை வாசிக்க பழக வேண்டும். வாசிக்கும் போது உரக்க படிக்க வேண்டும் இதன் மூலம் வாசிப்பு திறனை அதிகரிக்க முடியும். நீதி நெறி வகுப்புக்களை ஏற்படுத்தி அங்கே மாணவர்களுக்கு பலவகை நூல்களை வாசிக்க பழக்க வேண்டும்.

சுயமாக வாசிப்பது நல்ல பயனை தரும் சிறுவயதிலிருந்தே வாசிக்கும் பழக்கத்தை ஏற்படுத்திக் கொள்ள வேண்டும். சிறந்த நூல்களிலிருந்து நல்ல



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கருத்துக்களை பெற்றுக்கொள்ள வேண்டும். "அன்னப் பறவையைப் போல் நீரை விலக்கி பாலை அருந்துவது போல்" நமக்கு தேவையான நல்ல நூல்களை வாசிக்க வேண்டும். அறிஞர்களின் வரலாறுகள் போன்றவற்றை வாசிக்க வேண்டும். இதன் மூலம் தமது வாழ்க்கையினையும் செம்மைப்படுத்திக் கொள்ளலாம். வாசித்த பின்பு ஒரு விடயத்தை திறனாய்வு செய்ய வேண்டும். அப்போது தான் அதன் முழுமையை அடைய முடியும்.

மாணவர்களிடம் வாசிப்பு திறன் குறைந்தால் புதிய உத்திகளை கையாண்டு சிறந்த ஓவியங்களை வரைந்து அதனைப் பற்றி எழுதவிட்டு பின்பு அவற்றை கிரகித்து வாசிக்கவிடுவதன் மூலம் வாசிப்பை ஊக்குவிக்க முடியும். சிறந்த வாசிப்பு பழக்கத்தை ஊக்குவிப்பதற்கு குறைந்த பக்கங்களைக் கொண்ட புத்தகங்களை வழங்கி அவற்றை வீட்டில் படித்துவிட்டு அந்தக் கதையின் சாராம்சத்தை கூறுவதற்கு வழிப்படுத்துவதுடன் மாணவர்களுக்கு பரிசுகளை வழங்கி ஊக்கப்படுத்தலாம். இந்த நடைமுறையை வாராவாரம் மேற்கொண்டால் மாணவர்களின் வாசிப்பு திறனை அதிகரிக்கலாம்.

இத்துடன் நூலகங்களில் நாளிதழ்கள், வாரமலர்கள், மாத இதழ்கள் போன்றவற்றை வழங்கி வாசிப்பு திறனை அதிகரிக்க செய்ய முடியும். இதன் மூலம் சமூகப் போக்குகளை அறிந்து கொள்வதுடன், பொது அறிவையும் வளர்த்துக் கொள்கிறார்கள் என்பதில் எந்தவித ஐயமும் இல்லை. இவற்றோடு தினமும் வாசிக்கும் புத்தகங்களிலிருந்து குறிப்பேடு ஒன்றிலே நல்ல விடயங்களை குறிப்பெடுக்க செய்து ஆசிரியர்கள் அதனை பார்வையிட்டு ஊக்கப்படுத்தலாம்.

ஐரோப்பிய நாடுகளில் வாசிப்புப் கழகங்கள் காணப்படுகின்றன. நூல்களோடும், நூல்களோடு உறவாடிக் கொண்டிருப்பவர்களோடும் எமது உறவுகளை வளர்த்துக் கெள்ள வேண்டும்.

**"சிறந்த நூல் நல்ல நண்பன்"**

**"வாசிப்பை உயர்த்திவிடு வானுயர்ந்து நிற்பாய்"**

நன்றி

**திருமதி.பத்மவதனா சுதாகரன்**

**(B.A, PGDE)**

**ஆசிரிய நூலகர்**

**யா/நடேஸ்வரக் கல்லூரி**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இன்றைய மாணவர்களின் தொலைபேசி பாவனை
# கல்வியை சீரழிக்கிறதா? சீர்படுத்துகிறதா?

தற்போதைய சூழலில் மாணவர்களின் கல்வியில் தொலைபேசி பாவனை முக்கிய இடம் வகிக்கின்றது. உலகத்தையே உள்ளங்கையில் அடக்கி விடுகின்ற நவீனயுகத்தில் மாணவர்கள் கல்வியில் தொலைபேசியை ஒரு ஊக்கியாகச் செயற்படுத்துகிறார்கள். குறிப்பாக கொரோனா நோய்காலத்தில் மாணவர்கள் பாடசாலைக்கோ தனியார் வகுப்புகளுக்கோ செல்ல முடியாத காலத்தில் இழந்த கல்வியை இந்த தொலைபேசி ஊடாகவே செயற்படுத்தி அவர்களுக்கு நிகழ்நிலை வகுப்புக்களை நடாத்தி கல்வியை ஓரளவிற்கேனும் சிறப்பாகக் கொண்டு செல்ல கையடக்க தொலைபேசிகளே பெரிதும் உதவின. இதற்கு தற்போது வெளியிடப்பட்ட கல்விப் பொதுத்தராதர உயர்தர பெறுபேறுகளே சான்றாகக் காட்டப்பட்டுள்ளன. குறிப்பாக எல்லா மாவட்டங்களிலும் கணிசமான உயர்ந்த பெறுபேறுகளை மாணவசமூகம் பெற்றுக் கொண்டுள்ளமை குறிப்பிடத்தக்கதாகும்.

மாணவர்கள் கல்வியில் பெறுபேறுகள் குறையும் போதோ அல்லது பாடசாலைக்கு ஒழுங்காக பாடசாலைக்கு ஒழுங்காக வராத போதோ அதிபரினால் அல்லது ஆசிரியர்களினால் பெற்றோருக்கு உடனடியாகத் தெரியப்படுத்தி மாணவர்களின் பெற்றோரை விழிப்படையச் செய்து அவர்களுடைய கற்றலைச் சீராகக் கொண்டு செல்ல தொலைபேசிகள் பெரிதும் உதவுகின்றன. நாங்கள் பயன்படுத்தும் பொருட்களில் எவ்வளவு நன்மை இருக்கிறதோ அந்தளவிற்கு தீமையும் உள்ளது. அதனாலேயே நாங்கள் நன்மை கலந்த தீமைகளை அனுபவித்து வருகின்றோம். போர்க்காலச் சூழலிலும் யாழ்மாவட்டத்தின் கல்வி முதல் இடம் வகித்துள்ளது. அப்போது கைத்தொலைபேசி என்றால் என்ன வென்று அறியாத காலம் அந்த இடர் காலத்திலும் கூட மாணவர்களின் உயிர்மூச்சாகத் கல்வி முன்னிலை வகித்தது ஆனால் இன்றைய மாணவர்களின் கல்வியில் அலைபேசிகள் முக்கிய இடம் வகிக்கும் அதே வேளை துரதிஷ்டவசமாகக் கல்வியைச் சீர்குலைக்கும் தன்மையும் காணப்படுகின்றது.

மாணவர்கள் எவ்வாறு தொலைபேசியைக் கையாள்கிறார்களோ அதன் நன்மை தீமைகளை அவர்களே அனுபவிக்கிறார்கள். கல்வி சம்பந்தமான விடயங்களைக் கற்பதுடன் நிற்கும் மாணவர்களுக்கு தொலைபேசி நன்மை பயப்பதாகவும் தொலைபேசியில் இருக்கும் தேவையற்றோரின் தொலைபேசி உறவுகள் என்பன மாணவ சமுதாயத்ததைத் திட்டமிட்டுப் படுகுழியில் தள்ளும் செயற்பாடாகவே காணப்படுகின்றது.

மாணவர்கள் இணையவழி மூலம் கற்றலில் ஈடுபடாது பொழுது போக்காக விளையாட்டுக்களில் ஈடுபடுகிறார்கள். நாளடைவில் அதற்கு அடிமையாகிவிட அவர்களுடைய வாழ்க்கைப் பாதையே திசைமாறி போகிறது அவர்கள் பலவிதமான



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உளநல பாதிப்புக்களுக்கு உள்ளகி நோயாளிகளாக உள்ளார்கள். அடுத்து மாணவர்களை அழிக்கும் பேராபத்து இந்த போதைவஸ்து பாவனையே அதனை இந்த தொலைபேசி மூலம் தொடர்பு கொண்டு மாணவர்களுக்கு அதனை விற்பதற்கு முகவர்கள் இந்த தொலைபேசிகளையே கையாள்கின்றனர். யாழ்ப்பாண மாணவர்களின் பிரபல பாடசாலைகள் இதன் தளமாக இயங்குவதாக அண்மைய தரவுகள் சுட்டிக்காட்டுகின்றமை வேதனை தரக்கூடிய விடயமாக உள்ளது. குறிப்பாக மாணவ சமூகத்தை அழிக்கும் செயற்பாடகவே காணப்படகிறது. குறிப்பாக பெண் பிள்ளைகளும் போதைவஸ்து பாவனைக்கு உள்ளாகி இருப்பது வெட்கித் தலைகுனிய வேண்டிய விடயமாக உள்ளது.

பிரபல தனியார் வகுப்புக்களுக்கு செல்லும் மாணவர்களின் பெற்றோர்கள் அவர்கள் கேட்பதற்கு மேலான நிதியை வழங்குவதன் மூலம் இன்னோரன்ன விடயங்கள் மேற் கொள்ளப்படுகின்றன. அடுத்ததாக இத் தொலைபேசி பாவனையின் ஊடாக புதுப்புது நட்பு வட்டம் மாணவர்களிடையே உருவாகிறது. அந்நட்பு வட்டத்தின் ஊடாக பல பெண் மாணவர்கள் இழக்க கூடாதவற்றை இழந்து தற்கொலை என்ற செயற்பாட்டில் ஈடுபட்டு உயிரை விடுகின்ற நிலையும் ஏற்படுத்துகிறது. இதனால் தொலைபேசி பாவனை மாணவ சமுதாயத்திற்கு அடிக்கப்பட்ட “சாவுமணி” என்றே கூற வேண்டியுள்ளது. ஆனால் அவர்கள் தொலைபேசியை நல்ல விதமாகக் கையாளும் போது நன்மையும் அதனை தவறாகக் கையாளும் போது தீமையும் ஏற்படுகின்றது.

மாணவ சமுதாயம் கல்வியில் மேம்பாட எந்தளவிற்கு தொலைபேசி உதவுகின்றதோ அதே அளவிற்கு கல்வியில் கீழ் நிலையடையவும் இந்த தொலைபேசி தொல்லை பேசியாக மாறி உள்ளமை குறிப்பிடத்தக்கதாகும். நலிவடைந்துள்ள மாணவ சமூகத்திற்கு புத்துயிர் அளித்து புதுவாழ்வு படைக்க மாணவர்கள் நல்ல பல தகவல்களை பெற்று கல்வியில் சிறந்து ஆற்றலுள்ளவர்களாக மிளிர வேண்டும்.

சி.குமரன்
தரம் - 11
யா/நடேஸ்வரக் கல்லூரி.

உண்மையான வாசகர் வாசிப்பதை முடிப்பதே இல்லை
- ஆஸ்கார் வைஸ்ட் -



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மொழியும் பண்பாடும்

ஒரு இனத்திற்கு மொழியுடன் கூடிய பண்பாடு அவசியமாகும். மனிதன் தனது கருத்தை வெளிப்படுத்துவதற்குக் கிடைத்த ஒப்பற்ற கருவி மொழியாகும். இத்தகைய மொழியே சமூகத்தின் பண்பாட்டுக் கூறுகளில் ஒன்றாக விளங்குகின்றது. ஒரு மனிதன் தனி ஒருவரிடமோ அல்லது குழுமத்துடனோ தன்னுடைய கருத்துக்களைப் பகிர்வதற்காக எழுந்த மொழியானது வெறுமனே தொடர்பாடலுக்கான கருவி என்ற எண்ணக்கருவை தகர்த்து அந்த மொழிசார் இனக் குழுமத்திற்கான பண்பாட்டுத் தளத்தையும் இயக்குவிக்கின்றது என்றால் அது மிகையாகாது.

மொழி என்பது ஓர் இணைப்புக்கருவி என்பதோடு சிக்கலான தொடர்பாடல் முறைகளைப் பெறுவதற்கும் பயன்படுத்துவதற்குமான வல்லமையாகும். மனிதருடைய மொழிகளில் ஒலியும், கை அசைவுகளும் குறியீடுகளாகப் பயன்படுத்தப்படுகின்றன. இவ்வாறான ஒலிகளை எழுத்து வடிவமாக மாற்ற முடியும். ஆனால் சைகைகளை அவ்வாறு மாற்ற முடியாது. மனிதருடைய மொழிகளில் இக்குறியீடுகள் சொற்கள் என்றும் அவற்றைக் கையாள்வதற்கான விதிகள் இலக்கணங்கள் என்றும் அழைக்கப்படும்.

மொழி ஒரு கருத்துப் பரிமாற்றக் கருவி எனக் கூறுவது முழுமையாகக் கூறப்படாத ஒரு விளக்கமாகும். மொழி அதைப் பேசுகின்ற இனத்தின் அரசியல், பண்பாடுகள் போன்ற பல வாழ்வியற் கூறுகளையும் பண்பாட்டு நிலைகளையும் வெளிப்படை விளக்கமாகவும், உள்முகச் செய்திகளாகவும் கொண்டு விளங்குகின்றது.

இத்தகைய மொழி பிறப்பு, இறப்பு, வளர்ச்சி, இடப்பெயர்ச்சி மற்றும் காலத்திற்கேற்ற மாற்றம் என பன்முகம் கொண்டது. எந்த ஒரு மொழி மாற்றத்திற்கோ மேன்மையுறுதலுக்கோ இடங்கொடாமல் இருக்கிறதோ அம்மொழி இறந்த மொழி எனப்படும். மாறாக எந்த ஒரு மொழி தொடர்ந்து காலத்திற்கேற்றாற் போல் தனக்குள் மாற்றத்தை ஏற்றுக் கொள்கின்றதோ அம்மொழி வாழும் மொழியாகக் கருதப்படும்.

மக்கள் நாகரீகத்தின் உயர்ந்த நிலையே பண்பாடு எனலாம். பண்பாடு ஒரு குழுவின் வரலாறு, போக்குகள், பண்புகள், புரிந்துணர்வுகள், அறிவு பரம்பல்கள், வாழ்வியல் வழிமுறைகள், சமூக கட்டமைப்பு என்பவற்றை சுட்டி நிற்கின்றது. மொழி உணவு, இசை, சமய நம்பிக்கைகள், தொழில்சார் தெரிவுகள், கருவிகள் போன்றவை பண்பாட்டில் அடங்கும்.

மொழிக்கு இலக்கணம் வகுத்த தமிழர்கள் மனித வாழ்வியலுக்கும் இலக்கணம் வகுத்து வாழ்ந்து வந்தனர். தமிழர்களின் பண்பாடு தாய்மொழியான தமிழ்மொழி என்று கூறலாம். தாய் மொழியான தமிழ்மொழியைப் பேணுவதே தமிழர்களின் பண்பாட்டில் மேலானதாகும். காலந்தோறும் அழியாமல் வழங்கப்படும் தமிழ்ப்பழமொழிகள் முன்னோர்களின் மட்டறிவையும்,அறிவுரைகளையும், எச்சரிக்கைகளையும் தாங்கி வரும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பண்பாட்டுக் கருவூலங்களாகவும் காட்சியளிக்கின்றன. தமிழ் மொழியும் ஒரு பண்பட்ட மொழி என்பதோடு அதன் இலக்கண வழக்குகளும், சொற்களும், பழமொழி போன்றவைகளும் தமிழர் பண்பாட்டை வெளிக்காட்டக் கூடியன.

மொழியும் பண்பாடும் ஒன்றோடு ஒன்று பின்னிப் பிணைந்தவை. மொழியைப் பேசும் இனம் அதைச் சார்ந்த பண்பாட்டின் படி செயற்படும். பண்பாடானது மொழியின் கூறு என்பதால் பண்பாடு சிதைந்தால் மொழியும் சிதையும் எனலாம். எனவே நம் பண்பாட்டை காப்போமானால் மொழியையும் காக்க முடியும் எனலாம்.

க.கோபிகா
வலி வடக்கு பிரதேசசபை
உப அலுவலகம்
காங்கேசன்துறை

**ஒருவனை எந்த காலத்திற்கும் கொண்டு செல்லும் வலிமை புத்தகங்களுக்கு மட்டுமே உண்டு**

**புத்தகம் பேசும் மொழி நல்ல வாசகனுக்கு மட்டும் தெரியும்**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# போதை ஒழிப்பு

இன்றைய காலகட்டத்தை எடுத்து நோக்கும் போது இந்த போதைவஸ்து கலாச்சாரமாக பரவலடைந்து காணப்படுகிறது. யாழ்ப்பாண கல்விச்சமூகத்தை அச்சுறுத்தும் விதமாக இது காணப்படுகிறது. எமது நாடானது நாகரிக வளர்ச்சிப் பாதையில் செல்கின்ற அதே வேளை தொன்று தொட்டு நடைமுறையில் இருந்து வரும் சில தீய பழக்கங்கள் அதாவது மது, போதைவஸ்து, சிகரெட் பாவனை இன்று **ஆறு வயது தொடக்கம் அறுபது** வயது வரை வேரூன்றி நிற்பது கவலைக்குரிய விடயமே குறிப்பாக இளம் சமூகம் பற்றி கவலை கொள்ள வேண்டியுள்ளது.

முன்னைய காலகட்டத்தில் எமது நாடு சிறப்பான பொருளாதாரத்தையும் தளம்பல் இல்லாத அரசியல் காலகட்டத்தையும் கொண்டு அபிவிருத்தியடைந்த நாடாக வலம் வந்து கொண்டிருந்தது. ஆனால் இக்காலத்தில் இந்த போதைவஸ்து பாவனையால் இலங்கையின் கல்வி, பொருளாதாரம் அரசியல் போன்ற பல விடயங்களில் பின்னடைவான தன்மையை கொண்டிருப்பது கவலைக்குரிய விடயமாக உள்ளது.

குறிப்பாக யாழ்ப்பாண சமூகத்தின் நிலை பரிதாபகரமாக உள்ளது. சிறுவர்கள் முதல் பெரியவர்கள் வரை இந்த கொடிய போதைக்கு அடிமையாகி உள்ளனர். இந்த பழக்கத்தால் நாட்டின் வெவ்வேறான பிறழ்வான நடத்தைகளுக்கு ஆளாகி உள்ளனர். குறிப்பாக சிறுவர் துஸ்பிரயோகம், பெண்கள் மீதான வன்முறைகள் தற்கொலைகள் மற்றும் மோதல்கள் என்பனவும் ஏற்படுகிறது. இதனால் குறிப்பாக வாள்வெட்டுக் கலாச்சாரம், கோஷ்டி மோதல் என்பன ஏற்பட்டு பாதுகாக்கப்பட வேண்டிய உயிர்கள் காவு கொள்ளப்படுகிறது. கற்ற சமூகத்தினரிடையேயும் இந்த போதைவஸ்து பாவனை காணப்படுகிறது. தற்போதைய தரவுகளின் படி யாழ்ப்பாணத்தில் வைத்தியத்துறையை நிர்வகிக்கும் இரு வைத்தியரகளே போதைவஸ்து விற்பனையில் முகவர்களாக செயற்படுகின்ற செய்தி கவலையளிக்கிறது.

மேலும் இந்த போதைவஸ்து பாவனை சமூகத்தில் பல விதமான குடும்ப வன்முறைகளை தோற்றுவித்துள்ளது. இந்த வன்முறைகள் ஒரு நாட்டின் அரசியலில் பல தாக்கங்களை ஏற்படுத்தியுள்ளது. குறிப்பாக குடும்ப வன்முறையின் விளைவாக மாணவர்கள் பாடசாலைக்கு செல்லாமை அல்லது இடைவிலகல். இந்த பிரச்சினை பாடசாலைக் கல்வியில் பாரிய தாக்கத்தை ஏற்படுத்தியுள்ளது. இந்த இடைவிலகலே பின்னர் சமூகப்பிரச்சினையாக விஸ்வரூபம் எடுக்கிறது. இதனால் இளம் சமூகம் பாரிய விளைவுகளுக்கு முகம் கொடுக்கிறது. இவர்கள் கல்வியில் பின்னடைவை சந்திக்கும் அதேவேளை சமூகத்தில் ஒதுக்கப்பட்டவர்களாகவும், பொருளாதார வளம் குறைந்தவர்களாகவும் காணப்படுவதன் காரணமாக தற்கொலை மற்றும் போதைவஸ்து

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கடத்தல்காரர்களுடன் தொடர்பு போன்ற செயற்பாடுகளால் தங்களுடைய வாழ்க்கையையே இழந்து நிற்கின்றார்கள்.

இந்த போதைவஸ்து கலாச்சாரத்தை இந்த நாட்டில் இருக்கின்ற அனைவரும் ஒன்றிணைவதன் மூலம் இல்லாது ஒழிக்க முடியும் குறிப்பாக இந்த போதைப் பொருள் பாவனையை கட்டுப்படுத்துவதன் ஊடாக நாட்டின் அனைத்து செயற்பாடுகளையும் மேல் நிலையடையச் செய்யலாம். குறிப்பாக பாதுகாப்பு பிரிவினர என்பவர்களை ஈடுபடுத்தி விழிப்படையச் செய்து பின்னர் அதனை பிரதேசசெயலகங்களுடன் தொடர்புபடுத்தி பிரதேச செயலாளர் ஊடாக பிரதேச கலாசார சமூக சேவை உத்தியோகத்தர்களை களப்பயணத்தில் ஈடுபடுத்தி பாடசாலைகளில் விழிப்புணர்வை ஏற்படுத்துவதன் மூலம் ஓரளவு இப்பிரச்சினையில் இருந்து விடுபடமுடியும்.

மேலும் போதை பொருளுக்கு அடிமையானவர்களுக்கு புணர்வாழ்வு அளித்து அதாவது ஆன்மீக ரீதியான தியானம், மூச்சுப்பயிற்சி, யோகாசனம் என்பவற்றில் ஈடுபட செய்தல் வேண்டும். அடுத்து தொழில் ரீதியாக அவர்களை முன்னிலைப்படுத்துவதன் மூலம் அவர்களுக்கு சமூக அந்தஸ்தை ஏற்படுத்தலாம். மேலும் தொழில் பயிற்சிகளை வழங்குவதன் மூலம் அவர்களின் மனமும், மூளையும் வேறு செல்களுக்கு இடம் கொடாது தங்களுடைய தொழில்பாடுகளில் அக்கறை கொள்வார்கள். இதனால் தேவையற்ற செயற்பாடுகள் தவிர்க்கப்படும் இதன் மூலம் போதை ஒழிப்பில் விழிப்படைந்து சமூகத்தை பாதுகாத்துக் கொள்ளலாம்.

திருமதி.சு.பாலகுமார்
**B.F.A Dib.EDH M.A**
யா/நடேஸ்வரக் கல்லூரி.

**புத்தகங்களில் பலர் வாழ்ந்து கொண்டு தான்**
**இருக்கிறார்கள் அதைப் படிக்கும் போது தான் உன்னால்**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# போதையும் மீளெழுச்சியும்

அது ஒரு அழகிய கிராமம். கண்ணுக்கு எட்டியளவு தூரம் வரை வயல்வெளியும் அதற்கருகில் தாமரைப் பூக்கள் நிரம்பிய தாமரைக் குளமும் காண்போரைக் கவரச் செய்தது. இவ்வூரிலே வசித்து வருபவர் தான் நடராஜா. அவர் ஒரு கடின உழைப்பாளி விவசாயத்தையே நம்பியிருக்கும் ஒரு துடிப்பான விவசாயி. இவருக்கு இரண்டு பிள்ளைகள். ஒரு ஆண்பிள்ளையும் ஒரு பெண்பிள்ளையும். பிள்ளைகள் இருவருமே கல்வியில் கெட்டிக்காரர். ஆண்பிள்ளை ரகுவரன் உயர்தரப் பரீட்சையில் சித்தி எய்தி பல்கலைக்கழகத்திற்கு தெரிவாகி இன்று தான் முதல்நாளாக பல்கலைக்கழகம் செல்கிறான்.

மகளான வைதேகி க.பொ.த சாதாரண தரத்தில் கல்வி பயில்கின்றாள். நடராஜாவின் மனைவி கௌரி இரண்டு பிள்ளைகளும் பிறந்து நான்கு வருடங்களில் இறைவனடி சேர்ந்து விட்டார். வைதேகி சிறுவயதிலிருந்தே வீட்டு வேலைகள், தோட்ட வேலைகள் என்பனவற்றை தந்தையுடன் சேர்ந்து செய்யப் பழகிக் கொண்டாள்.

ரகுவரன் பல்கலைக்கழகம் சென்று வரத்தொடங்கி ஒரு வருடம் முடிவடைந்தது. இரண்டாம் வருடம் படிக்கத் தொடங்கிய காலத்திலே அவனுக்கு நண்பனாக சத்தியா அறிமுகம் ஆகிறான். ரகுவரனுக்கு சத்யா மூலம் வாகீசன், பரத் எனும் நண்பர்கள் அறிமுகமாகின்றனர். இவர்களுக்கு தவறான நண்பர்களின் சேர்க்கை மூலம் ஹெரோயின், அபின் முதலான போதைப் பொருள்களிற்கு அடிமையாகிறார்கள். இவர்களின் நட்புக்கு உரித்துடையவனாகிய ரகுவரனுக்கு இவர்கள் இனிப்பின் (Toffee) மூலம் போதைப் பழக்கத்திற்கு உள்ளாக்கினார்கள்.

ரகுவரனும் இப்போதைப் பழக்கத்திற்கு அடிமையாகிறான். போதைவஸ்துப் பொருட்களை வாங்குவதற்கு அதிக பணம் தேவைப்படுகிறது. இதனால் தன் வீட்டில் வைதேகியின் நகைகள், தந்தையின் பணம் என்று திருடி அவற்றின் மூலம் இப் போதைத் தேவையை பூர்த்தி செய்கிறார். காலம் செல்லச் செல்ல ரகுவரனின் தோற்றத்தில் மாற்றங்கள் ஏற்படுகிறது. தந்தையான நடராஜா இதனால் பெருவருத்தத்திற்கு உள்ளாகிறார்.

ரகுவரனுக்கு கல்வியிலிருந்த ஆற்றலும் குறைந்து போகிறது. தந்தையிடம் பணம் கேட்டு தொந்தரவு செய்யத் தொடங்குகிறான். ஒரு கட்டத்தில் தந்தை, மகன் செய்யும் செயல்கள் மூலம் ஹெரோயின் போதைப் பொருள் பாவிப்பதனை அறிந்து கொள்கிறார். தன்னுடைய மகனின் வாழ்க்கை தவறான பாதையில் செல்லாமல் இருக்க ரகுவரனை ஒரு மனநல மருத்துவரிடம் கூட்டிச் செல்கிறார்.

மருந்துவர் மூலம் சிறந்த மருத்துவ சிகிச்சையை பெற்றுக் கொண்டு அதன் மூலம் படிப்படியாக போதைப் பொருட்பாவனையிலிருந்து விடுதலை பெறச் செய்கிறார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அதன் பின் இழந்த கல்வியை மீண்டும் பெறச் செய்ய நூலகம் சென்று அவனது கல்வியை தொடருகிறான். தினமும் நூலகத்திற்கு சென்று நூல்களை வாசிக்கிறான். கல்வியில் முன்னிலை பெற்று பல்கலைக்கழகத்திலே முதல் வகுப்பில் (1st Calss) தேர்ச்சியடைகிறான்.

காலங்கள் உருண்டோடின. ரகுவரன் நல்ல ஒரு தொழிலில் பதவி வகிக்கிறான். வைதேகி உயர்தரப் பரீட்சையில் சித்தி எய்தி பல்கலைக்கழகம் தெரிவாகி கல்வி கற்கிறாள். அவளது கல்விக்கு தேவையான சகல உதவிகளையும் ரகுவரன் செய்கிறான். போதைப் பொருட் பாவனையினால் வாழ்வில் பட்ட துன்பங்களை இனிவரும் சமுதாயம் எதிர்கொள்ளமலிருக்க போதைப் பொருள் பாவனையால் ஏற்படும் இழப்புக்கள் பற்றி நூல்களை வெளியிட்டு மாணவர்களுக்கு நன்நடத்தை ஏற்பட அரும்பாடுபட்டார்.

போதைப் பொருட் பாவனையை ஆரம்பத்திலே கண்டு பிடித்து குணமடையச் செய்யலாம். ஆனால் காலம் கடந்த பின் மனநலம் பாதிப்பு அடைந்து தற்கொலை செய்து கொள்ள வேண்டிய நிலை தான் ஏற்படும். "**போதைப் பொருட் பாவனையை தவிர்ப்போம் சிறந்த சமூகத்தைக் கட்டி எழுப்புவோம்.**"

**செ.சுவேதா**
**வலி வடக்கு பிரதேசசபை**
**உப அலுவலகம்,**
**காங்கேசன்துறை**

**நூலகம் இல்லாத ஊரை நான் ஓர் ஊராக மதிப்பதே இல்லை**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உலகினிலே உயர்ந்த ஆசான் நூலகமே

உலகினிலே உயர்ந்த ஆசானும் அவனே
ஊர் எங்கும் நடமாடும் ஆசானும் அவனே
அன்புடனே வரவேற்கும் ஆசானும் அவனே
அரவணைத்து கற்பிக்கும் ஆசானும் அவனே
அமைதியை பறை சாற்றும் ஆசானும் அவனே
தரணியெங்கும் தனித்துவமாய் விழங்கும் ஆசானும் அவனே
ஆதி முதல் ஆலயத்தில் அவதரித்த ஆசானும் அவனே
அனைவருக்கும் மன அமைதியை உபதேசிக்கும் ஆசானும் அவனே
பட்டங்கள் பலவற்றை பெறச் செய்த ஆசானும் அவனே
பல பாவலரை படைத்திட்ட ஆசானும் அவனே
பாலர் முதல் பாட்டி வரை கற்பிக்கும் ஆசானும் அவனே
பல்கலைக்கழகம் முடித்த பின்பும் கற்பிக்கும் ஆசானும் அவனே
எதிர்பார்ப்பு எதுவுமின்றி எளிமையுடன் கற்பிக்கும் ஆசானும் அவனே
பக்குவமாய் பலதுறையின் பாடங்களை போதிக்கும் ஆசானும் அவனே
கோவில் இல்லா ஊரிலிலும் குடியிருக்கும் ஆசானும் அவனே
எம் குலப்பெயரை காத்து நிற்கும் எம் குலவிளக்கும் அவனே
மரத்தினிலே வாழ்ந்து வந்த மனிதகுலம் செவ்வாயில் இறங்க வைத்த ஆசானும் அவனே
வகுப்பறையில் கற்கமுன்பே கருவறையில் கற்பித்த ஆசானும் அவனே
மனமுடைந்த வேளையிலும் தன் போதனை ஆற்றிடும் ஆசானும் அவனே
போலியான வேசமின்றி போதிக்கும் ஆசானும் அவனே
என்னை உலகம் போற்றிடவே வாழவைத்த ஆசானும் அவனே
விஞ்ஞான உலகம்தனை உருவாக்கிய ஆசானும் அவனே
மனித இனத்தை முழு மனிதன் ஆக்கிவிட்ட ஆசானும் அவனே
முழு உலக அறிஞர்களின் ஆசானும் அவனே
காலை முதல் மாலை வரை கல்வியினை கற்பிக்கும் ஆசானும் அவனே
வாழ்நாளும் ஓய்வு பெற விரும்பமின்றி போதிக்கும் ஆசானும் அவனே
வளர்ந்து வரும் அறிஞர்கள் தேடிவரும் ஆசானும் அவனே
வாழ்நாளெல்லாம் அனைவரையும் வரவேற்கும் ஆசானும் அவனே
நூலகமே இவ்வுலகில் நிலைத்து நிற்கும் ஆசான் அவனாகும்.

சி.சிறீஸ்கந்தரசாசா
நூலகப் பொறுப்பாளர்
பொது நூலகம்
உப அலுவலகம்,
காங்கேசன்துறை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பாலின சமத்துவமும் மனித மகத்துவமும்

மனிதம் மலர்ந்திட வேண்டும்
மானிடம் மீண்டிட வேண்டும்
முனைந்து தேடிடு சமத்துவத்தை என்று
சங்கே முழங்கிட வேண்டும்.
இறைவன் படைத்தான் ஆணும் பெண்ணுமாய்,
மனிதர்கள் என்ற உருவங்களை.

உருவம் கொடுத்து உறவைத் தொடுத்து
ஓரினமாய் வாழ்ந்திட
உரிமை எனும் சமத்துவம் கொடுத்தான்
இறைவனின் அளப்பெரிய படைப்பினில்

ஆணுக்குப் பெண் பெண்ணுக்கு ஆண்
எனும் கருத்துடனே உருக்கொடுத்தான்
நல் சமத்துவ அன்புடனே அன்று

கல்வி, வேலை, பொது உடைமை
என்பவற்றில் யாவரும் சமமெனும்
நிலையே உண்மையானது, உரிமையானது
என்பதை மறந்தான் மனிதன்.

சாதி, மத, பேதம் யாவுமே மேன்மை என்று
பெண்ணினக் கொடுமையே
ஆண்மையை அலங்கரிக்கும் என்று
சிறைகொண்ட பறவையாய் தவிக்கலானான்
மனிதன். பாலின சமத்துவம் மறந்து

வன்முறைகளும், கொடுமைகளும், கொலைகளும்
கொதித்தெழுந்து, மனிதத்தை
மனிதமே நசுக்கிடும் நிலையே உருவாகி
பாலின சமத்துவமே தெறிகெட்டுப் போனதம்மா!
வன்மம் நிறைந்து தீண்டுதம்மா!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பாலின சமத்துவத்தை உணர்ந்து
மனிதத்தைப் புனிதமாக நினைந்து
இனிமையான நல் சமூகத்தை வனைந்து
மதிப்போம் சமத்துவத்தை விரைந்து
புதிய சமூகத்தினரின் சிறப்பை வரைந்து

ஒன்றே குலமென உரைத்து
உரிமை, சமத்துவத்தைப் பயிரென விதைத்து
சஞ்சலமின்றி பாலின சமத்துவம் ஓங்க
கூடி விரைந்து உழைத்திடுவோம்
புது ஒற்றுமையான சமூகம் படைக்க வழிசமைத்திடுவோம்

**முற்றும்**

செல்வி – தே. வாசுகி சுலக்ஸ்றீடாஜெசி
ஆசிரியர்.
யா/நடேஸ்வர கனிஷ்ட வித்தியாலயம்.

புத்தகத்தில் ஒளிர்வது ஞானத்தின் ஒளி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இளைஞரை விழுங்கும் போதை

மனிதம் என்பதற்காகவும்
மனித உரிமைக்காகவும்
மனித குலத்தை மீட்டிடவே
மாண்டனர் எம் இளைஞர்

மகளிரும் மானத்துடன்
மலரும் மொட்டுக்களும் மாந்தரும்
மனங்களும் மனக்கனவுகளை
நனவாக்கினர் இளைஞர் - அன்று

காட்டுரிமை நாட்டுப்பற்று
தன் இயல்பாய் தானெழுந்து
போராடி போராடித் தன்னுயிரை
தானிழந்தான் மாவீரனாய்.

என்ன பலம் என்ன துணிவு
என்னென்ன பாதுகாப்பு
பயம் என்ற சொல்லுக்கே - இடமில்லை
எம்மவர் பாதுகாப்பு அன்றைய
இளைஞன் கையில்

இன்றைய இளைஞனே! போதைக்குள் - நீ
மூழ்கி பாவத்தில் மூழ்கவைக்கிறாய் - உலகை
உடன் பிறந்தவளும் உன் போதைக் கண்ணுக்கு
காம வெறியாட்டம் ஆடுகிறாய்

ஒரு கருப்பைக்குள் இருந்து
ஒரு பால்முலைகளைக் குடித்த — நீ
போதைக்குள் வீழ்ந்ததும்
உடன்பிறந்தவளையே பலாத்காரம் செய்கின்றாய்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அன்னையைத் தெரியவில்லை
அண்ணனைத் தெரியவில்லை
அன்புத்தங்கையையும் தெரியவில்லை
ஆதரவான யாரையும் உனக்குத் தெரியவில்லை
ஏனென்றால் போதைக்குள் - நீ

தலைநரையைக் கண்ட
தசரதன் தன் நகரையே
தன் மகன் இராமனிடம் ஒப்படைத்தான்
அவனும் ஓர் இளைஞனே

வீடும் வீட்டுறுதியையும்
காணியையும் கடைதனையும் - ஏன்
கல்வியையும் காதலையும்
தாரை வார்க்கின்றாய் போதையிடம்

நீ விழுங்கவில்லை போதையை — உன்
வம்சத்தையே விழுங்குதடா
உன்னை மட்டுமல்ல — உனது
மானம் மாண்பு மாடம் மகிமை
எல்லாவற்றையும் விழுங்குதடா......?

திருமதி.அமித்தா.ஜெயசீலன்
ஆசிரியர் - யா/நடேஸ்வரக் கல்லூரி

**புத்தகம் சேமித்துப் பயனில்லை! புத்தகத்தில் உள்ளவை புத்தியில் சேமிக்கப்பட வேண்டும்!**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மரம் வளர்ப்போம்

மனிதனே சிந்திப்பாயா மரம் பற்றி......
மரம் வளர்க்க சொல்கிறேன் உன் கரம் பற்றி......

வறுத்தெடுக்கும் வானத்து சூரியனால்
வாடிப்போகிறது தேகங்கள்
கோடைக்கு இயற்கை மரங்கள் அன்றி
குளிர்சாதன செயற்கையை நீ நாடினால்
பக்க விளைவில் பாதிக்கப்பட்டு
பாழாய் போய்விடும் உன் உடல்!
உன் நலன் காக்கவும் உரிமையோடு
மரம் வளர்க்க சொல்லி நான்
வரைகிறேன் இந்த கவிதை மடல்!

மரம் வளர்ப்போம்......
மரமே நமக்கு கடவுளின் கொடை
வெயிலுக்கு இனி கையில் வேண்டாம் குடை
மரமே பூமியின் பசுமை ஆடை
மரம் இருந்தால் வதைக்குமா இந்த கோடை?

வியர்வையில் குளிக்காமல்
நம் சந்ததி தண்ணீரில் குளிக்க
மரங்களை வளர்த்து வைப்போம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கட்டடங்களை விட பூமியில் மர

விதைகளை அதிகம் விதைப்போம்......

இனியும் மரம் வளர்க்காமல்

சுயநல மனிதனாய் பூமியில் நீ

சுற்றி வந்தால் காணாமல் அழிந்து போவது

மரங்கள் மட்டும் அல்ல

வாட்டும் வெயில் தண்ணீர் பஞ்சத்தோடு

வறட்சியில் சிக்கப்போகும் உன்

வருங்கால சந்ததியும் தான்......

ஆக்கம் - க.கோபிகா

வலி வடக்கு பிரதேசசபை

உப அலுவலகம்,

காங்கேசன்துறை

**எழுத்துக்களின், எண்ணங்களின், சிந்தனைகளின்,**
**கற்பனைகளின் உரு வடிவம் புத்தகம்!**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# போதை ஒழிப்பு

உள்ளிழுக்கும் புகை அது!
கொள்ளி உனக்கு நீ இடுவது

அருந்தும் மதுவது
எமனுக்கு தூதது...

கஞ்சா போன்ற பொருளது
மரணத்திற்குத் தோதது...

தன்னிலை மறப்பது
தன்மானம் காற்றில் பறப்பது...

தடுமாறி வீழ்வது
தடம் மாறிப் போவது

பல குடும்பங்களைத் தவிக்க வைப்பது
உலகம் தூற்ற வைப்பது

போதையின் விளைவது
குற்றங்களுக்கு வழியது

பரிணாம வளர்ச்சியை
பொடிப் பொடியாக செய்வது

நொடிப்பொழுதில் மனிதனை
மிருகமாக்கி மகிழ்வது

போதை சாதனைகள்
படைக்குது...

வேதனையே மிஞ்சுது...
அறிஞர் உலகம் அஞ்சுது

போதை இல்லாத உலகம் பிறக்க
நல்லோருள்ளம் கெஞ்சுது!

ஜெ.ஜனனி
வலிவடக்கு பிரதேசசபை
உப அலுவலகம்
காங்கேசன்துறை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நூலகப் பாவனையின் முக்கியத்துவம்

1) நூலகத்திற்கு நூல் நிலையம், புத்தகசாலை, ஏடகம், வாசிகசாலை என பெயர்கள் உண்டு.
2) நூலகத்தின் தந்தை எனப்படுபவர் இந்தியாவைச் சேர்ந்த டாக்டர் எஸ்.ஆர்.ரங்கநாதன் ஆவார்.
3) நூலகத்தின் வகைகள் - அரசு பொது நூலகங்கள், சிறுவர் நூலகங்கள், தனியார் வணிக முறை நூலகங்கள், நடமாடும் நூலகங்கள் எனப் பிரிக்கப்பட்டுள்ளன.
4) நூலகத்திலுள்ள புத்தகங்களை படிப்பதால் நல்லறிவு, நல்லொழுக்கம் என்பன வளரும்.
5) "தொட்டனைத் தூறும் மணற்கேணி மாந்தர்க்கும் கற்றனைத் தூறும் அறிவு" இவ்வாறு நூலகத்தின் சிறப்பை திருவள்ளுவர் கூறுகின்றார்.
6) நிலத்தில் எந்த அளவிற்கு குழி தோண்டுகிறீர்களோ அந்த அளவிற்கு நீர்மட்டம் இருக்கும் அதேபோல் நூலகத்தில் நூல்களைக் கற்க கற்க அறிவு ஊற்றெடுக்கும்.
7) ஒரு மனிதன் எப்போது கால் பதிக்கிறானோ அப்போது அவன் அறிவில் வைத்த ஆயிரம் பேருக்கு கற்பிப்பதற்கு ஆளுமை உடையவனாகின்றான்.
8) அறிவைப் பெருக்கும் புத்தகங்கள் அனைத்தும் ஒன்று கூடும் இடம் நூலகமாகும்.
9) படித்த புத்தகத்தை முடிக்க வேண்டும் என்பதற்காக தனது அறுவைச் சிகிச்சையை அடுத்த நாள் மாற்றி அமைத்தார் அறிஞர் அண்ணா என்றால் நூலகத்தின் பெருமை அளப்பரியது.
10) படித்தால் மட்டும் நாடாள முடியும் என்பதை படித்துப் படித்துச் சொன்னார் டாக்டர் ஏ.பி.ஜே.அப்துல்கலாம்.

**நன்றி**

**க.சாந்தனு**
**தரம் - 05**
**யா/தையிட்டி கணேச வித்தியாசாலை**

**டிஜிட்டல் நூலகம் என்பது கடந்தகாலத்தை நிகழ்காலத்தை சந்தித்து எதிர்காலத்தை உருவாக்குகின்றது.**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நூலகப் பாவனையின் முக்கியத்துவம்

1) "நூலளவே ஆகுமாம் நுண்ணறிவு" என்று ஔவையார் மூதுரையில் அழகாகக் கூறியுள்ளார்.
2) நம் நாட்டில் கிராமம் முதல், நகர்ப்புறங்களிலும் நூலகங்கள் பல காணப்படுகின்றன.
3) நூலகம் அறிவை வளர்க்கும் ஓர் அதிசய இடமாகும்
4) நூலகங்கள் பொதுவாக அமைதியான சூழலைக் கொண்டு காணப்படும்
5) "கோயில் இல்லாத ஊரில் குடியிருக்க வேண்டாம்" என்பதைப் போல நூலகம் இல்லாத ஊரும் பொலிவிழந்தே காணப்படும்.
6) இந்த உலகத்திலுள்ள ஒவ்வொரு அறிஞர்களையும் உருவாக்க மூல காரணம் நூலங்கள்
7) எமக்கு அறிவுரை கூறுவதில் பெற்றோர்களுக்கும் மேலாக உயர்ந்த நிற்கின்றன நூலகங்கள்.
8) நமது அறிவை வளர்ப்பதற்கும், வாசிப்பைச் சரளமாக்குவதற்கும் நூலகம் எமக்கு உதவுகின்றது.
9) சிறுவர்கள் முதல் பெரியோர்கள் வரை நூலகத்தைப் பயன்படுத்திப் பல நன்மைகளைப் பெற்று வருகின்றனர்.
10) நூல்களால் வெறுமனே கல்வியறிவை மட்டும் வழங்காமல் எம்மைச் சுற்றி உள்ள சமூகத்தின் போக்குகள் பற்றியும் அறிய உதவுகின்றன.
11) நூல்கள் திறமை இல்லாதவர்களைக் கூட திறமைசாலியாக மாற்றிவிடும் வல்லமை பெற்றது.
12) தேனிருக்கும் இடத்தை நாடிச் செல்லும் வண்டு போல் நாமும் நூல் இருக்கும் இடத்தை நாடிச் சென்று கற்றுப் பயன் பெறுவோம்.

நன்றி

சு.ஜீவஆரோனியா

தரம் - 05

யா/ஊறணி கனிஷ்ட வித்தியாலயம்

புத்தகம் பேசும் மொழி நல்ல வாசகனுக்கு மட்டும் தெரியும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# என் அம்மாவுக்கு

உனக்கு ஒரு கவிதை எழுதினேன்
வாசிக்கவா! உன்னை நேசிக்கவா!
காற்றை சுவாசிக்கவா! உண்மை பேசட்டுமா!
காற்று வீசட்டுமா! கடலலை கரையை மோதட்டுமா!
பூக்கள் மலரட்டுமா! குயில்கள் இசைக்கட்டுமா!
மயில்கள் ஆடட்டுமா! நான் உனக்கொரு கவிதை யோசிக்கட்டுமா!
நன்றியுரை கூறட்டுமா!
கண்ணை இமை காப்பது போல
என்னைக் காப்பது நீ தான் அம்மா
நான் இருக்கும் இடமெல்லாம் காற்று
இருப்பது போல காற்றோடு கலந்து
என்னுடன் இருப்பது நீ அம்மா!
உன் கண்மணி என் இதயத்தைக் கவர்ந்ததம்மா
உயிர் வாழ்வதற்கு காற்று போல
இவ்வுலகில் வாழ்வதற்கு அம்மா போதும்
கண்ணுக்குள் கண்மணி
எனக்குள் நீயம்மா
வேர் இல்லையெனில் மரம் இல்லை
காய் இல்லையெனில் கனி இல்லை
அம்மா இல்லையெனில் இன்று நான் இல்லை
வீரத்துடன் பல விழுமியங்களை கற்றுத்தந்து கல்வியை
மெருகூட்டி என்னை வெற்றி பெறச் செய்தாயே என்
அன்னையே காலம் முழுவதும் உன் நேசத்தை
மதிப்பேன் அம்மா என் ஆருயிரே!

சி.அனுஸ்கவி
தரம் - 06
யா/மகாஜனக் கல்லூரி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பெரியோரை கனம் பண்ணுவோம்

1) முதியோர்கள் எமது நாட்டின் சொத்துக்கள் எனப் போற்றப்படுகின்றனர்.
2) அவர்கள் தமது வாழ்க்கையில் பல் அனுபவங்களைப் பெற்று எம்மை வழி நடத்துகின்றார்கள்.
3) முதியோரின் அறிவுரைகளைக் கேட்டு நாம் நல்வழியில் நடந்து அவர்களை மகிழ்விக்க வேண்டும்.
4) சிறியவர்கள் ஆகிய நாம் முதியோரைக் கனம் பண்ணுதல் வேண்டும்.
5) நாமும் ஒருநாள் முதியோராவோம் என்ற எண்ணத்துடன் பண்பாகப் பழகுதல் வேண்டும்
6) முதியோரின் தேவைகள் விருப்புக்களை நிறைவேற்றி அவர்களின் ஆசிகளைப் பெற்று வாழ்வது சிறப்பாகும்.
7) பெரியோரை மதிப்பது எமது தலையாய கடமையாகும்.
8) மூத்தோர் சொல் வார்த்தை அமிர்தம் என்ற கூற்றுக்கு இணங்க அவர்கள் சொற்படி நடத்தல் மிகவும் முக்கியமானதாகும்.
9) மாதா, பிதா, குரு, தெய்வம் போன்றவர்கள் எமது கண் கண்ட தெய்வங்களாகும்.
10) நாம் தினமும் முதியோரிடம் ஆசீர்வாதம் வேண்டுவது சிறந்த நல்ல பழக்கமாகும்.

**கி.கிரிஷாந்**

**யா/வீமன்காமம் மகாவித்தியாலயம்**

**"எனது நூலகமே எனக்கு போதிய பெருச்செல்வமாகும்"**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நூலகப் பாவனையின் முக்கியத்துவம்

1) "வாசிப்பதனாலேயே மனிதன் பூரணமடைகிறான்" என்பது சான்றோர் வாக்காகும்.
2) மனிதன் தன் அறிவை விருத்தி செய்ய அடிப்படையாக அமைபவை நூல்களாகும்.
3) இப்படிப்பட்ட பல நல்ல நூல்களை வழங்கும் இடமாக நூலகம் காணப்படுகிறது.
4) நாலு, ஐந்து வீதிகளுக்கேனும் ஒரு நூலகம் வேண்டும் என்கிறார் - பாரதிதாசன்
5) நூல்களை விட சிறந்த நண்பர்கள் எவருக்கும் கிடையாது என்று பல அறிஞர்கள் கூறியுள்ளனர்.
6) மனிதன் தன் அறிவைப் பெருக்குவதற்கு நூலகம் உதவுகின்றது.
7) ஆராய்ச்சி விடயங்கள்/பட்டப்படிப்பு, பண்டைய கால கலாசார அம்சங்கள், வரலாறு போன்றவற்றை கற்றறிய நூலகம் வசதி செய்கின்றது.
8) நூலகப் பாவனை அறிவை விருத்தி செய்யும் வகையாகவும் பொழுதுபோக்கு அம்சமாகவும் காண்படுகின்றது.
9) நூலகப் பாவனையின் அவசியத்தை விளக்குவதற்காகவே இலங்கையில் வாசிப்பு மாதம் நடைமுறைப்படுத்தப்படுகிறது.
10) நூலகப் பாவனை மூலம் நல்லறிவைப் பெற்று நாட்டில் நல்லதொரு சமுதாயத்தை உருவாக்கிக் கொள்ள முடியும்.
11) நூலகப்பாவனை சிறியோர் முதல் பெரியோர் வரை அனைவருக்கும் அவசியமான ஒன்றாக காணப்படுகிறது.
12) எமது கல்விக்குத் தேவையான விடயங்களை நூலகத்திலே தேடி ஆர்வத்துடன் படிக்க முடியும்.
13) நூலகம் என்பது ஒரு பூஞ்சோலை அதிலுள்ள நூல்கள் ஒவ்வொன்றும் தீங்கனிகள் நூலகம் என்பது ஒரு தேன்கூடு அதிலுள்ள நூல்கள் ஒவ்வொன்றும் தேன்துளிகள்.

**அ.அக்சயா**

**தரம் - 04**

**யா/ஊறணி கனிஷ்ட வித்தியாலயம்**

**நூல்கள் இல்லாத வீடு சாளரம் இல்லாத வீடு**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நூல் பற்றிய பொன்மொழிகள்

1) எந்த வீட்டில் நூல்நிலையம் இருக்கின்றதோ அந்த வீட்டில் தான் ஒளிவிளக்கு இருக்கிறது.
2) ஒரு நூலகத்தையும் ஒரு தோட்டத்தையும் வைத்திருக்கும் ஒருவருக்கு வேறெதுவும் தேவையில்லை
3) நூலகங்கள் திறமை இல்லாதவர்களை கூட திறமைசாலிகளாக மாற்றிவிடும்
4) நூலகம் ஒரு மாயக்கூடம் அங்கு பலவகை ஆவிகள் உலாவுகின்றன.
5) ஒரு புத்தகத்தை எழுத நீங்கள் பாதி நூலகத்தை படிக்க வேண்டும்.
6) பல நூற்றாண்டின் அறிஞர்கள் அனைவரும் கூடியிருக்கும் மாளிகை தான் நூலகம் இனிவரும் அறிஞர்களுக்காக அந்த மாளிகையின் கதவுகள் திறந்தே இருக்கின்றன.
7) உயர்ந்த சிந்தனைகளை நமது முன்னோர்கள் பரம்பரையாக சேமித்த கருவூலங்கள் தான் புத்தகங்கள் அவைகள் தமக்கு காலக்கண்ணாடியாக காட்சியளிக்கும்.
8) பழங்காலத்திய பெரும் சிந்தனையாளர்களை நேரில் தரிசித்து அவர்களுடன் உரையாட வேண்டுமா? நூலகத்திற்கு போ.
9) நூலகம் எனும் நண்பன் இருந்தால் அறிவு, ஆற்றல், பண்பு இவையெல்லாம் சிறக்கும் படைக்கும் ஆற்றல், படிக்கும் ஆற்றல் பெருகும்.
10) நூலகத்தின் படியேறி உள்ளே சென்று கற்றால் இவ்வுலகும் உன்னிடத்தில் தோற்கும்.
11) நூலகம் என்பது நண்பன் மட்டுமல்ல காதலும் கூட.... அதனால் தான் யார் வந்தாலும் மௌனத்துடன் கண்களால் பேசுகிறார்கள்.
12) பெண்கையை பிடித்து கண்ட இடம் சுற்றாமல் நூலகத்தின் கையை பிடித்து உள்ளே சென்றால் காணாத உலகத்தையும் காணமுடியும்.
13) நீங்கள் மனசார்பிலும், மன அழுத்தத்திலும் இருக்கும் போது நூலகத்திற்கு சென்றால் நீங்கள் மன அமைதியையும் மன தெளிவையும் பெற முடியும்.
14) உலகில் சாகாவரம் பெற்றவை என்று ஒன்றைத்தான் சொல்ல முடியும். அவை புத்தகங்கள்.
15) நல்ல அறிவுரைகளை சொல்வதில் பெற்றோருக்கும் மேலாக உயர்ந்து நிற்கின்றன நூலகங்கள்.
16) கவர்ந்து இழுப்பதில் காதலியை போல் காத்திருக்கின்றன நூல்கள்.
17) நூலகங்கள் உலகின் இரண்டாம் உலகம்
18) நல்லவர்களையும், வல்லவர்களையும் போற்றும் இடம் நூலகம் மறைந்த மாமனிதர்களையும் நினைவூட்டும் இடம் நூலகம்
19) ஜாதி மதம் பார்க்காமல் அனைவரும் சமத்துவமாய் கூடும் இடம் நூலகம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

20) நூலகத்தில் சரிந்து கிடக்கிறது புத்தகங்கள். எப்பொழுதும் வாழ்க்கையின் நிமிர்ந்து நின்றவர்களின் வரலாறு

21) உலகத்தில் தனித்து இருக்க வேண்டும் என்று உன்னிடம் வந்தேன் ஆனால் உலகமே இங்குதான் இருக்கு என புரிந்து கொண்டேன் நூலகம் எனும் வடிவில்

22) ஆயிரமாயிரம் பொக்கிஷங்கள் உள்ளே இருந்தாலும் மூடிக் கொண்டு அமைதியாகத்தான் இருக்கின்றது நூலகங்கள்

23) ஒரு கோடி ருபாய் கிடைத்தால் என்ன செய்வீர்கள் என்று கேட்ட போது "நூலகம் கட்டுவேன்" என்கிறார் காந்தி.

24) அன்று எது தேவையென்று தேடினோம் நூலக்தை. இன்று எது தேவையென்று தேடுகிறோம் வலைத்தளத்தை.

25) அறிவை பெருக்கும் கருவிகள் நூலகங்களில் தான் அதிகம் நிறைந்திருக்கின்றன.

26) நல்ல புத்தகமே சிறந்த நண்பன். உதவி தேவையான போதெல்லாம் நண்பர்களை நாடிச் செல்வது போல துணை வேண்டும் பொதெல்லாம் நூலகங்களை நாடிச் செல்ல வேண்டும்.

**வாசிப்பதன் மூலம் மனம் திறந்து விரிவடையாமல் விட்டால் அந்த மனிதனால் எப்படி நல்ல தீர்ப்பளிக்க முடியும்**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தேசிய வாசிப்பு மாதம் -2022
# காங்கேசன்துறை பொது நூலகத்தினால் நடாத்தப்பட்ட
# நிகழ்வுகளின் பதிவுகள்














Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தேசிய வாசிப்பு மாதம் -2022
# காங்கேசன்துறை பொது நூலகத்தினால் நடாத்தப்பட்ட நிகழ்வுகளின் பதிவுகள்














Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தேசிய வாசிப்பு மாதம் -2022
# காங்கேசன்துறை பொது நூலகத்தினால் நடாத்தப்பட்ட
# நிகழ்வுகளின் பதிவுகள்




Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தேசிய வாசிப்பு மாதம் -2022
# காங்கேசன்துறை பொது நூலகத்தினால் நடாத்தப்பட்ட
# நிகழ்வுகளின் பதிவுகள்









Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தேசிய வாசிப்பு மாதம் -2022
# காங்கேசன்துறை பொது நூலகத்தினால் நடாத்தப்பட்ட
# நிகழ்வுகளின் பதிவுகள்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

காங்கேசன் முரசு - 03 சிறப்பு மலர் வெளியிடுவதற்கு

முழு அனுசரணை வழங்கியோர்


தே.சோதிப்பிள்ளை அறக்கட்டளை

T.Sothippillai Foundation

நிறுவுனர் : திரு.திருமதி.தே.ஜெயபாலசிங்கம் குடும்பம்

தொ.இல - 0776006543 சேகரம் வீதி, தையிட்டி, காங்கேசன்துறை

காங்கேசன்துறை அபிவிருத்தி சங்கம்


KANKESANTHURAI DEVELOPMENT SOCIETY

REGISTER NO : JF/VN/VOL/2016/32

தொ.இல -077 2335254 பிரதான வீதி காங்கேசன்துறை


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வலிகாமம் வடக்கு பிரதேசசபையின் தலைமை அலுவலகத்தில் பெற்றுக்கொள்ளக்கூடிய சேவைகள்

| இல | சேவைகள் | சமர்ப்பிக்கப்பட வேண்டிய ஆவணங்கள் |
|---|---|---|
| 01 | சபை வீதியில் கனரக வாகனங்களை பயன்படுத்தல் (சுண்ணக்கல் ஏற்றிச்செல்லல்) | 1.காணியின் நில அளவை வரைபடம்<br>2.காணியின் உறுதி<br>3.கனியவளத் திணைக்களத்தின் அனுமதிக்கடிதம்<br>4.காணி உரிமையாளரின் சம்மதக்கடிதம்<br>5.கனரக வாகனத்தின் பதிவு சான்றிதழின் பிரதி |
| 02 | திரவக்கழிவு சுத்திகரிப்பு வாகனம் சேவைக்கு அமர்த்தல | 1.பூரணப்படுத்தப்பட்ட விண்ணப்ப படிவம்<br>2.தேசிய அடையாள அட்டை பிரதி |
| 03 | நீர் வழங்கல் சேவை | 1.பூரணப்படுத்தப்பட்ட விண்ணப்ப படிவம்<br>2.தேசிய அடையாள அட்டை பிரதி |
| 04 | திண்மக்கழிவகற்றல் வாகனம் சேவைக்கு அமர்த்தல் | 1.பூரணப்படுத்தப்பட்ட விண்ணப்ப படிவம்<br>2.தேசிய அடையாள அட்டை பிரதி |
| 05 | மோட்டர் கிறைண் சேவைக்கு அமர்த்தல் | 1.பூரணப்படுத்தப்பட்ட விண்ணப்ப படிவம்<br>2.தேசிய அடையாள அட்டை பிரதி |
| 06 | றோலர் சேவைக்கு அமர்த்தல | 1.பூரணப்படுத்தப்பட்ட விண்ணப்ப படிவம்<br>2.தேசிய அடையாள அட்டை பிரதி |
| 07 | JCB வாகனம் சேவைக்கு அமர்த்தல | 1.பூரணப்படுத்தப்பட்ட விண்ணப்ப படிவம்<br>2.தேசிய அடையாள அட்டை பிரதி |
| 08 | பட வரைஞர்களை பதிவு செய்தல் | 1.விண்ணப்பதாரியின் கோரிக்கை கடிதம்<br>2.பூரணப்படுத்தப்பட்ட விண்ணப்ப படிவம்<br>3.விண்ணப்பதாரியின் தே.அ.அ பிரதி<br>4.விண்ணப்பதாரியின் தகுதிச்சான்றிதழ்கள் |
| 09 | சனசமூக நிலையங்களை பதிவு செய்தல | 1.பூர்த்தி செய்யப்பட்ட விண்ணப்பபடிவம்(அ,ஆ)<br>2.நிலையத்தினை அணுகுவதற்கான வரைபடம்<br>3.பதிவு செய்வதற்கான கோரிக்கை கடிதம்<br>4.நிலையத்திற்கான காணி உரிமை பற்றிய சட்டரீதியான ஆவணம்<br>5.நிலைய அங்கத்தவர்களின் பெயர்பட்டியல்<br>6.இறுதியாக நடைபெற்ற பொதுக்கூட்டஅறிக்கை<br>7.நிர்வாக குழு உறுப்பினர் விபரம்<br>8.6மாதங்களிற்கான நிர்வாக கூட்டஅறிக்கைகள் |
| 10 | வழங்குநர்களை பதிவு செய்தல | 1. பூரணப்படுத்தப்பட்ட விண்ணப்ப படிவம்<br>2. வியாபார அனுமதிப்பத்திரப்பிரதி<br>3. வியாபார பதிவுச்சான்றிதழ் பிரதி |

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# எமது சபையின் உப அலுவலகங்களில் பெற்றுக்கொள்ளக்கூடிய சேவைகள்

| | | |
|---|---|---|
| 01 | கட்டட அனுமதி பெறல் | **1.கட்டட விண்ணப்ப படிவம்**<br>படிவம் பூரணப்படுத்தப்பட்டு விண்ணப்பதாரியின் ஒப்பத்துடன் சாட்சிகள் இருவரின் ஒப்பமும் இடப்பட்டு சமர்ப்பிக்கப்பட வேண்டும்.<br>**2.கட்டட வரைபடங்கள்**<br>எமது சபையில் பதிவு செய்யப்பட்ட படவரைஞரால் வரையப்பட்டு உறுதிப்படுத்தப்பட்ட கட்டட வரைபடங்கள் 3 சமர்ப்பிக்கப்பட வேண்டும்.<br>**3.நில அளவை வரைபடம்**<br>காணி உறுதியில் குறிப்பிடப்பட்டிருக்கும் இலக்கத்தை உடைய நிலஅளவை வரைபடம்<br>**4.உறுதி**<br>காணியின் உறுதி<br>**5.தோம்பு**<br>காணி உறுதிக்குரிய தோம்பு<br>**6.சோலை வரி பற்றுச்சீட்டு**<br>ஆதனத்திற்கு சபையில் சோலைவரி செலுத்தியமைக்கான பற்றுச்சீட்டு<br>❖ எல்லைமதிலாயின் எல்லைக்காரரது சம்மதக்கடிதம் கிராமசேவகரால் கையொப்பத்தினை உறுதிப்படுத்தி சமர்ப்பிக்கப்பட வேண்டும்.<br>❖ விண்ணப்பதாரியின் ஆதனம் ஆதனவரி பதிவேட்டில் விண்ணப்பதாரியின் பெயரில் பதிவு செய்யப்பட்டிருத்தல் வேண்டும்.<br><br>விண்ணப்பதாரி ஆதன உரிமையாளர் இல்லாதவிடத்து ஆதன உரிமையாளரிடமிருந்து முறையான அற்றோனித்தத்துவம் (Power of Attorney) பெறப்படல் வேண்டும். |
| 02 | ஆதனப்பெயர் மாற்றம் செய்தல் | **1.பூரணப்படுத்தப்பட்ட விண்ணப்பப்படிவம்**<br>(பிரசித்த நொத்தாரிஸினால் நிரப்பி உறுதிப்படுத்தப்பட வேண்டும்)<br>**2.உறுதிகள்**<br>(சபையின் ஆதனவரிப்பதிவேட்டில் காணப்படும் பெயரில் இருந்து பெயர்மாற்றத்திற்கு விண்ணப்பிப்பவரின் பெயர் வரையான உறுதிகளின் உறுதிப்படுத்திய நிழற் பிரதிகள்)<br>**3.தோம்புகள்**<br>(சபையின் ஆதனவரிப்பதிவேட்டில் காணப்படும் பெயரில் இருந்து பெயர்மாற்றத்திற்கு விண்ணப்பிப்பவரின் பெயர் வரையான |

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

| | | |
|---|---|---|
| | | உறுதிகளிற்குரிய சுருக்க பிரதிகளின் உறுதிப்படுத்திய நிழற் பிரதிகள்)<br>4. **நில அளவை வரைபடம் (Surveyor Plan)** (காணியின் நிலஅளவை வரைபடத்தின் உறுதிப்படுத்தப்பட்ட நிழற்பிரதி)<br>**மேலதிகமாக தேவைப்படும் ஆவணங்கள்**<br>• உறுதியானது தத்துவச் சான்றிதழ் (Attorney Power) மூலம் எழுதப்பட்டிருப்பின் அதன் மூலப்பிரதியும் உறுதிப்படுத்தப்பட்ட நிழற்பிரதியும் சமர்ப்பிக்கப்பட வேண்டும்.<br>• கச்சேரி காணிப்பதிவகத்தில் உறுதிகள், தோம்புகள் இல்லையெனில் காணிப்பதிவாளரால் பதிவு அழிந்துள்ளதாக உறுதிப்படுத்தப்பட்ட கடிதம் சமர்ப்பிக்கப்பட வேண்டும்.<br>• ஆதனவரிப்பதிவேட்டில் உள்ள பெயரிற்கும் உறுதியில் உள்ள பெயரிற்கும் இடையில் வேறுபாடு காணப்படின் சரியான பெயரை குறிப்பிட்டு சத்தியக்கூற்று சமர்ப்பித்தல் வேண்டும்.<br>• ஆதனமானது நெற்பரப்பாயின் விவசாய திணைக்களத்தினால் ஆதன உரிமைமாற்றம் செய்வதற்கான சம்மதக்கடிதம் சமர்ப்பிக்கப்பட வேண்டும்.<br>வங்கியில் ஈட்டில் இருப்பின் வங்கியிலிருந்து ஆதன உரிமைமாற்றம் செய்வதற்கான சம்மதக்கடிதம் பெற்றுத்தரல் வேண்டும். |
| 03 | கட்டடங்களிற்கான குடிபுகுதல் சான்றிதழ் பெற்றுக்கொள்ளல் | • பூரணப்படுத்தப்பட்ட விண்ணப்ப படிவம்<br>• ஆதனத்தின் உறுதி<br>• ஆதனத்தின் நில அளவை வரைபடம்<br>• தோம்பு<br>கட்டட விண்ணப்ப அனுமதி கடிதம் மற்றும் வரைபடம் |
| 04 | ஆதன உடமைச்சான்றிதழ் எல்லைக்கோட்டுச்சான்றிதல் சுவீகரிக்கப்படாமைக்கான சான்றிதழ் பெறல் | **1.பூரணப்படுத்தப்பட்ட விண்ணப்ப படிவம்**<br>**2.நில அளவை வரைபடம்**<br>காணி உறுதியில் குறிப்பிடப்பட்டிருக்கும் இலக்கத்தை உடைய நிலஅளவை வரைபடப் பிரதி<br>**3.உறுதி**<br>விண்ணப்பதாரியின் பெயரிலுள்ள காணி உறுதியின் நிழற்படப்பிரதி<br>**4.தோம்பு** |

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org


| | | |
|---|---|---|
| | | விண்ணப்பதாரியின் காணி உறுதிக்குரிய தோம்பு<br>**5.சோலை வரி பற்றுச்சீட்டு**<br>ஆதனத்திற்கு சபையில் சோலைவரி செலுத்தியமைக்கான பற்றுச்சீட்டு<br>❖ விண்ணப்பதாரி ஆதன உரிமையாளராக இருப்பின் ஆதனம் எமது பதிவேட்டில் விண்ணப்பதாரியின் பெயரில் பதிவு செய்யப்பட்டிருத்தல் வேண்டும்.<br>❖ விண்ணப்பதாரி ஆதன உரிமையாளர் இல்லாதவிடத்து ஆதன உரிமையாளரிடமிருந்து முறையான அற்றோனித்தத்துவம் (Power of Attorney) பெறப்படல் வேண்டும். |
| 05 | கட்டட விண்ணப்பம் கால நீடிப்பு செய்தல் | • பூரணப்படுத்தப்பட்ட விண்ணப்ப படிவம்<br>• அனுமதிக்கப்பட்ட கட்டட விண்ணப்ப வரைபடத்தின் பிரதி |
| | காணி உப பிரிவிடுகை மற்றும் ஒருங்கிணைப்பு | 1. பூரணப்படுத்தப்பட்ட விண்ணப்ப படிவம்<br>2. உறுதி<br>3. தோம்பு<br>4. நில அளவை வரைபடம் (மூலப்பிரதி – 2)<br>5. தேசிய அடையாள அட்டை பிரதி<br>6. சோலை வரி பற்றுச்சீட்டு |
| 06 | சுற்றுச்சூழல் அனுமதிப்பத்திரம் புதிதாக பெறல் மற்றும் புதுப்பித்தல் | ▶ பூரணப்படுத்தப்பட்ட விண்ணப்படிவம்<br>▶ காணி உறுதி அல்லது ஒப்பந்த பிரதி<br>▶ **இட அமைவு வரைபடம்**<br>▶ **வியாரபார** அனுமதிப் **பத்திரம்**<br>▶ **கட்டட வரைபட** அனுமதி |
| 07 | வியாபார வரி / வியாபார உரிமப்பத்திரம் பெறல் | ▶ **பூரணப்படுத்தப்பட்ட விண்ணபடிவம்**<br>▶ வியாபாரத்தின் தன்மைக்கேற்ப **தேவை ஏற்படின்** சுற்றுச்சூழல் **அனுமதிப்பத்திரம்**<br>▶ வியாபார ஸ்தாபனம் அமைந்துள்ள **ஆதன உரிமையாளரின் சம்மதக் கடிதம்** அல்லது குத்தகை உடன்படிக்கை |
| 08 | விளம்பர பதாகைகள் வைத்தல் | ➢ விண்ணப்ப படிவம் (விளம்பரப் பலகையின் அளவு ,விளம்பரப் பலகையின் விபரம்)<br>• விளம்பரப்பலகை அமைக்க உள்ள இடத்தின் வரைபடம் உள்ளடங்கிய கோரிக்கைக் கடிதம் |
| 09 | நூலக அங்கத்தவராக இணைதல் | பூரணப்படுத்தப்பட்ட அங்கத்துவ விண்ணப்ப படிவம்<br>(கிராமசேவையாளர் உறுதிப்படுத்தல் , சோலை வரி செலுத்துபவரின் பிணை) |
| 10 | நாய் உரிமம் பெற்றுக்கொள்ளல் | ❖ விண்ணப்ப படிவம் |

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

| | | |
|---|---|---|
| | | (உரிமையாளரின் பெயர் , நாயின் பெயர் மற்றும் இனம்) |
| 11 | துவிச்சக்கர வண்டி உரிமம் பெற்றுக்கொள்ளல | ❖ விண்ணப்ப படிவம் (துவிச்சக்கரவண்டியின் வகை, இலக்கம்)<br>❖ ஆள் அடையாளப்பத்திரப்பிரதி |
| 12 | முச்சக்கர வண்டி தரிப்பிட அனுமதி | ❖ பூரணப்படுத்தப்பட்ட விண்ணப்ப படிவம்<br>❖ சாரதி அனுமதி பத்திரம்<br>❖ காப்புறுதி அனுமதிப்பத்திரம்<br>❖ வரி அனுமதிப்பத்திரம்<br>❖ முச்சக்கரசண்டி உரிமையாளர் சங்கத்தில் பதிவு செய்தமைக்கான சான்றிதழ் |
| 13 | இறந்த உடல்களை தகனம் செய்தல | ❖ பூரணப்படுத்தப்பட்ட விண்ணப்ப படிவம்<br>❖ கிராம சேவையாளரினால் அல்லது வைத்திய அதிகாரியினால் உறுதிப்படுத்தப்பட்ட கடிதம் |
| 14 | பொது நோக்கு மண்டபத்தை வாடகைக்கு பெறல | ❖ கோரிக்கை கடிதம்<br>❖ கட்டண செலுத்தியமைக்கான பற்றுச்சீட்டு |

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# இதயம் கனிந்த நன்றிகள்

**"எந்நன்றி கொன்றார்க்கும் உய்வுண்டாம் உய்வில்லை
செய்ந்நன்றி கொன்ற மகற்கு"**

என்ற திருவள்ளுவர் வாக்கிற்கிணங்க காங்கேசன்துறை மண்ணில் அறிவுசார்ந்த வாசிப்பு பழக்கத்தை மக்களிடையே மேற்கொள்ளும் முகமாக வருடந்தோறும் வெளிவரும் "காங்கேசன் முரசு" என்ற நூலிற்கு ஆசியுரை வாழ்த்துரைகளை தந்துதவிய ஆலயக்குருக்கள், கௌரவ தவிசாளர், மதிப்புக்குரிய செயலாளர் உப அலுவலகப் பொறுப்பதிகாரிக்கும் மனமார்ந்த நன்றிகள். இவ் நூலை வெளியிடுவதற்கான பொறுப்பைச் சிரமேற்கொண்டு பணியாற்றிய உப அலுவலகப் பொறுப்பதிகாரி, சக உத்தியோகத்தர்கள் மற்றும் நூலகப் பொறுப்பாளர் சக ஊழியர்களுக்கும் மனமார்ந்த நன்றிகள். பாடசாலைகளில் நிகழ்ச்சிகளை நடத்துவதற்கு அனுமதியளித்த வலிகாமம் வலயக்கல்விப்பணிப்பாளர் அவர்களுக்கும் , அனைத்துப் பாடசாலை அதிபர்கள், ஆசிரியர்கள், மாணவர்களுக்கும் இவ் நூலை வெளியிடுவதற்கு ஆக்கங்களைத் தந்து உதவிய அனைத்து ஆசிரியர்கள், மாணவர்கள், உத்தியோகத்தர்கள், ஊழியர்கள், நூலக ஆலோசனைக்குழு உறுப்பினர்களுக்கும் மனமார்ந்த எமது நன்றிகள்.

காங்கேசன் முரசு 03 மலர் வெளியிடுவதற்கு அனுசரணை வழங்கிய சோதிப்பிள்ளை அறக்கட்டளை –காங்கேசன்துறை மற்றும் காங்கேசன்–துறை அபிவிருத்திச் சங்கத்தினருக்கும் எமது மனமார்ந்த நன்றிகள். தேசிய வாசிப்பு மாத நிகழ்விற்கு பண உதவி வழங்கிய ர.சொக்கலிங்கம், சி.பிரதாப், மா.ஜீவராஜாவிற்கு மனமார்ந்த நன்றிகள். இந்நூலை அழகுற வெளியிட்டுத் தந்த சந்நிதியான் பிறிண்டேர்ஸ் நிறுவனத்தினருக்கும், இவ்விழா சிறப்புறவும் இனிது நிறைவு எய்தவும் கலந்துகொண்ட அனைத்துப் பெரியோர்கள், சிவாச்சாரியார், கல்விமான்கள், பெற்றோ–ரார்கள், மாணவர்கள், வலிவடக்கு பிரதேசசபை கௌரவ உறுப்பினர்கள் அனைவருக்கும் நன்றிகள். இறுதியாக காங்கேசன் முரசு வெளியிடுவ–தற்க்கும் வெளியீட்டு விழா சிறப்புற அமையவும் நேரடியாகவும் மறைமு–கமாகவும் உதவிய அனைத்து உள்ளங்களுக்கும் வலிகாமம் வடக்கு பிரதேச சபை சார்பாகவும் மற்றும் காங்கேசன்துறை உப அலுவலகம் பொது நூலகம் காங்கேசன்துறை சார்பாகவும் மனமார்ந்த நன்றிகளை தெரிவித்துக் கொள்கின்றோம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org